திருவருட்பிரகாச வள்ளலார்

# திருவருட்பா விரிவுரை

## மகாதேவ மாலை (முற்பகுதி)

ஏழாம் புத்தகம்

விரிவுரை ஆசிரியர்:

குகத்திரு ரஸபதி அடிகள்

This e-book can be downloaded for free from
http://www.vallalar.org

வெளியிருவோர்:
வடார்க்காடு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
(பதிவு 52/1966)
வி. கே. விநாயக முதலியார் கல்யாண மண்டபம்
வேலூர், வடார்க்காடு மாவட்டம்.

## பதிப்புரை

திருவருள் தூண்டுதலால், திருவருட்பா ஆறு திருமுறைகளுக்கும் பகுதி பகுதியாக 72 வெளியீடுகளில் விரிவுரை வெளியிட முயன்றோம். அதன் பயனாக இதுவரையில் வெளிவந்தவை ஆறு. ஏழாவதாக இம் மகாதேவ மாலை முற்பகுதி விளக்கவுரை வெளி வருகின்றது.

திருவருட்பா முதல் திருமுறையில் முதற் பகுதியான திருவடிப் புகழ்ச்சி இறைவன் உண்மை நிலையையும் (சத்) நடுப் பகுதியான இம் மகாதேவ மாலை இறைவன் அறிவு நிலையையும் (சித்) கடைசிப் பகுதி, இங்கித மாலை இறைவனது இன்ப நிலையையும் (ஆநந்தம்) விளக்குகிறதென்றால் மிகையாகாது.

"சத்தாகி சித்தாகி இன்பமாகி சதாநிலையாய்
எவ்வுயிர்க்கும் சாட்சியாகி" என்றும்

"மாட்சியே உண்மைஅறி வின்ப மென்ன வயங்குகின்ற வாழ்வே" என்றும்

மகாதேவ மாலையில் வள்ளற் பெருமான் குறிக்கின்றார்.

சன்மார்க்க விருப்பமுடையவர்கள் திருவடிப் புகழ்ச்சி, மகாதேவ மாலை, அருட் பெருஞ்ஜோதி அகவல் இவைகள் மூன்றையேனும் ஓதி உணர்வார்களாயின் திருவருட் பெயனை உறுதியாகப் பெறுவர். வடலூர் சத்திய தரும சாலையில் இம்மூன்றும் ஓதப் பெறுவதே சான்று.

இவ்வுரை தமிழறிவு சிறிது உள்ளவர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் எழுதி யுதவிய உரையாசிரியர் **குகத்திரு இரசபதி** அடிகளாருக்கு எம் நன்றி.

சன்மார்க்க அன்பர்கள் எமது முந்தைய வெளியீடுகளைப் பெற்றுப் பயன் அடைந்தது போலவே இந் நூலையும் வரவேற்பர் என்று விழைகின்றோம்.

**ஊ.வ. தட்சிணாமூர்த்தி**
தலைவர், வ. ஆ. மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்.

உ
சிவமயம்
திருசிற்றம்பலம்

# மகாதேவ மாலை

## காப்பு
அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

**கருணைநிறைந் தகம்புறமும் துளும்பிவழிந்**
**துயிர்க்கெல்லாம் சுளைகண் ஆகித்**
**தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற**
**கண்ணுடையோய் சிதையா ஞானப்**
**பொருள்நிறைந்த மறையமுதம் பொழிகின்ற**
**மலர்வாயோய் பொய்ய னேன்றன்**
**மருள்நிறைந்த மனக்கருங்கல் பாறையுமுள்**
**கசிந்துருக்கும் வடிவத் தோயே.**

(பதவுரை) கருணை நிறைந்து - (நியதியான) கருணை நிறைவாகி; அகம் புறமும் துளும்பி வழிந்து - அகத்தில் ததும்பிப் புறத்திலும் வழிந்து; உயிர்க்கு எல்லாம் களைகண் ஆகி - (தரத்திற்குத் தக்கபடி) ஆன்ம கோடிகள் அனைத்திற்கும் ஆதாரம் ஆகி; தெருள் நிறைந்த இன்ப நிலை வளர்க்கின்ற கண் உடையோய் - தெளிவு நிறைந்த இன்ப நிலைகளை(க் கனிவோடு) பெருக்கிக் கொண்டே இருக்கின்ற (உயர்ந்த) அருள் நோக்கம் உடையோனே; சிதையா ஞானப் பொருள் நிறைந்த மறை அமுதம் பொழிகின்ற மலர் வாயோய் - (என்றும் தேய்ந்து) அழிதல் இல்லாத மாபெரும் ஞானமாகிய பொருள் செறிந்த மறைகளாகிய அமுத மழையை(ப், புனித ஆன்ம உணர்வில்) பொழிகின்ற (தெய்வ) மலர்போன்ற திருவாயை உடையவனே; பொய்யனேன் தன் - (அகத்தும் புறத்தும்) மெய்ம்மை யில்லாத அடியேனுடைய; மருள் நிறைந்த மனக் கருங்கல் பாறையும் உள் கசிந்து உருக்கும் வடிவத்தோயே - மயங்குதல் மிக்க மனம் எனும் கருகி இறுகிய (பாறையான) கல்லையும் உள்நெகிழ்ந்து உருகுமாறு செய்துவிடும் (மேதகு) சொரூப மேனியனே, (எ-று)

(விரிவுரை) அறியாமையின் சார்பில் அலமரும்; மறதியின் மயமாகி மடங்கும்; இருளில் விழுந்து இடருறும்; துன்ப முழுமையில் துவளும்; எந்த நாளிலும், அகில சராசரத்தும் உள்ள ஆன்மாக்கள் படும் அவதி இலை.

எங்குமுள சொரூபசிவம், இக் கேவல நிலை கண்டு இரக்கம் பெரிதும் கொள்கிறது; இந்த இரக்கமே தயாமூல தர்மம்; பேரருள் உடைமை எனும் பெருங்குணம். அந்தக் கழிவிரக்கத்தின் பெருக்கத்திற்குக் கருணை என்று பெயர். தற்பர சிவம், உடனே தடத்தத் திருமேனி தாங்குகிறது. அதன் உள்ளக் கருணை,

வரவர ஊற்றுப்போல் வளர்கிறது. அகத்தில் சுரக்கும் அது, விமலன் திருக்கண்களின் வழியே வெளிப்படுகின்றது.

காரண இறைவன் கருணை நோக்கம், சிறந்த துணைக் காரண சிற்சித்தியையும், தூய கால தத்துவத்தையும் தூண்டுகின்றது; மாயை எனும் முதற்காரணத்தையும் மலர்விக்கின்றது.

அதன் பயனாக நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதம் என, தங்கியிருந்த முன் விளைக்குத் தக்கபடி, உடல்களை உயிர்கள் எய்துகின்றன.

உடல் இவ்வாறு இருந்த நிலை கேவலம்; உடல் கிடைத்த பின், மறதியின் இடையில் நினைவு மலர்கிறது; அறியாமையின் நடுவில் அறிவு; இருளின் இடையே ஒளி; துன்பத்தொடு இன்பங்களும் தோன்றுகின்றன.

மறதியால் விளைந்த சங்கடங்கள் யாவும், தெளிந்த நினைவு எழும்போது தெரிகிறது. அறியாமையால் உண்டான அவதிகள், அறிவு எழுகிறபோது புரிகிறது. இருளில் பட்ட இடர் அனைத்தையும், ஒளி உதயத்தில் உணர முடிகிறது. இன்பம் எழும்போது, துன்பத்தில் துவண்டது எல்லாம் தோன்றுகின்றன. பேசிய இந்த நான்கும், சகல நிலை என்னும் பெயர் பெறும்.

வெப்ப தட்பங்களை, உயிரால் உடலம் உணர்கிறது. ஆயினும் அவ்வுடல், தன்னைத் தான் அறியா; அறிவிக்கும் உயிரையும் அறிந்து கொண்டது இல்லை.

இனிப்பு கசப்பு முதலிய சுவைகளை, ஆன்மாவால் வாய் அறிகிறது; ஆயினும் அவ்வாய், தன்னைத் தான் அறியா; அறிவிக்கும் ஆன்மாவையும் அறிந்து கொண்டது இல்லை.

இது வீடு, இது மாடு, இது கோயில், இது குளம் என்று ஆன்மாவால் கண்கள் அறிகின்றன; ஆயினும் அக்கண்கள் தம்மைத் தாம் அறியா; அறிவிக்கும் உயிரையும் அறிந்து கொண்டது இல்லை.

இது மலர்மணம். இது மாம்பழ வாசனை எனலை, ஆன்மாவினால் நாசி அறிகின்றது; எனினும் அது, தன்னைத் தான் அறியா; அறிவிக்கும் சீவனையும் அறிந்தது இல்லை. இது இன்ன ஓசை, இது இன்ன ஒலி எனலை, ஆன்மாவால் செவிகள் அறிகின்றன; எனினும் அச் செவிகள், தம்மைத் தாம் அறிந்தது இல்லை; அறிவிக்கும் உயிரை ஒருநாளும் அறிந்தது இல்லையே.

அரிய இந்த அனுபவம்போல், நிமித்த காரண நின்மலன் சிறப்பாகத் தூண்டிய சிற்சித்தியும், தனிப்பெரும் கால தத்துவமும் சடமான கன்மங்களைச் சார்விக்க, அளவறிந்து மோதும் வினைப்பயன்களை ஆன்மாக்கள் அனுபவிக்கின்றன; ஆயினும் அந்த ஆன்மாக்கள் தம்மைத் தாம் அறியா; விறுவிறுத்து அணுகும் வினைகளை யறியா; அனுபவிக்கத் தூண்டும் அருளாளனையும் அறிந்தது இல்லை.

அளவிறந்த வினைகளை அனுபவித்துக் கழிக்கவும், தன்னிலை யறிந்து, தலைவனை உணர்ந்து, பேறான வீடு பெறுதலும் கருதி, அமலன் ஆன்மாக்கட்கு ஆக்கையை அளிக்கின்றான்; அக்கருணை, என்றும் தடைப்பட்டதே இல்லை; பொங்கித் ததும்பி மேலும் பொழிகிறது; அதன் பயனாக, வர வர ஆன்மாவில் தெளிவு வளர்கிறது.

மன்னன் ஒருவன், படைகள் புடைவர, மாநிலம் முழுதும் பவனி வருகிறான். பிறகு திரும்புகிறான். பொலிவுள தன் அரண்மனையிற் புகும்பொழுது, ஒவ்வொரு வாயில்களிலும், நிற்க என்று அதற்கு உரியவர்களை நிறுத்துகிறான். பொல்லாத அயலவர் புகாதபடி, வாய்ப்பான காவல்களை வைக்கின்றான். அதன்பின் தன் அந்தப்புரத்தை அடைகிறான்.

அதுபோல், பிராணவாயு ஆகிய குதிரையைப் பிணைத்த மனமாகிய தேரைச் சிலிர்க்கும் அகங்கார சாரதி செலுத்த, மெய் வாய் கண் மூக்கு காது எனும் அறிகருவிப் படைகள், வாக்கு, உள்ளங்கால், உள்ளங்கை, எருவாய், கருவாய் எனும் தொழிற் கருவிப் படைகள் சுற்றிலும் தன்னைச் சூழ்ந்து வர, புறமாகிய பல இடங்களில் பவனி வரும் ஆன்மா ஆகிய அரசன், மேலான தன் அகத்திற்கு மீன்பொழுது, புருவநடு, கண்டம், இதயம், தொப்புள் எனும் இடங்கள் தோறும் நீக்க வேண்டிய தத்துவப் படைகளை நீக்கி, உடலை எவரும் ஊறு செய்யாதபடி பிராண வாயுவை வளமான காவலாக வைத்து, மூலாதாரத்திற்கு மேலும், நாபிக்குக் கீழுமான சுவாதிட்டானம் என்னும் அந்தப்புரத்தை அடைந்து, மாயை யெனும் துணைவியுடன் ஆநந்தமய கோசனாகி அமர்கின்றான்.

உறங்குமுன் அறிகருவிகள் 5; தொழிற் கருவிகள் 5; புலன் 5; பேச்சு, நடை, கொடை, விடுகை, புணர்வின்பம் எனும் தொழில் 5; பிராணன், அபானன், வியானன், உதானன், சமாணன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவ தத்தன், தனஞ்சயன் எனும் வாயு 10; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் காரணங்கள் 4; புருடன் ஒன்று ஆக 35 தத்துவங்களுடன் ஆன்மா, புருவ நடுவில் பொலிவு பெறுகிறான்; இது, **விழிப்பு நிலை** எனப் பெறும்.

இந்த இடத்தை விட்டு கண்டத்தில் இறங்கும் பொழுது, வாயு 10; புலன் 5; தொழில் 5; கரணம் 4; புருடன் ஒன்று ஆக 25 தத்துவங்களுடன் ஊன்றி ஆன்மா உறவு கொள்கிறான்; இது **கனவு நிலை** எனப்பெறும்.

இங்கிருந்து வாழ்விக்கும் இதயத்திற்கு வரும்பொழுது, பிராணன், சித்தம், புருடன் எனும் மூன்று தத்துவங்களுடன் ஆன்மா முறுவலிப்பன்; இது **சுழுத்தி நிலை** எனப்பெறும்.

இதனிலிருந்து வாய்ப்பான நாபியின் இடத்திற்கு வரும் பொழுது, பிராணன் புருடன் எனும் இருவருடன் மட்டும் இணங்கி சீவன் இருப்பன். இது, **துரியநிலை** எனப்பெறும்.

அதன்பின் சுவாதிட்டானம் எனும் அடிவயிற்றை அடையும் பொழுது, புருட தத்துவம் ஒன்றுமட்டும் பொலிவு பெறும். இது, **துரியாதீதநிலை**.

வளரும் இந்த வழியில் கற்பன கற்று, கேட்பன கேட்டு, சிந்தித்துத் தெளி வெய்தி, வினைகளால் விளையும் அயர்ச்சி விலக, ஆன்மா ஞானயோக நாட்டம் கொள்ளும். இது, கேவலம் சகலம் இரண்டும் கடந்த **சுத்த நிலை** என்று சொல்லப் பெறும். ஆணவமான ஒருமல உயிர்கள் விஞ்ஞானகலர்; ஆணவ கன்ம இருமல உயிர்கள் பிரளயாகலர்; ஆணவ கன்ம மாயையாம் மும்மல உயிர்கள் சகலர்; இங்ஙனம் உயிர்கள் மூவகைப்படுவர். அவ்வவ் உயிர்களின் தரத்திற்குத் தக்கபடி, பயன் தருகிறது பரமனது அருள் நோக்கம்.

பாலூட்டும் பருவம், சோறூட்டும் காலம், உணவு பரிமாறும் சமயன் எனவுறு பருவத்திற்குத் தக்கபடி, சேயிடம் தாய் பரிவு காட்டுவதைப் பார்த்துளம். தலைமகன் அருள் நோக்கம் தாயைக் காணும்; தாரத்தை நோக்கும்; பயந்தெடுத்த சேயைப் பார்க்கும்; பார்வை ஒன்றே ஆயினும், அதன் உள்நோக்கம் வேறு வேறு குறிப்பின. அதுபோல் பரமன் அருள் பார்வை, உயிர்களின் தரத்திற்குத் தக்கபடி பெரிதும் உதவுதல் புரிகிறது. அகதி நிலையில் உள்ள ஆன்மாக்களை, பல வகையில் தாங்கும் தரத்தது அந்த அருள் நோக்கம். அதுவே எவர்க்கும் களைகண். (களைகண் - ஆதாரம்) "ஆதார ஆதேயம் முழுதும் நீ ஆதலால், அகிலமீது என்னை ஆட்டி ஆடல் கண்டவனும் நீ, ஆடுகின்றவனும் நீ" என்று தகவொடு பாடுகின்றார் தாயுமானவர்.

அகமாக உளது ஆன்மா. அகப்புறமாயது சீவன். புறமாக உளது மனம். புறப்புறம் ஆயின பொறிகள். இவைகள் ஒவ்வொன்றினும், அதனதன் நிலைக்குத் தக்கபடி பரம அருள் வெள்ளம் பாய்கிறது. 'கருணை நிறைந்து, அகம் புறமும் துளும்பி வழிந்து, எவ்வுயிர்க்கும் களைகண் ஆகி' என்று பாடும் பகுதியை, உணர்பொழுது எல்லாம் புல்லரிக்கிறது உடல்; புளகிக்கிறது நமது மனம்.

"அருள் எங்கும் கண்ணானது ஆர் அறிவாரே" எனும் திருமந்திரமும், "அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்! அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்" எனும் திருவாசகமும் இங்கு எண்ணத்தகும்.

இதன் பயன், 'தெருள் நிறைந்த இன்பநிலை வளர்த்தல்' ஆஹா! என்ன அருமையான செய்தி இது!

அவன் அவள் அது எனும் உலகம், பிறக்கும் இருக்கும் இறக்கும். எனினும், இம் முத்தொழிலையும் தானே செய்து கொள்ள அறியா. சங்கார காரணன் அவைகளிற் சார்விக்கின்றான்.

உலகம் அவனில் இருக்கும். ஆணவம் அகல உதிக்கும். உரிய கன்மம் கழல, அவனிலேயே ஒடுங்கும். இங்ஙனம், எவ்வுயிரையும் காலத்தில் தன்னில் சுரப்பித்துக் கொள்ளும் காரணன் பரன்.

உடலுள் உயிர்போல், காரண முதல்வன் எவ்வுயிரினும் கலந்து ஒன்றானான்; கண்ணொளியும் கதிரவன் ஒளியும்போல், பொருள் தன்மையால் வேறானான்; ஆன்ம அறிவும் கண்ணொளியும் போல், உயிர்க்குயிராகி உடனானான். முற்பிறவிகளின் புண்ணிய பாவத்திற்குத் தக்கபடி பிறத்தல்; கன்ம நுகர்வுக் காலம் வரை இருத்தல், இறுதியில் இறத்தல் எனும் முத்தொழிலும் நிகழ, அமலன் சிற்சத்தி செயல்படுகின்றது; அச்சித்தை விட்டு அகலாத சந்தன் அவன்.

சிறிது அளவாகிச் சிதையும் சிற்றின்பம்; பெரிதளவாகிப் பெருகும் பேரின்பம் என இன்பம் இருவகை; தெய்வப் பேரின்பமே தெளிந்தகலை; அஃதே இயற்கையாகத் திகழ்ந்தநிலை. அது 'தெருள் நிறைந்த இன்பநிலை' என்று தெரிவிக்கப் பெற்றது. அதைச் சிறிது சிறிதாக அருளும் **கண்ணாளன்** அத்தன்.

உயிர்கட்கு இருநிலைகள் உள; ஒன்று பெத்தநிலை; மற்றொன்று முத்தநிலை; முப்பத்தாறு தத்துவங்களோடு ஒட்டி உறவு கொள்வது பெத்தநிலை; அவைகள் அனைத்தையும் விட்டநிலை முத்தநிலை; இந்த இரு நிலைகளிலும் இறைவன் உயிர்களொடு இணங்கியுளன்.

பெத்தநிலையில், செய்வதெல்லாம் உயிரே செய்கிறது எனுமாறு எம்மான் உளன்; இந்நிலையில் எதனொடு எதனொடு ஆன்மா உறவுறுகின்றதோ, அதன்வழி அதன்வழி இன்பநிலைகளைச் சிறிது சிறிதாக ஈகின்றான் எம்மான்.

அந்த அந்த வழிகளில் ஆன்மா தேறிப் பிறகு தெளிவு பெற்றபின், என் செயல் என்பது எதுவும் இல்லை; எல்லாம் சிவன் செயல் என்று அறிந்து பரத்தில் தன்னை அர்ப்பணிக்கும். அந்நிலையில் மலமில்லை; கன்மம் இல்லை; மயக்கியிருந்த மாயையும் இல்லை; அவ்வமயம் ஆன்மாவை, ஆநந்த மயமாக்குவன் அத்தன். இவ்வளவு செய்திகளையும் தொகுத்து, '**கருணை நிறைந்து, அகம்புறமும் துளும்பி வழிந்து, எவ்வுயிர்க்கும் களைகண் ஆகி, தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்**' என்று வாயாரப் பாடுகின்றார் வள்ளலார். இதுகாறும் குறித்த அளவு சிற்றளவு; இந்த இரு வரிகளையும் பல தரம் ஒருமை உணர்வொடு பாடிப் பாருங்கள்? அதன்பின், இவைகளில் பெருகும் செய்திகள் மலையளவு என்பது, புனித உணர்விற்குப் புரிதலுறும். ஆயினும், கம்பீரமாக நினைவில் திரளும் கருத்துக்களையும், எழுத உலகில் சொற்கள் இல்லையே என்னும் ஏக்கம் பெரிதும் எழுவது இயற்கை.

உலகியல் என்பது, வெறும் கானல் நீர்; வெறும் பொய்ம்மாயத் தோற்றம் என்பதை, அனுபவ நிலையில் அறிந்தபின் உதிப்பது அருள்ஞானம். அந்த ஞானம் வந்தபின், அருட்சுடர் அத்தன், "கோடையிலே நடந்து இளைப்பாறக் கிடைத்த குளிர்தரு, தருநிழல், கனிந்தகனி, ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீர், மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்று, மென்காற்றில் விளைசுகம், சுகத்திலுறும் பயன்" ஆக, அருள்முகம் காட்டி அணைக்கின்றான் என்னும் அருமைபெருமை தெரிதலுறும். ஆஹா! நினைவில் நிழலிடும் அப்பதிஞானத்தை, உணர்கிற பொழுதே உள்ளம் பறிமுதல் ஆகிறதே!

காட்டக் காணும் குணமுடையது கண். அக் கண்ணொடு கூடி நின்று, காணுமாறு எதையும் ஆன்மா காட்டுகின்றது. கம்பீரமான இச் செயலுடன், தானும் கலந்து காண்கிறது. அதுபோல் மெய் வாய் செவி நாசி கண்கட்கு ஊறு, சுவை, ஒலி, மணம், காட்சி முதலியவைகளை அறிவித்துத் தானும் அறிகிறது.

அரிய இந்த அனுபவம்போல், அறிவிக்க அறியும் உயிர்களில் இணங்கி இறைவன் என்றும் இருந்து, ஆன விடயங்களை அறிவிக்கிறான்; தானும் அறிகிறான். காட்டித் தானும் காணும் கருணையை எண்ணும் உயிர், இறைவன் பால் சிறந்த அன்பை செலுத்துகின்றது.

அசத்து என்றும் அறியப்படு பொருள்; அறியப்படுவனயாவும் அழியும். அறியப்படாதன அனைத்தும் சூனியம். அறியப்படு பொருள் உலகம்; இது அழியும். அறியப்படாத பொருள் முயல்கொம்பு, ஆமைமயிர் போல்பவை; இவைகளே சூனியம் எனப்பெறும்.

சிவம் அறியப்படு பொருளாயின், இவ்வுலகம்போல் அழியும் பொருள் ஆகிவிடும். அறியப்படாத பொருளாயின் முயல்கொம்பு ஆதியபோல சூன்யம் என்று ஆகிவிடும்.

பாச பசு ஞானம் கடந்த பதிஞானத்தால் அறியப் பெறு பொருள் பரம். இது, '**சிதையா ஞானப் பொருள்**' என்று சிறப்பிக்கப் பெறுகிறது.

அறிவித்தல் அன்றி அறியா ஆன்மாக்கட்குத் தன்னை அறிவிக்க, அப்பொருள் வித்தக குருவுருவில் வெளிப்படுகின்றது. அப்போதே பரம அருள் நோக்கம் பாலிக்கின்றது; இது **நயன தீக்கை** எனப்பெறும்.

தன்னுள் இருந்தும் தானறியாது இருந்த பரம்பொருள், ஞானாசாரியத் திருமேனியுடன் புறத்தில் விளங்கிப் பொலிதல் கண்டதும், வலம்வந்து வணங்கி, ஆநந்தக் கண்ணீர் அருவியெனப் பெருக அஞ்சலி கூப்பி, பெரும! அடியேங்கட்கு இவ்வுடலம் வந்தது எவ்விதம்? இவற்றுள் இருந்த யாம் யார்? எமக்கு முதலான மெய்ப்பொருள் யாது? என்று விநய பக்குவ ஆன்மா விண்ணப்பிக்கும்.

இதுவரை அறிவில்லாமல், ஐம்புல இன்பங்களை ஆவலித்தாய்; வறள் விக்கும் அவைகளொடு வளர்ந்தாய்; உன்னை மறந்தாய். எம்மையும் நினைந்திலை. சித்தமாக நின்று சிந்தித்தாய்; மனமாக நின்று எதையும் மதித்தாய்; அகங்காரமாக இருந்து எச் செய்தியையும் ஆய முயன்றாய்; தெளிவு பிறவாமல் திண்டாடினை; புத்தியாக நின்றாய்; ஓரளவு புரிந்து கொண்டாய்; அந்தக்கணமே நான் என்று அசட்டுத்தனமாக அறிந்தாய்.

மனம் புத்தி சித்தம் அகங்காரங்களால் விளைவது மானதக் காட்சி. இந்தக் காட்சியில் நலம்மிகும் அகரம், அகங்காரத்தை நடத்தும்; புத்தியை உகரம் பொலிவுறுத்தும், மகரம் மனத்துடன் மலர்ந்து, இனிது அதை இயக்கும்; விந்து சித்தத்துடன் விளங்கி, சிறக்க அதனைச் செயல்படுத்தும்; உயிருடன் நாதம், ஊன்றி என்றும் அதை ஊக்குதல் புரியும். இவை ஐந்தும், உள்ளிருந்து ஒலிக்கும் சூக்குமப் பிரணவம்.

அகரத்தின் தெய்வம் பிரமன்; உகரத்தின் தெய்வம் திருமால்; மகரத்தின் தெய்வம் உருத்திரன்; விந்துவிற்கு மகேசன்; சால்புள நாதத்திற்குச் சதாசிவம் தெய்வம். அரிய இத்தனை இதுகாறும் அறிந்திலை.

விறகுள் வெந்தீ மறைந்துளது; சூரியகாந்தம் என்று ஒரு கல் உளது; கனல் அதனுள் கரந்துளது. அதுபோல் ஆணவம், மன்னிய ஆன்ம அறிவை மறைத்துளது.

மாயாகாரிய உடலைக் கொண்டே எதையும் இதுகாறும் மட்டரகமாக மதித்திருந்தனை. அதனால் இதுவரை நீ பார்த்தது எல்லாம் பொய். கேட்டன யாவும் கேடுதரும். பொய்யுரை செய்தன யாவும் பொய்யேயாகிச் சிதைந்தன. பொய்யிலே பிறந்தாய். பொய்யிலே வளர்ந்தாய். பொய்யில் உறவாடிப் புழுத்ததெல்லாம் போதும் போதும் போதுமே!

இனியேனும், உன்னில் பரவியுள எழுத்துக்களைப் பார்! அவைகள் இயக்க இயங்கும் பயனான கரணங்களைப் பார்! பார்! என்று பார்க்குமாறு காட்டுகிறார் அந்தப் பரமகுரு. இங்ஙனம் எல்லாம் 'சிதையா ஞானப் பொருள் நிறைந்த மறையமுதம் பொழிகிறது' திருவாய். இது **வாசக தீக்கை** என்று வழுத்தப் பெறும்.

இதற்குமுன் விஷயாந்தரக் காட்டின் தொடர்பால், கருகி இறுகிக் கனத்த மனமாகிய பாறைக்கல், உட்கசிந்து உருகுமாறு **பரிச தீக்கை** செய்கின்றார் அந்தப் பரமாசாரியர். "நந்தம் கருமேனி கழிக்க வந்த கருணை வடிவை" சித்தியார் பெரிதும் சிந்தித்துளது.

கனிவிக்கும் இன்பத்தைப் படிப்படியாக அருளும் கண்ணாளா! பதிஞானத்தைப் பயின்று உயிர்களாகிய பயிர்கள் உய்திபெற, புனித வேத மழை பொழியும் வாயாளா! இல்லது புனைந்து எண்ணியும் பேசியும், இறுகிய மனக் கருங்கல்லும் உருகுமாறு செய்விக்கும் குருமுக சொரூபம் கொண்டோனே! என்று விளித்தபடி,

"பரிசித்தும், சித்தித்தும், பார்த்தும் மலமாயை,
கருமத்தை எல்லாம் கழற்றிச்--சரியாதி
வாதனையாம் போத மயக்கத்தை வாக்காலே,
போதைசெய்து போக்கிவிடப் போம்"

எனும் ஒழிவிலொடுக்கம் இங்கு உணரத்தகும்.

கருணை பொழியும் கண்களையும், வாசக மழை பொழியும் திருவாயையும், புனித இன்ப மழை பொழியப் பரிசம் அருள்கின்ற தெய்வக் குருவின் திருமேனியையும் மகாதேவ மாலைக்கு காப்பாக வைத்தபடி.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள**
**உயிராகி உயிர்க்குயிராகி ஒளிதான் ஆகிக்**
**கலகநிலை அறியாத காட்சி யாகிக்**
**கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி**
**இலகுசிதா காசமதாய்ப் பரமா காச**
**இயல்பாகி இணையொன்றும் இல்லா தாகி**
**அலகிலறி வாநந்த மாகிச் சச்சி**
**தானந்த மயமாகி அமர்ந்த தேவே.**

(ப-ரை) உலக நிலை முழுது ஆகி--உலகங்களும், (அவைகட்கு ஆதார) நிலைகள் ஆன உள் பொருள்களும் ஆகி; ஆங்கு ஆங்கு உள்ள உயிர் ஆகி - அந்த அந்த உலகங்களில் உள்ள ஆன்மாக்கள் ஆகி; உயிர்க்கு உயிர் ஆம் ஒளி தான் ஆகி - உயிர்கள் உயிர்ப்பதற்குக் காரணமான பரமான்மப் பேரொளி ஆகி; கலக நிலை அறியாத காட்சி ஆகி - (கன்மக் கடும்போர், மாபெரும் கோள்களின் மாறாட்டம், கலக நமன் தூதர்) கலகங்களின் நிலைகளைக் கண்டறியாத (ஆன்ம) ஞானம் ஆகி; கதி ஆகி - வீடு பேறாக விளங்கி; மெய் ஞானக் கண் அது ஆகி - (விமல) மெய்ஞ்ஞான விழியாகி; இலகு சித் ஆகாசம் அது ஆய் - (அதிகமாக) விளங்கும் ஞான ஆகாயம் ஆகி; பரம ஆகாச இயல்பு ஆகி - அதி நுட்பம் ஆன அதிசய இயற்கை அருவம் ஆகி; இணை ஒன்றும் இல்லாது ஆகி - (என்றும்) ஒப்பான ஒரு பொருள் இல்லாதது ஆகி; அலகு இல் அறிவு ஆநந்தம் ஆகி - வரம்பு இல்லாத ஞான இன்பம் ஆகி; சத் சித் ஆநந்த மயமாகி அமர்ந்த தேவே - மெய்ம்மை ஞான இன்ப சொரூபம் ஆகி, அமைதியாக விளங்குகின்ற பேரொளி மயமான பெருமானே, (எ-று.)

(வி-ரை.) ஆன்மாவில் உளது ஆணவ அழுக்கு. துன்பங்கல் அதனால் தோன்றுகின்றன. அழுக்கும் துன்பமுமான அவ்விரண்டையும் அகற்ற, அருள் சத்தியைப் பரமன் மாயையிற் பதிப்பன். அம் மாயை, ஐந்து பிரிவுகள் ஆகும். அவைகள் சாந்தியாதீதகலை, சாந்திகலை, வித்தியாகலை, பிரதிட்டாகலை, நிவிர்த்திகலை என்னும் பெயர்களை எய்தும்.

சாந்தியாதீத கலைக்கு அதிபர் சதாசிவர். சாந்தி கலைக்குத் தலைவர் மகேச்சுரர். வித்தியா கலைக்கு முதல்வர் உருத்திரர். பிரதிட்டா கலைக்குத் திருமால் இறைவர்.

நிவர்த்தி கலைக்கு உரியவர் பிரமதேவர். இவைகள் ஒவ்வொன்றும், சத்திகலை, சத்தி அதிட்டித கலை என்னும் இரு பிரிவுகளாக இருக்கும்.

சத்திகலை என்பது, நேரே செயல்செய்யும் சத்தியின் அம்சம். அது, விடுதலையை உயிர்கட்கு விளைவிக்கும் பொழுது, நிவிர்த்தி கலை என்று நிற்கும்.

பந்தத்தை மீட்டும் பற்றாதபடி, பெருக நிலைப்பிக்கும் பொழுது பிரதிட்டா கலைப் பெயரில் பிரகாசிக்கும். விரிவாக மெய்ப்பொருளை விளக்கும் பொழுது, வித்தியாகலை என்று விளங்கும். ஊன்றி அவைகளை உணர்ந்த உயிர், சால்பொடு அப்பொருளில் சார்ந்திருக்கச் செய்வது சாந்திகலை. சார்ந்துளம் யாம் எனும் முனைப்புச் சாராதபடி சாதகமாக அருள் பொழுது, சாந்தியாதீத கலை எனும் இப்பெயர்களை எய்தும் சார்பினதான திருவருட்சத்தி, இச் செயல் வேறுபாடுகளால் இங்ஙனம் ஐந்து வகையாக இருக்கும்.

சத்தி அதிட்டித கலை என்பது, வேறு ஒன்றின் மூலம் செயல் செய்யும் சத்தியின் அம்சம். அந்த வரிசையில் அயன்மூலம் திருவருட் சக்தி, ஆன்மாக்களே நீளும் கேவலத்தில் இருந்து நீக்கித் தொன்மை உலகங்களை அவைகட்காகத் தோற்றுவிக்கும் பொழுது, நிவர்த்திகலை. நிகழும் உலகைத் திருமால் மூலம் நிலைப்பிக்கும் பொழுது, பிரதிட்டாகலை என்று பிறங்கும். புனிதமாக நிறுத்திய புவனங்கள் இன்னும் பலவுள எனலை உயிர்கள் உணர்ந்து உய்தி பெற, உரிமையொடு முன் காட்டிய புவனத்தை உருத்திரர் மூலம் ஒடுக்கும் பொழுது, வித்தியாகலை என்று விரியும். சிறந்த அப்புவனங்கள் தோறும் சென்று சென்று, பொங்கிய கன்மத்திற்கு ஏற்ற போகங்களை, மகேசர் மூலம் அனுபவிக்கச் செய்பொழுது, சாந்திகலை. புதிது புதிதாக அனுபவிக்கத் தக்க போகப் பொருள்களை, குறிப்பாகச் சதாசிவர் மூலம் கூட்டுவிக்கும் பொழுது, சாந்தியாதீத கலை எனும் பெயரைச் சாரும். கேவலம் நீங்கிய ஆன்மாக்களின் சகல நிலையில் ஆக்கை, அந்தக் கரணம், புவனம், போகங்களின் இடத்தில், சிறப்பாக இச் செயல்கள் செய்யப் பெறுகின்றன.

நிவர்த்தி கலையில், நூற்றெட்டுப் புவனங்கள்; பிரதிட்டா கலையில், ஐம்பத்தாறு புவனங்கள்; வித்தியா கலையில் இருபத்தேழு புவனங்கள்; சாந்தி கலையில், பதினெட்டுப் புவனங்கள்; சாந்தியாதீத கலையில் பதினைந்து புவனங்கள். இங்ஙனம் இருநூற்றிருபத்தினான்கு புவனங்கள் இருக்கின்றன. உலகங்களும், அவைகட்கு ஆதாரமான தத்துவங்களும், அரிய இவைகளில் அடங்கி இருக்கின்றன. வளர்ந்த இவைகளை வாழ்விக்க, (விஸ்வாந்தர்யாமி எனும் பெயருடன்,) ஊடுருவி இறைவன் அவைகளில் உறவு கொண்டுளன். வாய்மை அருளொடு வள்ளலார், பெருக்கமான இச் செயல் திறங்களை, 'உலகநிலை முழுதாகி' என்று சுருக்கமாக அறிவிக்கும் அருமையே அருமை.

(நிலை - நிலைப்பிக்கும் ஆதாரங்கள்; இவைகள், உரிய தத்துவங்கள் என்று உணரப் பெறும். தத்துவம் என்பதற்கு உள்பொருள் என்பது தமிழ்ப்பெயர்.)

சுத்த மாயையின் மேற்புறத்தில் அணு சதாசிவர், அட்டவித்தியேச்சுரர் முதலினோருளர். இவர்கள் பக்குவம் எய்திய பாத்திரர்கள்; இவர்களுடன் அம்மாயையின் நடுவில் பக்குவ அபக்குவம் இரண்டும் விரவிய எழுகோடி மகா மந்திரர்களும் இருக்கின்றனர்.

அத்தூய்மை மாயையில் கீழ்ப்புறத்திலும் சிலருளர்; இவர்கள் அபக்குவர் என்று அறியப் பெறுவர்; இம்முத் திறத்தரும், ஆணவம் எனும் ஒரு மலமுடைய விஞ்ஞான கலர் என்று விளங்குகின்றனர்.

இதன் கீழுளது அசுத்த மாயை. இதன் மேல் மட்டத்தில் சீகண்டர், வீரர், மண்டலர் எண்மர், மண்டலாதிபர் எண்மர் இருக்கின்றனர். இவர்கள் பக்குவம் எய்திய இயல்பினர். இதன் நடுவில், பக்குவம் அபக்குவம் இரண்டும் விரவிய தனிப்பெரும் புவனத் தலைவர்கள் உளர்.

கீழ்மட்டத்தில், பயிலும் அபக்குவர்கள் ஆன புவனவாசிகள் பலருளர்; இம் முத்திறத்தரும் பிரளயாகலர் எனப்பெறுவர். இவர்கள், ஆணவம் கன்மம் எனும் இருமலர். இதன் கீழுளது பிரகிருதி மாயை. அதன் மேல் மட்டத்தில் முத்தி விருப்பும், அதற்குரிய முயல்வுகளும் ஆன பக்குவர் சிலருளர்; அதன் நடுவில் இருப்பவர்கள், சுவர்க்க பதங்களின் விளையும் போக வேட்கையர்; இவர்கள் பக்குவம் அபக்குவம் இரண்டும் எய்தினோர். அதன் கீழ் மட்டத்தில் அபக்குவர் பலருளர்; இவர்கள் புண்ணிய பாவங்களை எண்ணலர்; கண்டதே காட்சி; கொண்டதே கோலம் என்று களிப்பவர்; இதன் வழியே இறந்தும் பிறந்தும் இடர்களை எய்துவர்; ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களால் முறைதுறை மறப்பவர். இம்முத்திற உயிர்களின் தரத்திற்குத் தக்கவாறு தழுவி, அவைகளைத் தாங்குகின்றது தற்பரம். ஆதலின், 'ஆங்கு ஆங்கு உள்ள உயிர் ஆகி' என்று அறிவிக்கிறார்.

உனக்கு முன்னர் உடல் இல்லை. அடையும் அவதியை அறிந்து, அடர்ந்த கன்மத்திற்குரிய யாக்கையை அளித்தேம்; தூய இதன் துணையால், நிலைமையை நினை! என்றும் நின்னிலையை எண்! ஊன்றி எம்மை உணர்! என்று இடையறாது உணர்த்தற் பொருட்டு, உயிருள் ஒளியாய்ப் பரன் உறவு பூண்டுளன். அந்த அருமையை, 'உயிர்க்கு உயிராம் ஒளி தான் ஆகி' என்று உரைத்தார். (தான் - அசைநிலை; தேற்றப் பொருட்டுமாம்.)

மாயை மயக்கும், கன்மம் கால் தட்டும், கால தத்துவம், மாற்றம் காட்டி மருட்டும். நலமது ஒன்று அடைதற்கு முயன்றால், நாலாயிரம் இடையூறுகள் தேடிவரும். அட பாவமே! இது தானா உலகம்? இவ்வளவுதானா செய்தி என்று ஏமாற வேண்டா. இந்தக் கலக்கம் எதுவும், அருள் ஞானம் பெற்றாரை அணுகா. ஆம். அது, 'கலகநிலை அறியாத காட்சி' (காட்சி - ஞானம்.) அந்த ஞான சொரூபமே அத்தன்.

சகல நிலையின் தெளிவு சார்ந்து, உத்தம சுத்தநிலை பெற்ற உயிர்கள், வாய்மைப் பரிபாகம் பெற்று வாழ்பவர்கள். வீடுபேறாகி அவர்கள் முன் விமலன் விளங்குகின்றான்; அந்த அருமையை, 'சுதியாகி' என்று கைக்கூப்பிக் கருதியபடி.

காண்பான் அவன். காட்சி அவன். காணப்படு பொருளும் அவனே என்பதை, 'ஒளியாகி, காட்சியாகி, கதியாகி' எனும் மாபெரும் உண்மையை மறக்க முடிவது இல்லையே!

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை, ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி" என்பர் மெய்கண்டார். ஆம். ஊனக்கண்ணால் பதியை உணர்தல் இயலா. மெய்யறிவால் அறியப்பெறும் அம் மெய்ப்பொருள், மெய்யன்பர்கட்கு மெய்யறிவு எனும் உரிய விழியை உதவி, "நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை நீகாண்" என்று அருளுவது என்றுமுள்ள

இயல்பு. அம் மெய்ஞ்ஞானக் கண்ணில் உள்ள மெய்ச் சிவத்தை, 'மெய்ஞ்ஞானக் கண் அது ஆகி' என்றார். (அது - பகுதிப்பொருள் விகுதி).

"உன்னைப் பார்த்து உன்னுள்ளே என்னைப் பாராதே, ஊரைப் பார்த்து ஓடி உழல்கின்ற பெண்ணே! என்னைப்பார் என்கின்றார் என்னடியம்மா! என்கைப் பிடிக்கின்றார் என்னடியம்மா" என்பது, திருவருட்பாவின் ஒரு பகுதி. (இங்கு கை என்பது அதற்கான ஒழுக்கத்தை. பிடித்தல் - தொடர்ந்து பற்றுதல்.)

ஆகாயம் பல. அவைகளைத் திருவடிப் புகழ்ச்சியுரையுள் அறிந்துளம்; அவைகளுள் ஒன்று சிதாகாசம். (சித் - ஞானம்; ஆகாசம் - உருவம் இல்லாத அருவம்). எளிதில் எவரும் எய்த இயலாத அது, எந்த நூலறிவிற்கும் எட்டாதது; கேள்வி யறிவிற்கும் கிட்டாதது. உத்தம அன்புமயம் ஆனாருள் உதயம் ஆவது. பொங்கித் ததும்பிச் சித்ததுள் பொலிவது ஆதலின், சிதாகாரம் எனும் பெயரில் அது சிறப்பிக்கப் பெறுகிறது. சிதாகாரத்தில் சிவனை யீர்த்து, பரமாகாசத்தில் தன்னைப் பார்க்க அருள்வது பரம். உரிய இவ்வுண்மைகளை ஓர்ந்து, 'இலகு சிதாகாசம் அது ஆய், பரம ஆகாச இயல்பு ஆகி' எனும் பகுதிகளை, ஓதும் போதே உள்ளம் பெரிதும் உருகுகின்றதே! (அது - பகுதிப் பொருளில் நின்ற விகுதி.)

தனக்கு ஒப்பானதும் மிக்கானதும் இல்லை யெனுமாறு ஒளிர்தலின், 'இணை ஒன்றும் இல்லாதாகி' என்றார்.

நூலறிவு என்பது பாசஞானம். சிவ அறிவு பசு ஞானம். எல்லையிட்ட அந்த இரு அறிவுகளால் அறிய இயலாத சிவம் இன்ப சொரூபமாக எங்கும் இருத்தலின், 'அலகு இல் அறிவு ஆநந்தம் ஆகி' என்றார்.

ஆன்மாக்களின் அறிவும் இன்பமும் தான் தந்ததே என்று தருக்குவோன் ஆதலின், 'அலகு இல் அறிவு ஆநந்தம் ஆகி' என்று அறிவித்தார் எனலுமாம்.

என்றும் உள்ளது சத்; எதையும் உணர்வது சித்; அவைகளுடன் பேரின்பாகிப் பெருகுவது ஆகலின், 'சச்சிதானந்த மயமாகி' என்றார். வித்தக சாந்தபத வியோமமாக வீற்றிருத்தலின், 'அமர்ந்த தேவே' என்று விநயம் காட்டி விளித்தபடி. (1)

**உலகமெலாம் தனிநிறைந்த உண்மையாகி**
**யோகியர்தம் அநுபவத்தின் உவப்பாய் என்றும்**
**கலகமுறு உபசாந்த நிலைய தாகிக்**
**களங்கமற்ற அருள்ஞானக் காட்சியாகி**
**விலகலுறா நிபிடஆ நந்தம் ஆகி**
**மீதானத் தொளிகின்ற விளக்கம் ஆகி**
**இலகுபரா பரமாய்ச்சிற் பரமாய் அன்பர்**
**இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே.**

(ப-ரை.) உலகு எலாம் தனி நிறைந்த உண்மை ஆகி அகில உலகங்களிலும் (ஒட்டாது பற்றாது) ஒதுங்கியும், (ஊடுருவி) நிறைந்தும் உள்ள உள்ளபொருளாகி;

யோகியர் தன் அநுபவத்தின் உவப்பாய் - (சிவஞான) யோகிகளின் (உள்முகமான) அநுபூதியில் இருந்து விளைகின்ற உவகையின் உருவம் ஆகி; கலகம் உறா உபசாந்த நிலையது ஆகி - (எந்நாளும்) கலகநிலை கலவாத அமைதியின் சார்பு ஆகி; களங்கம் அற்ற அருள் ஞான காட்சி ஆகி - (ஒருநாளும்) பிரிதல் இல்லா இன்ப நெருக்கம் ஆகி; மீதானத்து ஒளிர்கின்ற விளக்கம் ஆகி - (ஆதாரங்கட்கு எல்லாம் அப்பாற்பட்ட) மேல் நிலையில் (என்றும்) ஒளிமயமாகி, (எதையும் விளங்கச் செய்கின்ற இயற்கை) விளக்கமாகி; இலகு பர அபரம் ஆய் - ஒளிர்கின்ற பரமாகி, அபரம் எனப்பெறும் அனைத்தினும் ஆகி; சித் பரம் ஆய் - மாபெரும் பதிஞான மயம் ஆகி; அன்பர் இதயமலர் மீது இருந்த இன்பத் தேவே - அன்பர்களின் உள்ளக் கமல மலரணை மேன் வீறு தோன்ற விளங்குகின்ற இன்ப முழுமையான இறைமையே, (எ-று.)

(வி-ரை) தோற்றம் ஆவதெல்லாம் மாற்றம் அடையும்; இது உலகநிலை. என்றும் திரிபு படாதது இறைமை நிலை; அது எங்கும் நிறைந்தது; எனினும் ஒட்டு பற்று ஒன்றும் இல்லாதது; நூலறிவிற்கும் தத்துவ ஆய்விற்கும் எட்டாதது; கருவி கரணங்கள் ஓய்ந்த தனிமையர்க்குத் தரிசனம் ஆவது; "தன்னந் தனிநின் றதுதான் அறிய இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ" எனுமாறு இருப்பது; "நோக்கினும் நுழைகிலை, நுவலு கின்றதோர் வாக்கினும் அமைகிலை, மதிப்ப ஒண்கிலை, நீக்கரு நிலைமையில் நிற்றி எந்தை! நீ ஆக்கிய மாயம் ஈது அறிகி லேமரோ" எனப் பண்ணவர் ஏத்திப் பரவுவது ஆகலின், 'உலகமெலாம் தனிநிறைந்த உண்மையாகி' என்றார்.

பல நினைவிற் படராமல், உள்முகமாகி ஒன்றுபவர் யோகியர். (யுக் - பகுதி; ஒன்றுதல் என்பது அதன் பொருள்) அந்நிலையரது உணர்வுகள், அருள்கிரண ஒளிபாயும். சிறந்த அந்நிலை சித்திக்கும் பொழுது, பொலிவுறும் உவகை அவர்களில் பொங்கி வழியும். அது 'யோகியர்தம் உவப்பாய்' என்பதில் அறிவிக்கப் பெற்றது.

அந்தக்கரணப் போராட்டம், ஆக்கை நான் எனும் மாறாட்டம், குலம் பற்றிய கோலாட்டம் எல்லாம், இந்நிலையில் வாலாட்டம் காட்டாது வறண்டுவிடும். உவகை மயமான இந்நிலையின் இடையே உதிப்பது உபசாந்தம். (சாந்தம் - முழு அமைதி; உப - உறுப்பு) இது அயர்வு அகன்ற அமைதியின் சாயை; மனோவிருத்தி மடங்கி ஒடுங்கிய மாபெரும் நிலை. காரியமானது அசுத்த மாயை; காரணம் ஆனது சுத்த மாயை; இவைகளால் விளையும் வாசனை வீழ்ச்சி யடைந்தபின், உதயம் ஆகும் இவ்வுபசாந்தம்.

"அன்ன துரியமே ஆத்தும சுத்துயும்
முன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி
மன்னு பரங்காட்சி ஆவது உடனுற்று
தன்னின் வியாத்தி தனின்உப சாந்தமே" எனவும்,

(வியாத்தி - வியாப்தி எனும் வடசொல். இது வியாபக ஒப்புவமை எனும் பொருளது)

"சத்திக்கு வித்து தனதுப சாந்தமே" என்றும் கூறும் திருமந்திரங்கள் இங்கு எண்ணத் தகும்.

எவர் அறிவிலும் களங்கம் இருக்கும். இவர்கள் வரலாறு எண்ணத் தகாதவை. அனுபூதிமான்களை எண்ணினாலும் புண்ணியம் உண்டு. இவர்களின் கறையற்ற ஞானம் கலக்கும். அந்தக் கண்ணிற்குப் புனித அற்புதம் பல புலனாகும். அந்த அருள்ஞானக் காட்சியே அமல இறைநிலை. அற்புதப் பத்து, அதிசயப் பத்து எனும் இருபகுதிகள், திருவாசகத்தில் இருப்பதை எவரும் அறிந்துளர். அவைகளுடன் "ஆணிப்பொன் அம்பலத்திலே கண்ட காட்சிகள் அற்புதக் காட்சியடி - அம்மா - அற்புதக் காட்சியடி" என்கின்ற திருவருட்பாவின் கீர்த்தனைப் பகுதியையும் இங்கு எண்ணிக் கொள்ளல் நலம். இந்த அருமை, 'என்றும் களங்கமுறா அருள்ஞானக் காட்சியாகி' என்று அறிவிக்கப் பெற்றது.

இக் காட்சியின் பின், இனி விலகாத இன்பம் விளையும்; அது அதி அணுக்கமாகி அமையும். மேலான இப்பேறு மெய்சிலிர்க்கச் செய்யும். ஆம். அது 'விலகலுறா நிபிட ஆநந்தம். (நிபிடம் - வடசொல்; நிறைதரு நெருக்கம் எனும் பொருட்டு.) மேலாதாரம், கீழாதாரம் யாவும் கடந்தது 'மீதானம்'. ஒளியைக் குறித்து ஓதுவதெல்லாம் வெறும் வாய்ப்பந்தல். அது, கம்பீர மீதானக் காட்சி. (மீ - மேல். தானம் - ஸ்தானம்; இடம்) மீதானத்தின் மேல் பரஞ்சுடர் இயற்கை விளக்கம் என இருக்கிறது. அச்சிறப்பை, 'மீதானத்து ஒளிர்கின்ற விளக்கம் ஆகி' என்று அருமையான சொற்களைக் கொண்டு அறிவிப்பதை, மறவாது என்றும் நம் மனம்.

ஆதாரங்களும், அவைகளில் எழுகிற நாதங்களும், உரிய அவைகல் ஒடுங்கும் இடங்களும் தன்னில் ஆகி, காற்றுப்போல் எங்கும் கலந்து இருப்பது பராபரம்.

"பாரெங்கும் ஆகிப் பரந்த பராபரன்
காரொன்று கற்பகம் ஆகநின் றானே"

"பராபரன் ஆகிப்பல் ஊழிகள் தோறும்
பராபரன் ஆய்இவ் அகலிடம் தாங்கித்
தராபரன் ஆய்நின்ற தன்மை உணரார்
நிராபரன் ஆகி நிறைந்து நின்றானே"

எனும் திருமந்திரங்கள், பராபர நுட்பத்தைப் பலவாறு படிப்பதை அறிந்துளம். பரம்+அபரம்--பராபரம்; பரம்-மேல் நிலை; அபரம் - அதன் சார்புச் செய்தி.

'இலகுபரா பரமாய்' என்பதில் இவைகளை எண்ணச் செய்கிறார் வள்ளலார்.

அப் பராபரம், மெய்ம்மைக்கும் இன்பத்திற்கும் நடுவில் உள்ள ஞான சொரூபமாதலின், 'சித்பரமாய்' என்றார்.

உண்மை, அனுபவ உவகை, உபசாந்தம், ஞானக் காட்சி, நிபிட ஆநந்தம், மீதான விளக்கம், பராபரம், சிற்பரம் எனப்பெறும் சொரூப மயமான சிவம், அன்பர்களது சிறந்த இதயச் சிற்றம்பலத்தில் இன்ப மயமாகி இருக்கின்றது ஆகலின், 'அன்பர் இதயமலர் மீது இருந்த இன்பத் தேவே' எனும் நுட்பங்களை, ஓதும்பொழுதே உளம் நெகிழ்கிறதே. (ஓம்) (2)

**வித்தாகி முளையாகி விளைவ தாகி**
**விளைவிக்கும் பொருளாகி மேலு மாகிக்**
**கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்**
**குறைவாகி நிறைவாகிக் குறைவி லாத**
**சத்தாகிச் சித்தாகி இன்ப மாகிச்**
**சதாநிலையாய் எவ்வுயிர்க்கும் சாட்சி யாகி**
**முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ**
**முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே.**

(ப-ரை) வித்து ஆகி - (எதற்கும்) விதையாகி; முளை ஆகி - அங்குரம் ஆகி; விளைவது ஆகி - விளையும் பயிராகி; விளைவிக்கும் பொருள் ஆகி - விளையுமாறு செய்யும் உள் பொருளாகி; கொத்து ஆகி - (கொத்துக் கொத்தாய்க்) குவிவாகி; பயன் ஆகி - பயனான தான்யம் பலவாகி; கொள்வோன் ஆகி - அறுவடை செய்து பயனைக் கொள்பவன் ஆகி; குறைவு ஆகி நிறைவு ஆகி - குறைவும் நிறைவுமான கூட்டம் ஆகி; குறைவு இல்லாத சத்து ஆகி சித்து ஆகி இன்பம் ஆகி - ஒரு குற்றமும் இல்லாத மெய்யறிவு இன்பமயமாகி; சதா நிலை ஆய் - எப்பொழுதும் நிலைபெறுவது ஆகி; எவ்வுயிர்க்கும் சாட்சி ஆகி - எல்லா சீவர்கட்கும் கண்காணிப்பான சான்றாகி; முத்து ஆகி - முத்துப்போல் ஒண்மையும் வெண்மையும் உடையதாகி; மாணிக்கம் ஆகி - மாணிக்கம் போன்ற மதிப்புடையதாகி; தெய்வ முழுவயிரத் தனி மணியாய் முளைத்த தேவே - தெய்வீக முழுமையுள ஒப்பற்ற வயிர மணியாய் (இயல்பில்) தானே தோன்றிய தெய்வமே, (எ-று)

(வி-ரை) தோற்றம் நிலை இறுதி மூன்றற்கும் முதற்காரணமான மாயையே வித்து. மாயையின் இருந்து முளைக்கும் முளையே உலகம். வித்தில், கிளை முதலியன நுண்மை உருவில் நுடங்கி யிருந்து வெளிப்படல் போல், இயங்குநிலை நிலைத்திணைகள் விரிவாக அம்மாயையி லிருந்து வெளிப்படுகின்றன. இதனை, 'வித்தாகி முளையாகி விளைவதாகி' என்றார். அவ் விளைவிற்குச் சிற்சத்தி துணைக்காரணம் ஆதலின், 'விளைவிக்கும் பொருளாகி' எனப் பெற்றது. நிமித்த காரண நிமலன், அச்சத்தியொடு நிற்றலின், 'மேலுமாகி' என்றார்.

மாயையானது, தனுகரண புவன போகங்களாக உருக்கொண்டு, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் கால வரம்பில் கட்டிப் படுத்தி, கன்மத்து அளவில் நானிலத்து உயிர்களை நடத்தும்.

காலத்தின் பின், விளங்குமாறு நியதி தத்துவம் வெளிப்பட்டு, ஆணவ மறைப்பைச் சிறிது அகற்றும்; அதனுடன் கனிவொடு கிரியா சத்தியைச் சிறிது காட்டும்; போகத்தில் வினைக்கீடாகப் புகுத்தும்.

கலா தத்துவத்தி லிருந்து வித்தியா தத்துவம் வெளிப்பட்டு, ஆன்ம அறிவைச் சிறிது தூய்மையாக்கும். வித்தையிலிருந்து அராக தத்துவம் வெளிப்பட்டு, ஆன்மாவின் வித்தக இச்சா சக்தியை விளக்கி, சிறக்க உயிரைச் செலுத்தும். கலைவித்தை அராகம்

மூன்றும், இச்சை, செயல், அறிவு மூன்றையும் விளக்கிய பொழுது, காலமும் நியதியும் அதனுடன் கலந்து கொள்ளும். அந்நிலைக்கு ஆளாகும் உயிரே புருட தத்துவம்.

இப்படி ஒன்றன்பின் ஒன்றாய்ப் பொருந்தி நிற்றலால், 'கொத்தாகிப் பயனாகி' என்றார். இவைகளின் பயனை ஏற்பவன் ஆன்மா. அந்த ஆன்மாவில் பரன் அமர்தலின், 'கொள்வோன் ஆகி' என்றார்.

வியாபகப் பரன், அவைகளில் வியாப்பியமும் ஆனவன் ஆதலின், 'குறைவாகி நிறைவாகி' என்றார்.

ஊடியும், இவைகளில் கூடியும், ஒதுங்கியும் உள்ள பொருளாதலின், 'குறைவிலாத சத்தாகி சித்தாகி இன்பமாகி' என்றார்.

உலகம் உதயமான அன்றுமுதல், வாழும் உயிர்கள் முத்துபெறும் வரை, அவைகளை விட்டு அகன்றிலன்.

ஆன்மாக்களில் இச்சை கிரியை செயல்களையும், அதனால் விளையும் அவஸ்தைகளையும், இறப்பு பிறப்பு எனும் இவைகளையும் என்றும் சான்றாக இருந்து நோக்கலின், 'சதாநிலையாய் எவ்வுயிர்க்கும் சாட்சியாகி' என்றார்.

விதைக்கு ஒப்பானது மாயை. நிலத்திற்கு ஒப்பானது சிவசக்தி. நீர்க்கு ஒப்பானது சத்தியினது சங்கற்பம். முளை முளைப்பதுபோல், இதன்வழி உலகம் உருவம் கொண்டெழும்.

விதைக்கு ஆதாரம் நிலம்; குளிரும் நிலம்; குளிர் நிலத்தில் கிடந்த விதை, தனியே எழுந்து தலை காட்டும். நிலமும் நீரும் இன்றேல், முளை விதையில் இருந்து முளைக்காது; அதுபோல் சத்தியின் சங்கற்பம் இலதேல், ஒரு செயலையும் மாயை செய்ய முடியாது. இவைகளின் வழி உயிர்களின் வினைகட்குத் தக்க உடல்களை உதவி, கனிவோடு பரமன் அவைகளைக் காப்பாற்றுகின்றான்.

விந்து தத்துவம், வெண்மை ஒளிமயம். அதை 'முத்தாகி' என்பதில் அறிவித்தார்.

நாதம் செவ்வொளி வண்ணம். அதை மாணிக்கம் என்று அறிவித்து மகிழ்ந்தார். என்றும் இளமையும், எதனாலும் அழியாமையும் இறைவண்ணம் ஆதலின், 'தெய்வ முழு வயிரத் தனி மணியாய்' என்பதில் எவ்வளவோ பெரிய உண்மைகள் இணங்கியுள. தன்னைத் தோற்றுவித்தார் இல்லை; தாயுதரம் காணாத் திருமேனி யாதலின், 'முளைத்த தேவே' என்று கூப்பிய கரம் கொண்டு கும்பிட்டபடி. "வித்தினில் அன்றி முளையில்லை, அம்முளை வித்தினில் அன்றி வெளிப்படுமாறில்லை, வித்தும் முளையும் உடனல்ல வேறல்ல, அத்தன்மை ஆகும் அரன்நெறி தானே" எனும் திருமந்திரம் இங்கு எண்ணத் தகும். மகாதேவ மாலையில் வரும் இத்தகைய பாசுரங்கள், காரணமாலையணி என்று கருதப் பெறும். (3)

**வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்**
**மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி**
**நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்**
**நடுவாகி நவநிலைக்கு நண்ணா தாகி**
**மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நினற**
**முதலாகி மனாதீத முத்தி யாகி**
**வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்**
**மவுனவியோ மத்தினிடை வயங்கும் தேவே.**

(ப-ரை) வேதாந்த நிலை ஆகி - வேத இறுதியில் நிலை பேறாக விளங்குவதாய்; சித்தாந்தத்தின் மெய் ஆகி - (புனித) சித்தாந்தம் கூறும் மெய்ப் பொருளாகி, சமரசத்தின் விவேகம் ஆகி - சமரச சன்மார்க்கத்தின் அதிகூர்மை அறிவாகி; நாதாந்த வெளி ஆகி - வீடுபேற்று இறுதியில் விளங்குவது ஆகி; நவ நிலைக்கு நண்ணாது ஆகி - (விந்து, நாதம், பரவித்து, பரநாதம், அபரவித்து, அபரநாதம், திக்கிராந்தம், அதிக்கிராந்தம், அருள் எனும் அரிய) ஒன்பது நிலைகட்கும் அப்பாற்பட்டது ஆகி; மூதாண்ட கோடி எல்லாம் தாங்கி நின்ற முதல் ஆகி - மிகப் பழைய அளவான அண்டங்கள் அனைத்தையும் தாங்கி நின்ற பரம் பதியாகி; மன அதீத முத்தி ஆகி - (விரைந்து செல்லும்) மனத்திற்கு எட்டாத விடுதலையின் இடமாகி; வாது ஆண்ட சமய நெறிக்கு அமையாது - (சால்பற்ற) சொற்போரைக் கையாளும் சமய நெறிகட்கு அகப்படாதது ஆகி; மவுன வியோமத்தின் இடைவயங்கும் தேவே - மவுனம் ஆகிய வெளியின் நடுவில் மிளிரும் தெய்வமே, (எ-று)

(வி-ரை) வேதம் - (அறியத் தக்கவைகளை) அறிவிப்பது எனும் காரணப் பொருள் தரும் வடசொல். வேதாந்தம் என்பது, வேத இறுதியில் உள்பொருளாக இருப்பவை; இவைகள் உபநிஷத்துக்கள் எனப்பெறும். மறைப் பொருளான உபநிடதங்களின் மறைந்துளன் பரன்; நிறைவின்றிப் பிறருரைக்கும் செய்திகள் நிலையாகா; நிறைவுள இவைகள் கூறும் செய்திகளே நிரந்தரம் ஆனவை. இதை 'வேதாந்த நிலை ஆகி' என்று விளக்கினார். வேத+அந்தம்=வேதாந்தம்; இது வடமொழிப் புணர்ச்சி தீர்க்க சந்தி.

வேதாந்தம் முழுமை; சிறந்த அதன் சாரமே சித்தாந்தம்; தேர்ந்து தெளிந்த தீர்வை என்பது இதன் பொருள். "வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்", "பிறநூல் திகழ் பூர்வம், சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்" எவ்பது அருணந்தி சிவத்தின் அறிவிப்பு.

விமலன் அடி எய்தலே வீடுபேறு; ஊன்றி அனுபூதியால் இதனை உணர்ந்தோர், பரந்த ஞான சொரூப பரத்தை அடைவர். "காலும் தலையும் அறியார் கலதிகள், கால் அந்தச் சத்தி அருள் என்பர்" என்பது திருமந்திரம். அருளை சத்தி என்பது உபசார வழக்கு.

"ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர் ஞான விளக்கினை யேற்றி, நன்புலத்து ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு, இடர் ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே"; "ஊன்

கெட்(டு) உயிர்கெட்(டு) உணர்வுகெட்(டு) என் உள்ளமும் போய், நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்று சிறக்கக் கூறும் இதுவே சித்தாந்தம். 'சித்தாந்தத்தின் மெய்யாகி' என்பது, சிந்தனைக்குரிய செய்தி.

ஒன்றிய நிலை, சமரசம் என்று உணரப் பெறும். ஆக்கமும் கேடும் ஆவதாய், ஒவ்வொரு காலத்தும் தேசத்தும் ஒன்றுபட்டு வேறுபட்டு, உரிய சுட்டறிவிற்கு உட்பட்டு, இம்மை மறுமை யின்பங்கள் இந்திர சால வித்தை போல் உதிக்கும் பொழுதே இலவாகி, கனவு போல் முடிவு காட்டாது இடை யிடை அழிதலும், கானல் நீர்போல் நிலை பெறாமையுடைய பொய்ம்மையில் புத்தி போகாதவர்க்கே சமய சார்பு சித்திக்கும். அரிய மெய்ந்நிலையை அவர்கள் அறிய முயல்வது இயற்கை. அது கருதி, கலைகளை ஊன்றிக் கற்பர். கலையுரைத்த கற்பனையில் கண் கலங்கி நிற்பர் அவ்வளவுதானா செய்தி?

ஆன்மாவும் இறைவனும் அபேதம் என்பது அரிய மறைகளின் அறிவிப்பு. ஆன்மா வேறு, கடவுள் வேறு என்று செவ்விதின் கூறும் சித்தாந்தம். மாறுபாடு இவை கண்டு மதி மருள்கிறது. எது சரி. இவைகளை அறிவிப்பார் இல்லையா? காலம் வறிது கழிகிறதே என்று கண்கலுழ்ந்து நிற்பர்.

"வேத ஆகமச் சென்னியில் விளைபொருள் அபேதம்
பேதம் ஆகிய பிணக்கறுத்து, இருள்பிணி அவிழ்த்து
நாதன் ஆகிய தன்னையும் என்னையும் நல்கும்
போதன் ஆகிய குருபரன் வருவது எப்பொழுதால்"

என்று ஏங்கும் நிலையில், ஆன்மாவில் ஒளிரும் அருட்சுடர் வித்தகக் குருவாகி வெளிப்படும்.

ஆன்மாவும், அருளிறையும் பொருள் தன்மையால் வேறு; கலப்பால் ஒன்றுகாண்! மல நீக்கத்தின் பொருட்டு, அதுவே நான் எனப் பாவித்தால், விமலன் ஆன்மாவின் வேறல்லன் என்பது வெளிப்படும் என்று, அறிவித்துத் தெளிவிப்பன் அந்த ஆசாரியன்.

"கண்ட இவை அல்லேன் நான் என்றகன்று, காணாக்
 கழிபரமும் நானல்லேன் எனக்கருதி, கசிந்த
தொண்டினொடும் உளத்(து) அவன்றான் நின்றகலப் பாலே
 சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி;
விண்டகலும் மலங்க ளெல்லாம்; கருடதியா னத்தால்
 விடமொழியும் அதுபோல விமலமதை அடையும்;
பண்டை மறைகளும், அதுதான் ஆனேன் என்று
 பாவிக்கச் சொல்லுவது இப் பாவகத்தைக் கானே"

என்று அருணந்தி சிவனார் இங்ஙனமே அறிவித்துளர். இவ்வளவு செய்தியையும், 'சமரசத்தின் விவேகம் ஆகி' என்று சுருங்கலாற்றுச் சொற்களில் வள்ளலார் அறிவிக்கும் அருமையே அருமை. இதை, "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகம்" என்று தாயுமானவர் அறிவிப்பர். இன்னும் இதனை ஒருபடி மேலேறிப் பார்ப்பம்.

"வேதாந்த சித்தாந்த சமரசம், யோகாந்த கலாந்த சமரசம், போதாந்த நாதாந்த சமரசம், இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். ஆதலால், சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்க, அது சுத்த சமரச சன்மார்க்கமாம்"

"எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வமாக்கி, தான் உத்தரத்தினின்று மருவியது சமரசம். இதற்கு அனுபவம் குரு துரிய ஸ்தானம்." இவைகள் வள்ளலாரிற் கண்ட வசனப் பகுதிகள்; மறக்க முடியாதவை; மனனத்திற்கு உரியவை.

குருமுகமாக ஊன்றி இவைகளை உணர்ந்த பின், உள்முக சாதனை உருவாகும். அந்நிலையில் நலம் சிறந்த நாதம் எழும். ஒன்றன் பின் ஒன்றாய், பத்து நாதம் படர்ந்து வரும். உருவான அவைகள், முறையே சூக்கும விண்ணில் சென்று சுழிக்கும். நாதம் ஒடுங்கும் இடம் நம்பன் சொரூபம் என்று அறிந்து ஆநந்தம் அடையும் அந்நிலை, 'நாதாந்த வெளியாகி' என நவிலப் பெற்றது.

நாதத்தின் வழியே நாதனில் கூடுவது போன்றும், பிரிதல் போன்றும் அனுபவம் தோன்றி, அலமருகின்றது ஆன்மா. பெருகிய முத்தாந்தம் அங்கே பிறக்கிறது. ஆம். ஆம். அப்போது தனு கரண புவன போகத்தில் இருந்து விலகவேண்டும் என்னும் விடுதலை உணர்வு விளைகிறது. 'முத்தாந்தத்தின் நடுவாகி' என்று அந்த இடம் எண்ணப்பெறுகிறது. (முத்த+அந்தம்=முத்தாந்தம்; இது, விடுதலை நிறைவு எனும் பொருளது.) பந்த இறுதியின் நடுவானது புரம்.

இம்மை மயமாகி ஏமாறும் நம்மை, அருளொடு வள்ளலார் அருளும் அறிவிப்புகள், எங்கெங்கேயோ ஈர்த்துச் செல்வதை இங்கே அறிந்து கொள்கிறோம்.

(1) அண்ணாக்கின் மேல் இரண்டரை அங்குலத்தில் உள்ள புருவ நடுவில் விந்து.
(2) அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் நாதம்.
(3) அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் பரவிந்து.
(4) அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் பரநாதம்.
(5) அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் திக்கிராந்தம்.
(6) அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் அதிக்கிராந்தம்
(7) அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் சம்மௌனம்.
(8) அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் சுத்தம்.
(9) அதற்கு மேல் இரண்டரை அங்குலத்தில் அதீதம்.

தியான அனுபவ காலத்தில் தரிசனம் ஆகும் இவைகள் ஆன்மா படியேறும் கிரமங்கள்; அந்த ஒன்பது நிலைகளும் கடவுள் சொரூபத்தைக் காட்டுவது அன்றி, தாம் அறிந்து ஆநந்திப்பவை அல்ல. இவைகள் ஏறுபவரை ஏறவிடும் ஏணிப்படி போல்பவை. ஆதலின், 'நவநிலைக்கும் நண்ணாதாகி' என்கிறார்.

முதுமை+அண்டம்=முதண்டம் என நின்றது; முதுமை எனும் பண்புப் பெயர், ஈறு கெட்டு ஆதி நீண்டது என்பது இதற்கு இலக்கனம். கோடி என்பது அளவின்மை எனும் பொருட்டு,

பரத்தின் பேருருவில், அளவிலா அண்டங்கள் பேன் முட்டைகள் போல் அதி நுண்மை அளவாகி அடங்க, அவைகள் அனைத்தையும் லேசுபடத் தாங்கும் தரம் உணர்ந்து, 'முதாண்ட கோடி எல்லாம் தாங்கி நின்ற முதலாகி' என்றார்.

கூட்டில் அடக்கினாலும், குரங்கின் சேட்டை குறையாது; அதுபோல் எவ்வளவுதான் லயப்படுத்தினாலும், தான் போகும் வழியெல்லாம் ஆன்ம அறிவை ஈர்த்துச் செல்லும் பேதை மனம்.

விளக்கின் திரிமேல் ஏறிய சுடர், சிறிது சிறிதாகத் திரியைத் தின்று, இறுதியில் முழுவதையும் விழுங்கிவிடும். அதுபோல் மேற்சொன்ன சாதனை வழியில் திருவருட்போதம் வரவர வளர, மனப் போராட்டம் தானே மடங்கி ஒடுங்கும். அந்த நிலையில் விளையும் அனுபவம் ஆதலின், 'மனாதீத முத்தியாகி' என்றார். இது பத முத்தி என்ற பெயர் பெறும்.

தருக்க நியதி தவறாமல், அனுபவம் சிறிதும் இல்லாமல் மதநூற்களை ஆதாரம் காட்டி வாய் வாதம் இடுவார் மதவாதிகள்.

வீடு பேறு, தானே விளைவதா? ஆன்மா தானே தேடித் தழுவுதா? இறையும் உயிரும் முயல்வதன் விளைவா? அம்முத்தி, யாக்கையின் அழிவிலா? ஆக்கை மாறி புதியதொரு உடலில் புகுந்த பின்னரா? மனோலயப்படுதலா? அறியாமை நீக்கத்திலா? சத்துவ குணத்திலா? அந்தராத்மாவில் ஒடுங்கலா? சீவகரணம் சிவகரணம் ஆதலா? ஐக்கியமாதலா? சிவமயம் ஆதலா? என்று எள்ளும் கொள்ளும் வெடிப்பது போல் முன்னிலைப் படுவாரைத் திணர வைப்பது இவர்கள் திறம். இங்ஙனம் உலகாயதம், நிரீசுர சாங்கியம், கன்ம மீமாம்சை, ஏகான்மவாதம், பௌத்தம், ஆருகதம், தருக்கம் முதலிய எந்தச் சமய நெறிகளும் எட்டிப் பிடிக்க இயலா வண்ணம், மோனம் என்னும் ஞான விண்ணில் முறுவலிக்கும் பெருமானை, 'மவுன வியோமத்தினிடை வயங்கும் தேவே' என்று ஏத்திப் போற்றி இறைஞ்சியபடி, இப்பாசுரத்தின் உள்ள ஒன்பது நிலைகளும் சாதகர் காணும் சால்புகள். (4)

**தோன்றுதுவி தாத்துவித மாய்வி சிட்டாக்**
**துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்**
**சான்றசுத்தாத் துவிதமாய்ச் சுத்தம் தோய்ந்த**
**சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி**
**ஊன்றுநிலை வேறொன்றும் இலதாய் என்றும்**
**உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்**
**ஈன்றருளும் தாயாகித் தந்தை யாகி**
**எழிற்குருவாய்த் தெய்வதமாய் இலங்கும் தேவே**

(ப-ரை) தோன்று துவிதம் ஆய் - (புத்திக்குப்) புரிகின்ற துவைதப் பொருள் ஆகி; அத்துவிதம் ஆய் - அத்வைதப் பொருள் ஆகி; விசிட்ட அத்துவிதம் ஆய் - (அழகிய) விசிட்டம் சேர்ந்த அத்வைத நெறி ஆகி; கேவல அத்துவிதம் ஆகி - ஏகமே ஆன அத்வைத வழி என்றாகி; சான்ற சுத்த அத்துவிதம் ஆய் - நிறைவுடைய சுத்த அத்வைதப் பொருளாகி; சுத்தம் தோய்ந்த சமரச அத்துவிதமும் ஆய் - புனிதம் பொருந்திய சமரச அத்வைத அனுபவம் ஆகி; தன்னை அன்றி ஊன்று நிலை வேறு ஒன்றும் இலதாய் - (உயிர்கள் அனைத்தும்) தன்னை அல்லாமல் ஊன்றுதற்குரிய ஆதாரம் வேறு ஒன்றும் இல்லாததாய்; என்றும் உள்ளதாய் - எக்காலத்தும் உள்ள பொருளாகி; நிர் அதிசய உணர்வாய் - அதிசயித்தற்கு இல்லாத உணர்வு சொரூபம் ஆகியும்; எல்லாம் ஈன்று அருளும் தாய் ஆகி தந்தை ஆகி - அனைத்து உயிர்களையும் படைத்துக் காக்கும் அம்மை அப்பன் ஆகி; எழில் குரு ஆய் - எழுச்சியை யுடைய குரு ஆகி; தெய்வதம் ஆய் இலங்கும் தேவே - வழிபடும் இறையாகி விளங்கும் (மா) தேவனே, (எ-று)

(வி-ரை) அறிவித்தால் அறிவது ஆன்மா; அசைவித்தால் அசைவது யாக்கை. ஆன்மா யாக்கையை ஆள்கிறது. ஆன்மாவை அத்தன் ஆள்கிறான். ஊன்றி நினைத்தால் இவ்வுண்மை விளங்கும்.

சிற்றறிவும் சிறு தொழிலும் உடையது; ஆணவத்திற்கு அடிமைப்பட்டது; என்றும் சுதந்திரம் இல்லாதது சீவன். பயனான பேரறிவும், படைப்பாதி ஐந்தொழிலும், நிமல சுதந்திரமும் உடையவன் இறைவன். இறைவனையும், ஆன்மாவையும் தூய உணர்வுடன் இங்ஙனம் பிரித்துக் காண்பது **துவைதநிலை**. (த்வி - இரண்டு; த்விதா - இருதிறன்) துவைதிகள் நிலைக்கு உரியபடி, இணங்கியுளன் எம்மான். இது ஆஸ்திக சாதனையின் ஆரம்ப நிலை. இதனை, 'தோன்று துவிதமாய்' என்றார்.

வியாபக வியாப்பிய நிலையில், இதனினும் உயர்ந்தது அத்வைதம். (ந+த்வைதம்=அத்வைதம்; "சொன்ன மொழிப்பொருள் நீக்கும் நகாரம், அச்சொல் முன் மெய்யேல், அந்நிலையாக உடல் கெடும்; ஆவிமுன் ஆகின், அது தன்னிலை மாற்றிடும்" என்னும் வீரசோழிய இலக்கண விதிப்படி, த்வைதம் எனும் மொழிமுதலில் மெய்வந்தமையின் நகர மெய் கெட்டு, எஞ்சிய அகர உயிர் த்வைதத்துடன் சேர்ந்து அத்வைதம் என நின்றது. இது வடமொழிப் புணர்ச்சி. முன்னின்ற அகரம், உண்மை இன்மை அன்மை எனும் முப்பொருளையும் தரும். இந்த அகரம் செய்த கூத்து ஆயிரம் ஆயிரம். (உயிரும் இறையும் என) இரண்டில்லை; (உயிரும் இறையுமென) இரண்டுண்டு; (உயிரும் இறையுமென) இரண்டல்ல என இப்படி யெல்லாம் பொருள் கொண்டு, பொருபொருத்துச் சமயவாதிகள் போரிடலாயினர். அவர்களது பரிபாகம் அறிந்து, அவர்கள் விரும்பியவா றெல்லாம் முப்பொருளிலும் தங்கி முறுவலிக்கின்றது மெய்ப்பொருள்.

சித் அசித் ஈசன் என்னும் முப்பொருள் குறித்து, விரிவாக விளக்கம் கூறுகிறது **விசிட்டாத்வைதம்**.

மாமரம் எனில், அதற்கு இனமான வேறு மரங்களும் உள; அதுபோல் பரப்பிரமத்திற்கு இனமான ஞானம் உடையது ஆன்மா; இது, ஸஜாதீயம் எனப்பெறும்.

மாமரத்தில் இனம் அல்லாத மலை முதலியனவும் உலகில் உள; அதுபோல், பரப்பிரமத்திற்கு இனமில்லாத ஞான சூன்யமானது மாயை; இது, விஜாதீயம் எனப்பெறும்.

மாமரத்தில் மலர் காய் கனி முதலியன உள்; அதுபோல், பிரமத்திற்குக் குணங்களும் குறிகளும் உள; இது, ஸ்வகதபேதம் எனப்பெறும்.

இந்த விசேடங்கள் இன்றி யிருப்பது ரஹிதம்; இந்த இருப்பை நிர்விசேடம்.

சித் எனும்  ஜீவனும், அசித் எனும் மாயையும், ஈசன் எனும் பரப்பிரமமும் என்றும் உள்ளவை.

ஆன்மாவும் மாயையும் இறைவனால் வியாபிக்கப் பெற்று, அவனுக்குத் திருமேனிகளாய், அவனது ஆற்றலுக்கு உட்பட்டுள.

ஒருவர் நான் என்று ஆன்மாவையும், என் உடல் இளைத்தது பருத்தது என்று உயிர்க்கும் உடற்கும் உள்ள ஒற்றுமை நயத்தால் உரைப்பதுபோல், சித் அசித் ஈசன் மூன்றும் அபேதம் எனினும், ஈசன் குறைவிலா ஞானானந்த சொரூபன்; சர்வ வியாபகத்வம் முதலியன உடையவன்.

ஆன்மா ஞானமுடையது ஆயினும், அந்த ஞானம் வளர்தல் சுருங்குதல் உடையன; அணுவாக இருத்தல் முதலியவைகளால், ஈசனிலும் வேறுபட்ட தன்மையன.

பிரகிருதி, ஞான சூன்யம்; அது விகாரம் அடைவது; ஈசனிலும் ஆன்மாவிலும் வேறுபட்ட தன்மையது; இதுவே மூன்றற்கும் உள்ள பேதம்.

உயிர்கள் மாயையின் தொடர்பால் கூடிய அறிவு குறைந்து தீய நெறியில் செல்லுதல் இன்றி, சாஸ்திர ஞானத்தாலும் ஆசாரியன் உபதேசத்தாலும் உயர்ந்த ஞான ஒழுக்கம் எய்தி, கருமம் - ஞானம் - பக்தி - பிரபத்தி முதலிய கம்பீரமான உபாயங்களைக் கடைப்பிடித்து, இறையருள் எய்தி, அதன்மூலம் பரமபதம் அடைத்து, நித்திய இன்பப் பேறான ஈசுவர சாமியம் பெறுவன.

அன்பைத் தன்பால் கொண்ட ஆன்மாக்களும், மாபெரும் தன் விபூதியான மாயையும், கூர்த்த தயை முதலிய மங்கள் குணங்களும், உரிய சர்வ சக்திகளும் உடையதாய், இத்தகைய விசேடங்களை யுடைய வேறு ஒரு பிரமம் தனக்கு இரண்டாவதாகச் சொல்லற்கு இன்றியுளது பரப்பிரமம் என்பது, சிறந்த விசிட்ட அத்வைதம் கூறும் செய்தி.

இராம சுக்கிரீவர்கள் ஐக்கியமாக இருந்தனர் என்பது போல், மோட்சத்தில் பரப்பிரமமும் ஆன்மாவும் கூடி யிருக்கும் என்பது அவர்கள் கொள்கை. அவர்கள் எண்ணும் அந்நிலைக்கு ஏற்ப இறைமை இணங்கியுள தாகலின், 'விசிட்டாத்துவிதமாய்' என்றார்.

ஆன்மாக்கள் யாவும் அறிவின் இனங்கள். இவைகள் பிரமத்தின் இனங்கள் என்று எண்ணுவதுதான் அறிவுடைமை. அறிவிலாப் பொருள்கள் அனைத்தும் பிரமத்தின் பிற இனங்கள். பேசிய இவைகட்கு எல்லாம் முதற்காரணம் பிரமமே என்பது, தீவிர ஏகான்ம வாதிகளின் தீர்ப்பு.

இவர்கள் அத்வைதத்தின் முதலெழுத்தான அகரத்திற்கு இன்மைப் பொருள் கொள்வர். இரண்டில்லை, பொருள் ஒன்றேநான் என்பது குறிப்பு "ஏகமே அத்விதீயம் ப்ரஹ்ம" என்பது, பைங்லோப நிடதம். "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என்பது யஜுர் வேதம். சிவம் வேறு சீவன் வேறு என்னும் துவித பாவனை எங்கட்கு இல்லை. எவன் நாம் பிரமம் என அறிகிறானோ அவனே யாவும் அறிந்தவன். இவைகளைக் குறித்து யுக்தி வாதம் பல எழலாம். முயல் கொம்பு, ஆமை மயிர், கானல் நீர் என்பவை வெறும் சொல் ஜாலம்; உண்மையில் அவைகள் இல்பொருள்கள். எந்த வாதங்களும் அதுபோல்தான் ஆகும். நான் பிரமம். அந்த ஆத்ம சொரூபத்திற்கு அயலாய் வேறு ஒரு பொருள் இல்லை என்பது கேவலாத்வைதிகளின் செய்தி. இஃது ஏகான்ம வாதம் என்றும் சொல்லப்பெறும். இங்ஙனம் இயம்புனர் நிலைக்கு ஏற்றபடியும் எம்மான் இணங்கி யிருத்தலின், **கேவலாத்துவைதம்** ஆகி என்கிறார்.

அலியெனில், அது ஆணுமன்று பெண்ணுமன்று என்று அறிவம். வாயில் எனில், அது உள்ளுமன்று வெளியுமன்று என்று உணர்வம். நடு எனில், அது அடியுமன்று முடியுமன்று என்று எண்ணுவம். சோறு எனில், அது அரிசியன்று குழை கூழுமன்று என்று குறிப்பம். மாலை எனில், அது இரவுமன்று பகலுமன்று என்றுதெரிவம், அதுபோல் அத்துவிதம் எனில், அது ஒன்றுமன்று இரண்டுமன்று என்று அறிந்து கொள்வது இயற்கை. பிரித்துக் காண இயலா அளவு, சீவன் சிவன் இரண்டன் சம்பந்தம் அத்வைதம். இங்கே அகரம் அன்மைப் பொருளைத் தந்தது.

சுழுத்தியில் இறையும் உயிரும், வியாபக வியாப்பியமாகி விளங்கும்.

பதி எனும் பிரமம் சத்து; அறிவு விளக்கம் அற்ற ஆன்மா, நிலை பெற்ற சத்து அல்லன்; அறிவித்தாலும் அறியாத பாசப் பொருளான அசத்தும் அல்லன்; எனவே ஆன்மா சதசத் என்று அறியப் பெறுபவன்.

அகில உலகையும் வடிவாக் கொண்ட அட்ட மூர்த்தமும், அருவுருவான சதாசிவம் ஆற்றும் ஐந்தொழிலும், மாபெரும் சுதந்திரத்தால் உருக்கொண்ட மகேச்சுர வடிவும், இவர்களால் விளையும் பதமுத்திகளும், ஆன்ம போதத்தால் சுட்டி அறிதற்கு அரிய அருவமான சொரூபமும், சுட்டிக் காட்ட வந்த குருதிரு வுருவும், நிட்டையில் தோன்றும் அதிசய நிலைகளும் கரந்துவிடும் போத ஒழிவில், உயர்ந்த ஆநந்தம் உதிக்கும். அதனை உணர்ந்து அதீதப் படுவது சுத்தாத்வைதம். அதீதப் படுமுன் புலனாவது துவைதம் என்பர்; இந்நிலையினர்க்கு அரிய நெறியில் அருளலின் "**சான்ற சுத்தாத்துவிதமாய்**" என்றார். (சான்ற - நிறைவான)

"பண்இசை, வெம்பரிதி மதி, திலதயிலம், தீயிரும்பு பாணி உப்பு
விண்அநிலம், உடல்உயிர், நீர்நிழல், உச்சிப்பளிங்கு, பகல்விளக்கு, பால்நீர்,
கண்இரவி, உணர்வு ஒளிபோல் பிரிவரிய அத்துவிதக் கலவி"

(திலம் - எள்; தைலம் - நெய், பாணி - நீர், அநிலம் - காற்று, இரவி - சூரியன்)

இங்ஙனம் பரம சுத்தாத்வைதத்திற்குப் பன்னிரண்டு உதாரணம் காட்டினர் மாதவச் சிவஞான யோகிகள்.

"என்னாணை என்னாணை என்னாணை ஏகமிரண்(டு)
என்னாமல் சும்மா இருஎன்று -- சொன்னான்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞானவிநோ தன்"

என்பது ஒழிவிலொடுக்கம்.

"துவித நெறியே அத்துவித ஞானத்தை உண்டு பண்ணும் மார்க்கம் ஆகும்" எனும் திருவாக்கால் தாயுமான அடிகளார், "ஒன்றோ(டு) இரண்(டு) எனா சமரச சொரூப சுகம்" என்றும் வாயார அனுபவம் வழுத்தியுளர்.

எனவே இறைவேறு உயிர்வேறு எனும் துவித நிலையும், விசேடணம் கூட்டி விளக்கும் விசிட்டாத்வைத நிலையும், நானே பிரமம் எனும் அபேதவாத நிலையும், பதிபசுபாச நுட்பம் பகரும் சுத்தாத்வைத நிலையும், "அரும்பு மலர் காய் கனிபோல்" அமைந்துள. சாதனையில் அனைத்தையும் ஒருமுகப் படுத்துவது சமரசம். இது "அருங்கனி பிழிந்து சாரம்" கொண்டது போல்வது. இந்நிலையினர், "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை கண்ட" வித்தகர்கள். இவர்களை, ஷடாந்த சமரச ஞானிகள் எனினும் பொருந்தும். இவர்கள் தகுதிக்குத் தக்கபடி அருளும் இறைமையை, 'சுத்தம் தோய்ந்த சமரச அத்துவிதமும் ஆய்' என்றார்.

மேற்சொன்ன அனைத்திற்கும் ஆதாரம் ஆதலின், 'தன்னை யன்றி ஊன்று நிலை வேறு ஒன்றும் இலதாய்' என்றார்.

வெறும் சொல்லளவாய்ச் சென்று தேய்ந்து இறுதல் இன்றி என்றும் உள்பொருளா யிருத்தலின், 'என்றும் உள்ளதாய்' என்றார்.

அரிய தியான காலத்திற் காட்சியாகும் அதிசய அற்புதம் மிகப் பல. சொல்லளவாய்ச் சொல்லிக் காட்ட இயலாதபடி பேரறிவின் சொரூபமாகப் பிரகாசித்தலால், 'நிரதிசய உணர்வாய்' என்றார்.

மாதா பிதா குரு தெய்வம் எனும் வரிசைக் கிரம வழிமுறை உண்டு; அதற்கு ஏற்ப, எவ்வுயிர்க்கும் அம்மையப்பன் ஆதலின், 'எல்லாம் ஈன்றருளும் தாயாகித்

தந்தையாகி' என்றார். 'தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்' என்பது திருவருட்பாவின் ஒரு பகுதி.

துவைதம், அத்வைதம், விசிட்டாத்வைதம், கேவலாத்வைதம், சுத்தாத்வைதம், சமரசாத்வைதங்கள் ஒவ்வொன்றும் ஊன்றுநிலை.

உடலுண்டு; உடலில் உயிருண்டு; உயிருள் ஒளியுண்டு; ஒளியுள் இறை உண்டு; அந்த இறை குருமேனி கொண்டு, "மேல் சொன்ன ஊன்று நிலைகளில் சொற்போர் செய்து சுழித்தல் பிழை. பார்! ஒவ்வொன்றினும் பாமுளது பார்! பார்!" என்று வழிமுறை கூறும் ஆதலின், 'எழில் குருவாகி' என்றார். ஊன்றி உபதேசத்தை உணர்ந்து அந்நெறியில் ஆம்பொழுது, 'தெய்வதமாய் இலங்கும் தேவே' எனும் பகுதியை எண்ணும் பொழுதே கண்களில் இன்பநீர் கலுழ்கின்றதே! (ஓம்) (5)

**பரமாகிச் சூக்குமமாய்த் தூல மாகிப்**
**பரமார்ந்த நிலையாகிப் பதத்தின் மேலாம்**
**சிரமாகித் திருவருளாம் வெளியாய் ஆன்ம**
**சிற்சத்தி யாய்ப்பரையின் செம்மை யாகித்**
**திரமாகித் தற்போத நிவிர்த்தி யாகிச்**
**சிவமாகிச் சிவாநுபவச் செல்வ மாகி**
**அரமாகி ஆநந்த போத மாகி**
**ஆநந்தா தீதமதாய் அமரும் தேவே.**

(ப-ரை) பரம் ஆகி - அதி நுண்மைத் திருமேனியாகி; சூக்குமம் ஆய் - அருவ வடிவம் ஆகி; தூலம் ஆகி - (கண்கட்குப் புலனாகும்) பருமை உருவம் பலவாகி; பரம அர்த்த நிலை ஆகி - பரம் பொருள் எனும் அதிரகஸ்ய நிலை பேறு ஆகி; பதத்தின் மேல் ஆம் சிரம் ஆகி - பதமுத்திகட்கு எல்லாம் மேற்பட்ட தலையாய பரமுத்தியாகி; திருவருள் ஆம் வெளியாய் - திருவருள் ஆகிய (ஞான) விண்ணாகி; ஆன்ம சித்சத்தி ஆய் - ஆன்ம ஞான சக்தி ஆகி; பரையின் செம்மை ஆகி - என்றும் நிரந்தரமாக இருப்பதாகி; தற்போத நிவிர்த்தி ஆகி - (எவரிடத்தும் நிறைந்த) தன் முனைப்பை நீக்குவது ஆகி; சிவம் ஆகி - அரிய செம்மையை யுடையது ஆகி; சிவ அனுபவ செல்வம் ஆகி - (தியானத்தில் தேரும்) சிவானுபவத் திருவாகி; அரம் ஆகி - (அழுந்திய பந்த இரும்பை) அராவும் அரம் ஆகி; ஆநந்த போதம் ஆகி - (தெய்வ) இன்பத் தெளிவாகி; ஆநந்த அதீதம் அது ஆய் அமர்ந்த தேவே - ஆநந்த உச்சியது ஆகி அமர்ந்திருக்கின்ற தேவனே, (எ-று)

(வி-ரை) இயல்பாக என்றும் உள்ளது; அரிய கருவிகளான தத்துவங்கட்கு அப்பாற்பட்டது; போக்கு வரவு புரியாதது; காற்றும் விண்ணும் கலந்ததுபோல், உலகும் தானும் ஒன்றுபட்டது; அறிவிற்கு அறிவாய் அகண்டம் ஆனது பரவஸ்து; இது சுருதி கூறும் செய்தி. இதைப் 'பரமாகி' என்றார்.

"செம்மை முன்னிற்பச் சுவேதம் திரிவபோல்
அம்மைப் பரத்தொடு அனுவன்உன் ஆயிடப்
பொய்ம்மைச் சகமுண்ட போத வெறும்பாழில்
செம்மைச் சிவமேரு சேர்கொடி ஆமே"

[செம்மை - செந்தகம். சுவேதம் - வெள்ளை. பாதரசத்தை வெள்ளை என்றும், கெந்தகத்தைச் செம்மையென்றும் சித்தர்கள் பரிபாஷையாகக் கூறுவர். அணுவன் ஆன்மா. போத வெறும் பாழ் ஞானமாகிய வெட்டவெளி.]

பரவஸ்துவுடன் ஆன்மா கலக்கும் காலத்தில், உலகம் தோன்றா; ஞானவெளியில் சிவமாகிய மேரு மலை; அம் மலையில், தாவி ஆன்மாவாகிய கொடி தழுவிக் கொள்ளும்; இக்குறிப்பைத் திருமந்திரம் கூறுவதும் அறிந்துளம்.

மண்ணில் சருவர். நீரில் பவர். கனலில் உருத்திரர். காற்றில் உக்கிரர். விண்ணில் வீமர். உயிரில் பசுபதி. பரிதியில் ஈசானர். திங்களில் மாதேவர் என அருவமாய் விளங்கலின், 'சூக்குமம் ஆய்' என்றார்.

துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் கருதி, சுத்த மாயையாகிய பிரணவமே திருமேனிகளாகப் பெறுவன் பெருமான்; அதனுடன் சம்புட்ச சால்பின்படி பிரமன், திருமால், உருத்திரன், மகேசன் எனும் தனிப்பெரும் திருமேனிகளையும் தாங்குபவன். அவைகளில் ஈசான மந்திரம் சிரம்; தற்புருட மந்திரம் முகம்; அகோர மந்திரம் இதயம்; வாம மந்திரம் குய்யம்; சத்தியோ சாத மந்திரம் திருமேனி. இங்ஙனம் பருமைத் திருமேனிகளுடன், விராட் உருவம் கொண்டும் விளங்குவன். தூய அவைகளை உணர்ந்து, 'தூலமாகி' என்றார். (தூலம் - ஸ்தூலம்; பருமை எனும் பொருட்டு)

அறம் பொருள் இன்பம் வீடு என்பவை புருடார்த்தம்; பயனான முக்தி நெறியில் விளைவது பரமார்த்தம். (பரம+அர்த்தம்=பரமார்த்தம்; இரண்டும் வடசொற்கள்; பெறுதற்குரிய ரகஸ்யப் பேறு என்பது திரண்ட பொருள். "புருடர் வடிவு ஆனதே அல்லாது புருடார்த்தம் ஏதும் அறியேன்" என்று, தாயுமானவர் அறம் பொருளாகிய இன்பத்தின் ஈடுபாடு இன்மையை முதலில் எண்ணினார்; பரமார்த்தத்தைச் சிதம்பர ரகசியம் எனும் தலைப்பில் உள்ளுறை பொருளாகப் பல நுட்பங்களுடன் உணர்த்தியதும் இங்கு உணரத் தகும்.

சிறந்த அருள் நெறியில் செயல்படுவது சாதனம். அதன் விளைவு சாத்தியம். சாதனம் ஆரம்பம். சாத்தியம் நிறைவு. இரண்டன் இடையில் விளைவது பரமார்த்தம். "ஆணிப் பொன் அம்பலத்திலே கண்ட காட்சிகள் அற்புதக் காட்சியடி அம்மா" எனவரும் திருவருட்பா கீர்த்தனைப் பகுதிகளை இங்கு ஓதி உணர்வது நலம். சொல்லுருவில் இது குறித்து இவ்வளவு தான் சொல்ல இயலும்.

மண்ணையும் விண்ணையும் நீட்டல் அளவையால் அளத்தல் ஆகுமா? மலைகளை எடுத்தல் அளவையால் ஏந்தல் இயலுமா? முகத்தல் அளவையால் கடலை முகக்க முடியுமா? அதுபோல், சாலோக சாமீப சாரூபப் பதமுத்திகட்கு எல்லாம் மேற்பட்ட சாயுச்சிய பரமுத்தியைச் சொல்லளவில் சொல்லிக்காட்ட இயலாதே; 'பதத்தின் மேலாம்

சிரம்' என்று சிரமேல் கரங்கூப்பிச் சிந்திக்கும் போழ்து, இன்பக் கண்ணீர் பெரிதும் கலுழ்கிறதே! (ஓம். ஓம்.)

வாக்கை மௌனம் ஆக்கினால், போதம் வாய்க்கும்; அப் போதம் அடங்கிய பின், வித்தக அம்பலம் விளங்கும்; அதன் நடுவில், தற்பரத் திருவருள் தரிசனம் ஆகும். "உரை ஒடுங்கப் போதம் உதிக்கும். "ஒழிவே அருளாம்" என்று ஒழிவிலொடுக்கம் உணர்த்தும் இந்த அருமை, 'திருவருளாம் வெளியாய்' என்பதில் தெரிவிக்கப் பெற்றது.

அறிவிலாப் பொருள்கள் அனைத்திற்கும், யாதாயினும் ஒரு ஆற்றல் உண்டு; அறிவிக்க அறியும் பொருளான ஆன்மாக்கட்குத் துணையாக உளது ஆன்ம சத்தி. அச்சக்தி, வாக்கை யடக்க வழிவகை புரியும் ஆயினும், அது பாசநீக்கம் பண்ண அறியா. செம்பிற் களிம்பு போன்ற ஆணவத்தைச் சிற்சத்தி ஒன்றே நீக்க வல்லது. இவ்வகையில் ஆன்ம சக்தி வேறு, ஆன்ம சிற்சத்தி வேறு; இரண்டையும் ஒன்றென மயங்குவது மரபன்று. உத்தம் இவ்வுண்மையை உணர்ந்து, 'ஆன்ம சிற்சத்தியாக' அருளும் இறைநிலை என்று, கருணையொடு வள்ளலார் சமிக்ஞை காட்டுகிறார்.

அந்நிலையில், அச்சக்தி தரிசனத்தை அனுபவிக்கும் ஆற்றல் அமையும்; அந்த ஆற்றல் சொரூபமாகிப் பரம் அமைதலின், 'திரமாகி' என்றார்.

தற்போதத்தில் தருக்கு ஒன்றே தங்கும். கலைகளைக் கற்பதால் மட்டும் அது கழல்வது இல்லை. தன்னிழப்பு எய்தினாலன்றி, தற்பர தரிசனம் வாய்ப்பது இல்லை. அம்முனைப்பு அறிவு சிறிது ஆக அகல, அதற்கான சூழ்நிலைகளை விளைவிப்பன் அத்தன். அதை 'தற்போத நிவிர்த்தி ஆகி' என்பதில் அறிவிப்பார் ஆயினார்.

தற்போதம் உள்ளவரை சவம்; அஃது அகன்றபின் தரிசனம் ஆவது சிவம். உணர்வில் தங்கி உபதேசிப் பார்போல், 'சிவமாகி' என்று இடம் கண்டு உரைத்த அருமையே அருமை.

அருள் தரிசனம், பரை தரிசனம் சித்திக்க விளைவது 'சிவாநுபவம்', சிறந்த இதுவே 'செல்வம்' எனப்பெறும். பேறான இதனைப் பெற்றவர்கள், 'சிவன் செயலாலே யாதும் வரும் எனத்' தெளிவர்; பிறர் அவம்தரு நினைவால், பவத்தனைப் பெருக்கிப் பதைப்பர். சிவானுபவச் செல்வர்கள் மகாப் பிரபுக்கள் என்று மதிக்கத் தக்கவர்.

தொந்த பந்தங்கள், பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும்; தொல்லைகளையே இவைகள் தோற்றுவிக்கும். முற்பிறவிகப் பந்தம் இப்பிறப்பில் தோன்றா;

"இப்பிறவி என்னும் ஓர் இருள்கடலின் மூழ்கி, நான்
    என்னும் ஒரு மகரவாய்ப்பட்டு,
இருவினை எனும் திரையின் எற்றுண்டு, புற்புதம்
    எனக்கொங்கை வரிசை காட்டும்
துப்பிதழ் மடந்தையர் மயல்சண்ட மாருதச்
    சுழல்வந்து வந்தடிப்பர்,
சோராத ஆசையாம் கானாறு வான்நதி
    சுரந்ததென மேலும் ஆர்ப்பக்,
கைப்பரிசு காரர்போல் அறிவான வங்கமும்
    கைவிட்டு மதிமயங்கிக்,
கள்ள வங்கக் காலர் வருவரென் றஞ்சியே
    கண்ணருவி காட்டும் எளியேன்,
செப்பரிய முத்தியாம் கரைசேரவும் கருணை
    செய்வையோ? சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
    தேஜோ மயாநந்தமே"

என்று அத் தொல்லை தாங்காது துடித்துத் துதித்த ஆன்றோர் பாடல்கட்கு அளவே இல்லை. இத் துடிப்பின்வழி, சிந்தை முழுதும் சிவக்கனல் சிலிர்க்கும்; ஆக்கை முழுதும் காத்திருந்த பற்றுக்களை, அது அராவி அராவி அடியோடு அழிக்கும். அந்த அருமையை, 'அரம் ஆகி' என்று சுருக்கமாக் அறிவித்தார். ஹரன் எனும் வடமொழிப் பெயரும் ஏறக்குறைய இதே பொருளது.

துன்பம் போனால் இன்பம் தோன்றும். பற்று வழியே பல துன்பம்; பற்றற்ற போதே பரமானந்தம். தேன் பருகிய வண்டு, அத் தேன் மயமாகும். அதுபோல், போத அசைவில் விஷயாநந்தம்; போத ஒழிவில், சிவானந்தம். ஆம். 'ஆநந்த போதம்' சிவம்.

"பயிலுனர்க்குக்
கண்ணும் ஆநந்தம் கனிவாயும் ஆநந்தம்
வண்ண வதனமும் ஆநந்தம் -- தண்ணறல்சேர்
வேணியும் ஆநந்தம் வியன்மார்பும் ஆநந்தம்
பூணும் ஆநந்தம் புயல்கரம் தான் -- நாணுடையும்
ஆநந்தம் ஆநந்தம் ஆநந்தம் ஆநந்தம்
ஆநந்தம் எவ்வுறுப்பும் ஆநந்தம்"

என்பது ருத்ரேசர் வண்டுவிடு தூது.

"அண்ணலும் ஆநந்தம் அருளும்ஆ தந்தமுயிர்
எண்ணிய ஆநந்தம் எவ்வுலகும் -- பண்ணி
அளித்தழிப்பார் ஆதி அமரரும் ஆநந்தம்
களித்ததுவே எங்குமெனக் காண்"

என்பது துகளறு போதம்.

**இந்தியமாய்க் கரணாதி அணைத்து மாகி**
**இயல்புருட னாய்க்கால பரமு மாகிப்**
**பந்தமற்ற வியோமமாய்ப் பரமாய் அப்பால்**
**பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி**
**வந்தஉப சாந்தமதாய் மவுன மாகி**
**மகாமவுன நிலையாகி வயங்கா நின்ற**
**அந்தமில்தொம் பதமாய்த்தற் பதமாய் ஒன்றும்**
**அசிபதமாய் அதீதமாய் அமர்ந்த தேவே.**

(ப-ரை) இந்தியம் ஆய் - (அறிவன, தொழில் ஆற்றுவன எனும்) புறக்கருவிகளும், (அவைகளின்) செயல்களுமாகி; கரண ஆதி அனைத்தும் ஆகி - அந்தக்கரணம் (எனும் அகத்து உறுப்புகள்) முதலாக, பிற உள் பொருள்கள் யாவும் கொண்ட **ஆன்ம தத்துவம்** ஆகி; இயல் புருடன் ஆய் கால பரமும் ஆகி - இயல்பான புருடதத்துவம் ஆகி, காலம் முதலான வித்தியா தத்துவங்கள் ஆக விளங்கி, பந்தம் அற்றவியோமம் ஆய் - (இயல்பிலேயே) பந்தம் இல்லாத, வெளிப்பட்டு விளங்காத சிவ தத்துவம் ஆகிச் சிறந்து; பரம் ஆய் - மேலான துரிய அதீதப் பொருளாகி; அப்பால் பர அம்பரம் ஆய் - அதற்கு அப்பாவான பராகாயம் ஆகி, விசுவம் உண்ட பான்மை ஆகி - உலகங்களைத் தன்னுள் ஒடுக்கிய (வியாபகத்) தன்மையாகி; வந்த உபராந்தம் அது ஆய் - உடன் தோன்றிய பேரமைதிப் பெருநிலை யாகி; மவுனம் ஆகி - மனமிறந்த நிலையாகி; மகா மவுன நிலை ஆகி - மாபெரும் மோனப்பேறு ஆகி; வயங்கா நின்ற அந்தம் இல் தொம்பதம் ஆகி - விரிந்து எங்கும் விளங்குகின்ற முடிவில்லாத துவம் எனும் பதமாகி; தத் பதமாய் --, ஒன்றும் அசிபதமாய் - இணையும் அஸி எனும் பதம் ஆகி; அதீதம் ஆய் அமர்ந்த தேவே - (மேலுரைத்த எதற்கும்) அப்பாற்பட்ட நிலையில் வீறு தோன்ற விளங்கும் மேலோனே, (எ-று)

(வி-ரை) மாபெரும் உலகிற்கு முதற்காரணம் மாயை; அது இறைவன் திருவுளப்படி சுத்தம், அசுத்தம், மூலப்பகுதி என மூன்றாகும். சுத்த மாயையில் சுத்த வித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், விந்து, நாதம் என ஐந்து தத்துவங்கள் அமர்ந்துள.

சுத்த மாயையில், கால தத்துவம் சுழன்று வெளிப்படும். அது, இறந்த காலத்தை எண்ணச் செய்யும்; நிகழ் காலத்தில் நினைவை நிலைப்பிக்கும்; புதுமையை எதிர்காலத்தில் புகுத்தும். இவைகளுடன், உலகு உடல் முதலியவைகளில், முத்தொழில்களை வரிசையாக முறைப்படுத்தும்.

அக் கால தத்துவத்தில் இருந்து, நியதி தத்துவம் நிமிரும். அந்நியதி, அவரவர் வினைகளை அவரவர்களே அனுபவிக்குமாறு வழிமுறைகளை வகுக்கும். கலா தத்துவம், அதன் பின் கவினி எழும். அக்கலை, ஆணவத் திரையைச் சிறிது அகற்றும். வித்தை, கலையிலிருந்து விளையும். அது, வித்தக அறிவைச் சிறிது விளக்கப் படுத்தும். அந்த அறிவில் இருந்து, அராகம் எழும்; அது, ஆன்மாவில் விருப்பம் மிகுமாறு வினைபுரியும்.

இங்குக் கூறிய காலம், நியதி, கலை, வித்தை, அராகம் எனும் ஐந்தையும் பற்றிய ஆன்மா, புருடன் எனும் பெயர் பெற்றுப் புளகிக்கும். உலகை அனுபவிக்கும்

ஒரே நோக்கம் கொண்ட அந்நிலைக்கு, புருடன் எனும் போலிப் பெயர் போந்தது. உண்மையில் இது புருடன் அல்ல; அசுத்த மாயையில் உள்ள இந்தத் தத்துவங்கள் ஏழும், வித்தியா தத்துவங்கள் என்று விளங்கும்.

வித்தியா தத்துவக் கலையில் இருந்து, மூலப் பகுதி முளைக்கும். மூலப் பகுதிக்கு மூன்று குணம். அவைகள் சாத்விகம், இராஜசம், தாமசம் எனப்பெறும்.

அம்மூன்றுள் ஒன்றான இராஜசத்தில் இருந்து, தெளிவு எனும் தைசத அகங்காரம் திமிதம் இடும்; செலவு எனும் வைகாரிக அகங்காரம் வளரும்; தாழ்வு எனும் பூதாதி அகங்காரம் பொங்கி வரும்.

தைசதத்தில் இருந்து மனமும், மெய் வாய் கண் மூக்கு செவி எனும் அறிவுப் பொறிகளும் அடர்ந்து எழும்.

வைகாரிக அகங்காரத்தில் இருந்து வாக்கு, பாதம், கை, எருவாய், கருவாய் எனும் தொழிற் கருவிகள் தோன்றும்.

பூதாதி அகங்காரத்தில் இருந்து சொல்லல், செல்லல், கொள்ளல், கொடுத்தல், கழித்தல், மகிழ்வித்தல் எனும் தொழில்கள் ஐந்தும் துறுதுறுக்கும்.

தைசத்தில் இருந்து பிறந்த மனம், பார்த்ததை உடனே பற்றும். அதன் பகுதியான சித்தம், பற்றிய பொருள் யாது என்றும் சிந்தித்துப் பார்க்கும். அதன் வழி எழும் அகங்காரம், தொட்ட பொருள் எதுவும் என்னதெனத் துணியும்; அதன்பின் புத்தி, துணிந்தவற்றில் தோயும்; இந்நான்கும் அகத்து உறுப்புக்கள்.

| | |
|---|---|
| இவ்வரிசைப்படி சிவதத்துவங்கள் | 5 |
| வித்தியா தத்துவங்கள் | 7 |
| மூலப் பகுதித் தத்துவங்கள் | 24 |
| | ---- |
| ஆக தத்துவங்கள் | 36 ஆயின. |

தளர்ச்சி வளர்ச்சிக்குத் தக்கபடி ஆன்மா, இம் முப்பத்தாறு தத்துவங்களிலும் புனித உறவு பூணும். கேவல நிலை நீங்கிய சகல நிலை சுத்த நிலைகளில், உயிர்களை முறையே உய்விக்க, ஒவ்வொரு தத்துவங்களிலும் பெருமான், ஓவரது தாண்டவம் உஞற்றுகின்றான்.

கண்களால் ஒரு பொருளைக் காண்கிற பொழுது, அக் கண்களில் இருந்து அப் பொருள் இன்னது என்று காட்டுகின்றது திருவருள். பார்வைக்குப் புலனாக்கும் அச்செய்தியே படைப்பு.

பார்வையின் மூலம், அப்பொருளைப் பற்றிக் கொள்ளச் செய்கிறது பரம்; கம்பீரமான இந்நிலை, காப்பு எனப் பெயர் பெறும். சார்ந்த அப்பொருளில் அழுந்தல்,

சங்காரம். இம் மூன்றும் நீளும் கண்வழி நிகழ்பவை; பற்றிய பொருளில் அழுந்தி இன்புறல், மறைப்பு நிலை. சீச்சீ! என்ன இது! இப்படியா ஏமாந்து போவது என்று தெளிவு பெறுவது, அனுக்கிரகம்; இந்த இரண்டும், உயிரில் நிகழ்வன. இப்படியே மெய் வாய் நாசி செவி எனும் ஒவ்வொரு அறிகருவியிலும், தொழிற் கருவியிலும் அவரவர் வினை நிலைக்குத் தக்கபடி, நிமலன் திருக்கூத்து நிகழ்கிறது. இவைகள் பஞ்சேந்திரிய பஞ்ச கிருத்தியம் எனப்பெறும்.

மனத்தால் ஒரு பொருளை எண்ணும் பொழுது, எண்ணப்படு பொருளை நெஞ்சத்தில் எய்த வைப்பது படைப்பு. அப்பொருளில் காதலைப் பிறப்பிப்பது காப்பு. கருதிய அப்பொருள் எப்போது கைவல்யமாகும் என்று ஏங்க வைப்பது சங்காரம். மயக்கம் அதனிலேயே மலிதல் மறைப்பு; ஐயைய! சாதாரண ஒரு பொருள்; தோற்றக் கேடுகளையுடைய இதற்காகவா இவ்வளவு துன்பம் கொண்டோம் என்று, தெளிவு பிறப்பித்தல் அனுக்கிரகம். விரித்தல் பெருகும்; இப்படியே புத்தி சித்தம் எனும் கரணங்கள் ஒவ்வொன்றிலும், கன்ம நிலைக்குத் தக்கவாறு, ஐந்தொழில் ஆடல் நிகழ்த்துகிறான் அத்தன். இது கரண பஞ்சகிருத்தியம் எனப்பெறும். உயிர்கள் அனைத்தும் உய்யச் செய்யுள் உபாயம் இவை.

"அஞ்சுதொழில் ஆவதுவே அஞ்சவத்தை, கிஞ்சலிலா
அஞ்சிடத்தும் கொள்ளிவட்டம் ஆகவே--பஞ்சவன்னம்
வைத்த படிகம்போல் மாறா துனைமயக்கல்,
சித்திரக்கூத் தாகித் தெளி"

எனும் ஒழிவிலொடுக்கம் இங்கு உணரத்தகும்.

இதுவரை ஆன்ம தத்துவச் செய்திகள்.

இப்படியே புருடதத்துவம் முதலான வித்தியா தத்துவம் ஏழினும், பந்தமற்ற சுத்த தத்துவம் ஐந்தினும், துரியாதீத பரத்தினும், பரகாயத்தினும், விசுவாதீத நிலையிலும், உபசாந்த உயர்விலும், மனமிறந்த இடத்தினும், மகாமோன நிலையிலும், மகா வாக்கியத்திலும், அதற்கு அப்பாலும் ஆடல் நிகழ்த்தி, விமலன் வீறு தோன்ற விளங்கும் நிலையை வியந்து விளித்த பா இது.

ஒழிவிலொடுக்கம் குறித்து சித்திரக்கூத்து, குற்றாலத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அதை நினைவு கொண்ட அப்பர் அடிகள்,

"உற்றார் ஆருளரோ? உயிர்கொண்டு போம்பொழுது, குற்றாலத்துறை
கூத்தன் அல்லால் நமக்கு -- உற்றார் ஆர்உளரோ"

என்றார்.

"உற்றாரை யான்வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனி அமையும்;
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா! உன் குரைகழற்கே
கற்றவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்கிறது திருவாசகம்.

வெளியாகி விளங்கா நிலையை, 'வியோமம்' என்று விநயம் காட்டினார். அதன்மேல் பரம்பொருள் எனும் நாமம் படைத்தலின், 'பரமாய்' என்று பணிவு கூட்டினார். பரத்தின் மேலுளது பர அம்பரம்; (அம்பரம் - ஆகாயம்) அது, பராகாயம் என்று அறியப்பெறும்; அதன் அருமையை, திருவடிப் புகழ்ச்சி யுரையில் ஓரளவு அறிந்துளம்.

விசுவரூபன், விஸ்வாந்தர்யாமி, விஸ்வாதிகன் எனும் மந்திரநாமம் விளங்கியவன் விமலன். (விசுவம் - உலகம்) அவன் வியாபகத்துள் உலகம், வியாப்பியமாகி அடங்கும்; அதை விசுவம் உண்ட பான்மையாகி என்பதில் விளக்கினார்.

ஒரு இடையூறும் இல்லாமல் ஓய்வுகொண்ட நிலை, உபசாந்தம்; அதன் சொரூபமே அத்தன்.

இந்நிலை எய்தினோர், எம்மானை மனத்தால் எண்ணல், வாயால் வழுத்தல், காயத்தால் வழிபடல் ஆகிய வழிகளில், உணர்வு கனியப் பெறுவர். தொல்லைத் தற்போதம் இதன் வழி தொலைய, மோனமே உணர்வின் முன்னிற்கும்.

அம் மோனத்தில், சொரூபம் முறுவளிக்கும். அந்த அருமையை, 'மவுனம் ஆகி' என்றுரைத்து மகிழ்ந்தார்.

பரிசம் அறியும் கையும், மணத்தை முகரும் நாசியும் ஒன்றே ஆன யானையின் துதிக்கை போன்று, சிவன் சீவன் என இரண்டற்ற அந்த அத்துவிதத்தில், மகாமவுனம் மலரும். அந்த நிலையில் ஆகி அருள்பவன் ஆதலின், 'மகா மவுன நிலையாகி' என்றார்.

தத் - அது; த்வம் - நீ; ஆசி - ஆகிறாய் எனவரும் மகா வாக்கியம், அந்நிலையில் சிறந்த அனுபவம் ஆகும். அதன் சொரூப மானவன் அருட்பெருஞ்சோதி ஆண்டவன்; கழறிய இந்நிலை யாவும் கடந்த நிலையில் காட்சியாகும் கடவுள் சொரூபத்தை, 'அதீதமாய் அமர்ந்த தேவே' எனும்போது, குவிந்த மனம் குளிர்கிறது; இவ்வளவு பேரனுபவத்தை சொல்லுருவாக்கி வள்ளலார் சொல்ல உரியவர்; வாழ்க அப் பெருந்தகை என்று, கூப்பிக் கரங்கள் அவரை உணர்ந்து கும்பிடுகின்றன. (ஓம்.) (7)

**நின்மயமாய் என்மயமாய் ஒன்றும் காட்டா**
**நிராமயமாய் நிருவிகற்ப நிலையாய் மேலாம்**
**தன்மயமாய்த் தற்பரமாய் விமலம் ஆகித்**
**தடத்தமாய்ச் சொரூபமாய்ச் சகச மாகிச்**
**சின்மயமாய்ச் சிற்பரமாய் அசல மாகிச்**
**சிற்சொலித மாய்அகண்ட சிவமாய் எங்கும்**
**மன்மயமாய் வாசகா தீத மாகி**
**மனாதீத மாய்அமர்ந்த மவுனத் தேவே.**

(ப-ரை) நின்மயம் ஆய் - (முன்னிலையெனும்) நின்மயமாகி; என்மயம் ஆய் - (தன்மையெனும்) என்மயமாகி; ஒன்றும் காட்டா நிர் ஆமயம் ஆய் (படர்க்கை நிலையில்) ஒன்றையும் தோற்றுவிக்காமல் பிறவிநோய் இல்லாத பெருமிதமாகி; திருவிகற்ப நிலை ஆய் - எந்த வேறுபாடுகளும் இல்லாத தாய்; மேலாம் தன்மயம் ஆய் - மேல் நிலையதான தற்சொரூபம் தழுவியதாகி; தத்பரம் ஆய் - அது என்று அறிவிக்கப் பெறும் (புனித) தியானப் பொருளாகி; விமலம் ஆகி - இயல்பில் அழுக்கு இல்லாதது ஆகி; தடத்தம் ஆய் - தடத்த இலட்சணம் உடையதாகி, சொரூபம் ஆய் - சொரூப லட்சணம் உடையதாய்; சகசம் ஆகி - ஞான மயம் ஆனதாய்; சித் பரம் ஆய் - (உயர்த்த) ஞான உயிர்ப்பாகி; அசலம் ஆகி - அசையாதது ஆகி; சித் சொலிதம் ஆய் - (பெருகிய) ஞானப் பிரகாசமாகி; அகண்ட சிவம் ஆய் - எங்கும் நிறைந்த இறையாகி; எங்கும் மன் மயம் ஆய் - எல்லா இடத்திலும் தனிப்பெரும் தலைமை தாங்கியதாய்; வாசக அதீதம் ஆய் - (கம்பீரமான) சொற்களின் எல்லை கடந்ததாய்; மன அதீதம் ஆய் அமர்ந்த மவுனத் தேவே - எண்ணும் மனத்திற்கு எட்டாத நிலையில், அமைதியுடன் உள்ள தெளிவு தரும் மோனத் தெய்வமே, (எ-று)

(வி-ரை) விருப்பு வெறுப்பு இரண்டினும் விலகுதல்; எங்கும் சிவமெனக் காண்டல் கருதல் கை குவித்தல் என்று இருப்பாரை, வாய்மை அருள்நாதம் வரவேற்கும். அதனில் ஆன்மா லயம் எய்தும். இறைமையும், ஆன்மாவான தன்மயம் இரண்டும் அப்போது தரிசனம் ஆகும். இதை "அறிவாகும் இல்லையே ஐயோ!" என்று தாயுமானார் அறிவித்த பின்னும் அதை அனுபவிப்பார் இல்லை.

நின்மயம் என்பது தனிநிலை; அது பதி நிலை. என்மயம் என்பது, பசுபதி என்று ஆனநிலை. "நாதமும் கடந்து நிறைந்து, நின்மயமே நாள்என அறிந்து, நான் தான் ஆம் பேதமும் கடந்த மவுன ராச்சியத்தைப் பேதையேன் பிடிப்பது எந்நாளோ"? என இவ்வனுபவத்தைத் திருவருட்பா மற்றோர் இடத்தில் தெரிவிக்கின்றது. "தன்னைக் கண்ட என் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் ஆகிய ஈசனுக்கே" என்பது பதினோராம் திருமுறை.

தலைமை, தூய்மை, தத்துவ நிலைமை, அருள், வலி, இன்பம், அமலம், தெளிவு எனும் எட்டின் மயமா யிருந்தலின் 'தன்மயமாய்' என்றார்.

"கருதரிய உயிர்க்குயிராய்க் கரத்தெங்கும் பரந்துறையும் ஒரு தனி நாயகன்" என இருந்தும், அவ்வுயிர்களின் குணதோடங்களில் ஒட்டாது பற்றாது உறைவானை, 'தன்மயமாய்' உளன் என்றார்.

"தனக்குத் தானே மகனாகிய தத்துவன்
தனக்குத் தானே ஒரு தாவரும் குருவுமாய்த்
தனக்குத் தான் நிகரினான்" எனப் பெறும் இறைவன்,

தனக்குத் தானே தலைவன் ஆதலின், 'தற்பரன்' என்றார். தத்பரம் - அது பரம் எனும் பொருளது; "அது என்றால் எது என்று அடுக்கும் சங்கை" எனப் பெறுதலின், அது எனும் சுட்டிற்கும் அப்பாற்பட்டவன் என்று பொருள் கோடலும் ஒரு வகை.

விமலன் - இயல்பில் அழுக்கு இல்லாத விசேஷ முள்ளவன்; இது, இறை எண் குணங்களுள் ஒன்று என்பாருமுளர்.

ஒரு உருவும் இல்லாதது சொரூபம்; அது எங்கும் நிறைந்தது. வித்தில் இருந்து எழும் விருட்சம்போல், சொரூபத்தில் இருந்து தடத்தம் வெளிப்படும்; இது அளவிறந்த திருமேனிகள் ஆகும். தடத்தத் திருமேனிகள் பரமாநந்த சொரூபக் கடலில் படிவிக்கும். இந்நிலை விதேக முத்திக்கு அணுக்க நிலை. சொரூபம் தடத்தம் இரண்டும் சகசம்; (சக - சமம்; ஜம் - தோற்றம்) ஊன்றி இவைகளின் அருமையை உணர்ந்து, 'தடத்தமாய் சொரூபமாய் சகசம் ஆகி' என்று அரிய சமிக்ஞையாக அறிவித்த இடமிது.

சின்மயம் - ஞானமே ஆன சொரூபம். சித் எனப்பெறும் சீவாத்ம தத்துவத்தினும் மேம்பட்டது ஆகலின் 'சித்பரம்' என்றார். சலனம் அற்ற நிலைபொருள் ஆதலின், 'அசலமாய்' என்றார்.

அருவம் எனும் நிட்களமே அகண்ட சிவம்; அதுவே பரசிவம். "பெண்ணல்லை ஆணல்லை பேடுமல்லை, பிறிதில்லை ஆணாயும் பெரியாய் நீயே" எனும் தமிழ் மறை இங்கு எண்ணத் தகும். "சிவம் பராம்பரம் சூக்ஷ்மம்" என்பது வாதுளம். இந்த அகண்ட சிவத்தின் சத்தியே சித் சொலிதை; அந்த அருமையை, 'சிற்சொலிதமாய் அகண்ட சிவமாய்' என்று அறிவித்தார்.

சொரூப நிலையில் உள்ள இப்பரமே எந்த இனத்திற்கும், எம்மொழிக்கும் எச்சமயத்திற்கும் அதிபதி ஆகலின், 'எங்கும் மன்மயமாய்' என்றார்.

"நுவலுகின்றதோர் வாக்கினும் அமைகிலை, மதிப்ப ஒண்கிலை" என்றபடி, வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத வள்ளலை, 'வாசக அதீதம் ஆகி, மன அதீதம் ஆய்' என்றார்.

மோன நிலையில் அமர்ந்த இம்மூர்த்தியை, 'தேவே' என்று விளித்தல் அருமையினும் அருமை. தேவன் - ஒளி மயமான திருமேனியன்; இப் பெயர்ச் சொல், அடையின்றியே சிலபரம் பொருளைச் சிறப்பிக்கும். பிற தேவரும் ஒளியினரெனினும், அது பரனை எண்ணி அருந்தவம் புரிந்து பெற்ற ஏகதேச ஒளி. அத் தேவர்களை அடை

புணர்த்தி அறிவிப்பது நூல் வழக்கு. தேவ நாமம் சிவத்திற்கே உரியது. "தேவ தேவாய" எனும் மந்திரமும் இப் பொருளதே. (8)

**அளவிறந்த நெடுங்காலம் சித்தர் யோகர்**
**அறிஞர்மல ரயன்முதலோர் அநந்த வேதம்**
**களவிறந்தும் கரணாதி யிறந்தும் செய்யும்**
**கடுந்தவத்தும் காண்பர்தாம் கடவு ளாகி**
**உளவிறந்த எம்போல்வார் உள்ளத் துள்ளே**
**ஊறுகின்ற தெள்ளமுத ஊற லாகிப்**
**பிறவிறந்து பிண்டாண்ட முழுதும் தானாய்ப்**
**பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய தேவே.**

(ப-ரை) அளவு இறந்த நெடுங்காலம் சித்தர் யோகர் அறிஞர்மலர் அயன் முதலோர் - அளவு கடந்த நீண்ட காலமாக சித்தர்கள், யோகிகள், முனிவர்கள், மலர்மேலுள பிரமன் முதலிய தேவர்களும்; அநந்த வேதம் - (மாபெரும்) அளவில்லாத மறைகளும்; களவு இறந்தும் - (ஐம்புலக்) கள்ளத்தனம் அகன்றும்; கரண ஆதி இறந்தும் - (மனம் முதலிய) அந்தக்கரண சேட்டை யகன்றும்; செய்யும் கடும் தவத்தும் காண்பு அரிய கடவுள் ஆகி - செய்த உக்கிர தவத்தாலும் காண முடியாத கடவுளாகியும்; உளவு இறந்த எம்போல்வார் உள்ளத்து உள்ளே - உபாயம் (எது ஒன்றும்) அறியாத எம்போன்ற எளியவர்களது சித்தத்துள்; ஊறுகின்ற தெள் அமுத ஊறல் ஆகி - சுரந்து பெருகுகின்ற தெளிந்த அமுதச் சுரப்பாகி; பிளவு இறந்து பிண்ட அண்ட முழுதும் தான் ஆய் - பிரிவு இல்லாதபடி உடல்களிலும் உலகங்களிலும் தகுதி பெற நிறைந்து தானே ஆகி; பிறங்குகின்ற பெரும் கருணை பெரிய தேவே - (வித்தக ஒளி மயமாக) விளங்குகின்ற பேரருளுடைய பெரிய பொருளே, (எ-று)

(வி-ரை) சித் - ஞானம்; அதை யுடையவர்கள் சித்தர்கள்; சித்தத்தில் உணர்வு சிறக்க இருப்பவர்கள்; சித்து விளையாடுபவர்கள் எனினுமாம். சித்தாவது, அணிமாமகிமா முதலிய எண்வகை அற்புத ஆடல்கள். யோகா - ஒரு முகமான உணர்வினர்; (யுக் - பகுதி) குண்டலினியை மேலெழுப்பி, பிரமாந்திர உறவு பெருகி, மதிமண்டல அமுதம் அருந்திப் பலகாலம் இருப்பவர்கள் யோகியர்கள். அறிஞர்-ஞ்-பெயரிடைநிலை; அறிவு மயமான அருந்தவர் எனும் பொருளில் முனிவர்களைக் குறித்த பெயர்.

அயன் - அஜன் என்பதன் திரிபு. (அ - திருமால்; ஜன் - உதித்தவன்) மலர் அயன் என்பதனால், பிற புதல்வர்களை உணர்த்தாமல், பிரமனையே குறித்தது. வித் எனும் தாதுவில் இருந்து பிறந்த பெயர் வேதம். நாத ஞான சொரூபம் ஆன அருள் நூல் என்பது திரண்ட பொருள். (வித் - ஞானம்.)

அளவிறந்த வேதங்கள் அகில உலகிலும் பரவியுள; பாரத தேசத்திற்குப் பயனாக, அவைகளில் உள்ள அருங்கருத்துக்களான தூய பகுதிகளைத் தொகுத்து, நான்காக வைத்தவர் நலம் சிறந்த வியாசர்.

கண்ணொன்று காண, செவி ஒன்று கேட்க, வாயொன்று பேச, மூக்கு ஒன்றை மோக்க, உடல் ஒன்றில் ஊற இருந்தால், எங்ஙனம் இறைவனை எய்தல் இயலும்? ஐம்புலக் கள்ளம் அகல வேண்டும் என்று, அதற்குரிய வழிவகைகளை ஆய்ந்த ஆன்றோர் முயன்றனர்; வெற்றி கொண்டனர்; இந்திரியங்களை வென்ற திறத்தால், ஜிதேந்திரியர் என்னும் பெயரை எய்தினர்; இவர்கள் 'களவிறந்த' கணக்கினர். பார்த்ததை மனம் பற்ற, நினைத்தைப் புத்தி நிச்சயிக்க, சித்தம் பெரிதும் சிந்திக்க, குபீரென்று அகங்காரம் குதிக்க, இப்படியே இடையறாது செயலில் இருந்தால், சிவானுபவம் என்றும் சித்திப்பது இல்லை. அந்தக் கரணங்களின் சேட்டை அறுதற்கு யாது வழி? இதையே இடையறாது எண்ணுவர்; ஆகாத இவைகளை அடக்க, அளவிறந்த சாதனைகள் செய்வர். வெற்றி காண்பர்; 'கரணாதி யிறந்த' இவர்கள் ஒருவகை.

காட்டில் புகுவர்; உணவை மறுப்பர்; உறக்கம் துறப்பர். பனிமழை வெயில் என்று பாரார். காற்று கனல் என்று கருதார். எலும்பும் தோலுமாக இளைப்பர். 'கடுந்தவர்' இவர்கள் ஒரு வகை.

கலைகளும் கருவிகளும் கரணங்களும் ஆனவற்றின் செயல்கள் அடங்கினாலும், அவைகளின் வாசனை அகலா ஆதலின், அருட்சொரூப தரிசனம் ஆவது இல்லை. அதை 'காண் பரிதாம் கடவுளாகி' என்று அறிவித்தார்.

உளவு என்பது, லௌகிக சூழ்நிலை போல், பாரமார்த்தி கத்திலும் திருவருள் செல்வம் பெறச் செய்யும் தந்திரோபாயங்கள்; அவைகள், செல்லும் குறுக்கு வழிகள்.

தேரும் உபாயம் எதுவும் தெரியாமல், என்று சிவதரிசனம் என்று ஏங்கி யிருப்பவர்தம் உள்ளத்தில் சிவம், அருளமுதமாய் ஊற்றெடுக்கும். பயனான அதனை ஆன்மா பருகும். பிறவிகளின் அயர்வு பெயர்ந்தொழிய, இவர்கட்கு சிவாநந்த நித்திரையின் சிறப்பெய்தும். இதனை, 'உளவிறந்த ஊறல்' என்று உணர்ந்து நெகிழ்ந்து உரைத்தார்.

"தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான், தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்" என்ற திருவாசகம் இங்கு எண்ணத் தகும்.

கடும் முயற்சி செய்பவர் காணாத கடவுள், அகதிகள் எனத் தம்மை அர்ப்பணிப்பவர்க்கு எளிது வந்து உதவுதிறம் இது.

"நகுவாய் மலர்மேல் அயனும் நாகத் தணையானும்,
புகுவாய் அறியார் புறநின்றோரார்"

என ஆளுடைய பிள்ளையும்,

"முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவர்மற் றறிகிலர் யாவர் மற்றறிவார்"

என்று திருவாத வூரடிகளும்,

"தொன்மறைக் குலங்கள் முன்னியது யாதெனப்
பன்முறை தெரிப்பினும், பயன்கொள அரிதால்"

எனும் திருவாரூர் நான்மணி மாலையும்,

"வரையும் கானும் எய்திச், சருகொடு
கால்நீர் அருந்திக், கடும்பனிக் காலத்து
மாநீர் அழுவத்து அழுங்கி, வேனிலில்
ஐவகை அழலில் மெய்வருத்த வருந்தி
இவ்வகை ஒழுகும் இயல்பிற் றன்றே"

எனும் சிதம்பர மும்மணிக் கோவையும், "சொல்நவில் முறை நான்கு ஆரணம் உணராச் சூழ்புக் கொளித்த நீ இன்றி, கல்நவில் மனத்தென் கண்வலைப் படும் இக் கருணையிற் பெரிய தொன்றுளதே" எனும் திருவிசைப்பாவும் இங்குக் கருதக் தகும். (9)

**வாயாகி வாயிறந்த மவுன மாகி**
**மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்**
**காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக்**
**கருவிகர ணாதிகளின் கலப்பாய்ப் பெற்ற**
**தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித்**
**தானாகி நானாகிச் சகல மாகி**
**ஓயாத சத்தியெலாம் உடைய தாகி**
**ஒன்றாகிப் பலவாகி ஓங்கும் தேவே.**

(ப-ரை) வாய் ஆகி - வாக்குகள் ஆகி; வாய் இறந்த மவுனம் ஆகி - (மதிப்பிற்குரிய) வாக்குகட்கு அப்பாற்பட்ட மவுனம் ஆகி; மதம் ஆகி - (அளவிறந்த) சமயங்கள் ஆகி; மதம் கடந்த வாய்மை ஆகி - சமயங்கள் அத்தனைக்கும் அப்பாற்பட்ட சத்தியம் ஆகி; காயாகி--, பழம் ஆகி--, தரு ஆய்--(கற்பகத்) தரு ஆகி; மற்றைக் கருவி கரண ஆதிகளின் கலப்பாய் -- மற்றும் உள்ள கருவி கரணங்கள் முதலிய தத்துவங்களில் இரண்டறக் கலந்ததாய்; பெற்ற தாயாகி --, தந்தையாகி --, பிள்ளை ஆகி--, தான் ஆகி - தான் என்னும் படர்க்கை ஆகி; நான் ஆகி - நான் எனும் தன்மை ஆகி; சகலம் ஆகி - (உருவும் பெயருமுள) உலகப் பொருள்கள் அனைத்தினும் ஊடுருவி இருப்பதாகி; ஓயாத சத்தி எல்லாம் உடையது ஆகி - ஓய்வு கொள்ள நேரம் இல்லாத சர்வ சத்திகள் அனைத்தையும் உடைமைப் பொருளாகக் கொண்டதாய்; ஒன்று ஆகி - ஏகமாகி; பல ஆகி - அநேகம் ஆகி; ஓங்கும் தேவே - (எல்லாவற்றாலும்) உயர்ந்த தெய்வமே, (எ-று)

(வி-ரை) வாய் என்பது, வாக்கிற்கு ஆகி வந்த பெயர். அவ்வாக்கு நான்கு வகை.

(1) **சூக்குமை**: இது நுட்பம் என்று நுவலப் பெற்று, உதிக்கும் கீழே உருவாகும்; நாத அறிவே அதன் நல் வடிவம். சிவதத்துவமும் சக்தி தத்துவமும், சிறக்க அதனைச் செயல்படுத்தும்.

(2) **பைசத்தி**; தொகை எனும் பெயர் கொண்டு தோன்றும் இது, உந்தியில் உருவாவது; அழகிய மயில் முட்டையுள் ஐந்து நிறம்; புறத்தில் அந்நிறம் புலனாவது இல்லை; அதுபோல் எழுத்துகளின் சொரூபம் இதனில் இருந்தும், கண்களும் செவிகளும் காணுவண்ணம் கரந்துளது என்னும் உதாரணத்தை, அருணந்தி சிவம் அறிவிக்கும். இனிய பொதுவுணர்வுள இதனை, சிறக்கச் சாதாக்யம் செயல்படுத்தும்.

(3) **மத்திமை**: வகையெனும் பெயருடன் வளரும் இது, நெஞ்சம் கண்டம் இரண்டில் நின்று, மொழிகளின் நினைப்பிற்கு மூலம் ஆவது; ஈஸ்வர தத்துவம் இயக்க இயங்குவது.

(4) **வைகரி**: விரி எனும் பெயருடன் விளங்கும் இது, உதானன் பிராணன் எனும் வாயுவுடன் உறவு கொண்டு, நாவின் அடியில் இடம் கொண்டு, உரிமைச் சிறப்பு உணர்வுடன், ஒலிவகையில் செவிக்குக் கேட்கச் செயல்படும்; இவ்வைகரியை, சுத்த வித்தையே இயக்கும். தன் செவிக்கு மட்டும் கேட்பது வைகரி என்றும், பிறர் செவிக்குக் கேட்க ஒலித்தல் வெளிப்படை என்றும், ஐவகை வாக்கென மேலோர் அறிவிப்பதும் உண்டு. சுத்த மாயையில் உள்ள ஐந்து தத்துவங்களே இந்த வாக்குகளைச் செயல்படுத்துவன. இந்த அருமையை அறியாமல், சள சள என்று வாக்கை விரையம் செய்வாரை இயற்கை மன்னிப்பது இல்லை.

வாக்குகள், நிவிர்த்தி முதலிய பழங்கலைகள் ஐந்தையும் பற்றும். அக்கலைகள், ஆணவத்தை அகற்றும். இது வழி முறை. முறை துறை அறிந்து, வாக்கின் வழியே பரமன் திருவருளைப் பற்றினால், 'வாய் இறந்த மவுனம்' வரும். உலகாயதம், பௌத்தம், சௌத்திராந்திகம், யோக சாரம், மாத்தியமிகம், வைபாடிகம், நிகண்டவாதம், ஆசீவகம், பட்டாசாரியம், பிரபாகரம், நிரீச்சுர சாங்கியம், பாஞ்சராத்திரம், பாற்கரியம், சத்தப்பிரமவாதம், மாயாவாதம், பாடாண வாதம், பேத வாதம், சிவசம வாதம், சிவ சங்கிராந்த வாதம், நிமித்த காரண பரிணாமவாதம் முதலிய எண்ணிறந்த சமயங்கள் இருக்கின்றன.

எத்தனை மதங்கள் இருந்தாலும் பிழையில்லை; அவைகள், ஆன்மாக்களின் பரிபாகத்திற்குத் தக்கவாறு அமைந்தவை; எச்சமயம் ஆனாலும், அவைகளின் அனுட்டானத்தில் தவறாது இருந்தால், அப்புண்ணியத்தால் வரவர உயர்ந்து, மேல் நிலை எய்தும் சீவன். சமய அனுட்டானம் இன்றி, என் சமயம் பெரியது; பிறர் சமயம் தாழ்ந்தது எனும் வாத உழற்சி செய்வாரை எண்ணி, "சாதியிலே மதங்களிலே உழலாதீர் உலகீர்" என்று பிறிதோரிடத்தில் வருந்திப் பேசியுளர் வள்ளலார். உண்மையில் எம்மதமும் இறைமதம்; அந்த அருமையை அறிந்து, 'மதமாகி, மதம் கடந்த வாய்மை ஆகி' என்றார். வாக்கிறந்த மவுனம் வரும் பொழுது, சமயம் எல்லாம் கடந்த

சத்தியம் தோன்றும் என்பதை இவ்வளவு எளிய நிலையில் இயம்பிய கருணையை எத்தனை போற்றினாலும் தகும்.

அவரவர் தரத்திற்குத் தக்கவாறு அரும்பாகி, மலராகும் அத்தன், காயானான், அதீத நிலையினர்க்குக் கனியானான்.

"நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்கும், தோட்டத்து மாம்பழம் தூங்கலு மாமே" என்பது திருமந்திரம்.

"மனிதர்காள் இங்கு வம்மொன்று சொல்லுகேன், கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரே, புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி, இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே" என்பது அப்பர் தேவாரம்.

"கோடையிலே நடந்து இளைப்பாறக் கிடைத்த
குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே"

என்பது திருவருட்பாவின் ஒரு பகுதி.

திருவருள் நிழலளித்து, திருவருட் கனியுதவும் கற்பகத் தரு இறை என்பது கருத்து. தரு - (நினைத்தைத்) தருவது. அறி கருவிகளில் அமர்ந்து, தொழில் கருவிகளில் தோன்றி, அந்தக் கரணத்தில் இருந்து ஆட்சிநடத்தும் இறை அருமையை ஓர்ந்து, 'கருவி கரணங்களின் கலப்பாய்' என்றார். அருட்கருவில் வைத்தபோது அன்னை. கற்பன கற்பித்து, கேட்பன கேட்பித்து, முதன்மை அருள் நோக்கில் முன்னேறச் செய்பொழுது, தந்தை. இங்ஙனம் 'தாயாகித் தந்தையாய்த்' தாங்குகின்றான்.

உலகில் உள்ள சேய்கள் எல்லாம் அவன் சொரூபம்; குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடம் என்பது பழமொழி. "உத்தமஜோதி உளனொரு பாலனாய்" என்பது திருமந்திரம். (1089)

"உள்ளும் புறத்தும் கருணை யமுதம் ஊட்டும் அன்னையே
ஓதா துணர உணரும் உணர்வை உதவும் அன்னையே
தெள்ளும் கருணைச் செங்கோல் செலுத்தச் செய்த அப்பனே
செல்லப் பிள்ளை யாக்கி என்னுள் சேர்ந்த அப்பனே"

என்பது கீர்த்தனைப் பகுதி.

தான் எனத் தனியிருந்தான்; நான் எனுமாறு என்னில் இருந்தான்; உண்மையில் யாவும் ஆனான் ஆதலின்,

'தானாகி நானாகிச் சகலம் ஆகி' என்றார்.

"தானாகி நானாகித் தனியே நின்றவர்க்குத்

தண்டனிட்டேன் என்று சொல்லடி"

என்பது திருவருட்பா கீர்த்தனைப் பகுதி.

சிவசக்திகள் எண்ணிறந்தோர் செயல்படுகின்றனர். ஆன்மாக்கட்கு அருள்பாலிப்பதும், வழிகாட்டி வாழ்விப்பதுமான முயல்வுகளில் இடையறாது ஈடுபடுதலின், அவர்கட்கு ஓய்வு என்பது ஒருநாளும் இல்லை.

"திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை யீசி மனோன்மணி யென்ன
வருபல வாய்நிற்கும் மாமாது தானே"

"மூலம தாமெனும் முத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரத்தானே"

எனவரு திருமந்திரங்கள், பல சத்திகள் பலவகை முயல்வுகள் புரிவதைப் படம் பிடிக்கின்றது. 'ஓயாத சத்தியெலாம் உடையது' அப்பரசிவம் என்பதை, அருமைபெற இப்படி அறிவித்தார். அச் சக்திகளின் நிலைக்கேற்ப ஏகமானான்; அநேக மூர்த்தம் ஆயினான்; அவனே பெரியவர்கட் கெல்லாம் பெரியோன் என்பது இறுதியில் உள்ள செய்தி.

"போகம் சுகபோகம் சிவபோகம் அதுநித்யம்
ஏகம் சிவஏகம் சிவஏகம் இதுசத்யம்"

எனும் கீர்த்தனைப் பகுதியை இங்கு எண்ணல் நலம்.

ஏகம் அநேகம் குறித்து வள்ளலார் அருளிய வசனப் பகுதி பின்வருமாறு:--

"சமயத்தில் சிவம் ஏகம், பிரமாதிகள் அநேகம்,
மதத்தில் பிரமம் ஏகம், ஜீவர்கள் அநேகம்.
சாதாரணத்தில் கடவுள் ஏகம், பசிக்கள் அநேகம்.
சுத்த சன்மார்க்கத்தில் தனிக் கடவுள் ஏகம்;
அவ்வருளால் சுத்தமாகி ஞானதேகம் வேறாகிப் பெற்ற ஞானிகள் அநேகம்' (10)

**அண்டங்கள் பலவாகி அவற்றின் மேலும்**
**அளவாகி அளவாத அதீத மாகிப்**
**பிண்டங்கள் அநந்தவகை யாகிப் பிண்டம்**
**பிறங்குகின்ற பொருளாகிப் பேதம் தோற்றும்**
**பண்டங்கள் பலவாகி இவற்றைக் காக்கும்**
**பதியாகி ஆநந்தம் பழுத்துச் சாந்தம்**
**கொண்டெங்கும் நிழல்பரப்பித் தழைந்து ஞானக்**
**கொழுங்கடவுள் தருவாகிக் குலவும் தேவே.**

(ப-ரை) அண்டங்கள் பல ஆகி - அளவிலா அண்டங்கள் ஆகியும்; அவற்றின் மேலும் அளவு ஆகி - அவைகளின் தலைக்கு மேலும் வரையறுத்த அண்டங்கள் ஆகியும்; அளவாத அதீதம் ஆகி - (அதற்கு மேலும்) அளக்க முடியாதபடி அப்பாற் பட்டும்; பிண்டங்கள் அநந்த வகை ஆகி - அளவிறந்த உடலங்கள் ஆகியும்; பிண்டம் பிறங்குகின்ற பொருள் ஆகி - (ஒவ்வொரு) ஆக்கை யுள்ளும் ஒளிர்கின்ற தத்துவங்கள் ஆகியும்; பேதம் தோற்றும் பண்டங்கள் பல ஆகி - வேறு பட்டு விளங்கும் பலவகையான பொருள்கள் ஆகியும்; இவற்றை காக்கும் பதியாகி - இவவைகள் அனைத்தையும் பாதுகாக்கின்ற அதிபன் ஆகியும்;

ஆநந்தம் பழுத்து - பரமாநந்தப் பழம் பழுத்து; சாந்தம் கொண்டு எங்கும் நிழல் பரப்பி - சாந்தம் சுபாவமாகச் சார்ந்து, (பரம அமைதி) நிழலை எல்லா இடத்தினும் பரப்பி; தழைந்து - (தண்மை மிகுதியாகத்) தழைந்து; ஞானக் கொழும் கடவுள் தருவாகிக் குலவும் தேவே - செழித்த ஞானமய கம்பீர தெய்வக் கற்பகமாகத் திகழும் பேரொளி மயமான பெருமானே, (எ-று)

(வி-ரை) அண்டம் என்பது உலக உருண்டை. ஆயிரத்தெட்டு கோடி அண்டங்கள் என்பது நூற்கொள்கை. வான்வெளியில் வாழும் ஒவ்வொரு மீனும் ஒவ்வொர் உலகம். சுழன்றும் இயங்கும் அவைகளின் எண், சொல்லும் தரத்தில் இல்லை. ஒன்றின் ஒன்று பெரியது ஆன அவைகள், நுண்ணிய மாயையைக் கடவுள் பெருமான் கலக்கிக் கடைய, குமிழியாய் எழுந்த கூட்டங்கள். இயங்கும் இவைகளே அண்டங்கள் என, அருளாளர்கள் அறிவிக்கும் செய்திகள், சிவசிவ என்று நம்மைச் சிந்திக்கச் செய்கின்றன.

ஒவ்வொரு அண்டத்தும் ஒரு அதிபர் உளர். முதல்வன் திருவருள் முன்னிற்க, கருத்தொடு அவர்கள் அங்கங்குள்ள உயிர்களைக் காக்கின்றனர். அருளாட்சியில் அமைந்த அந்த அண்டங்களின் பெயர்களையும், நிர்வாக நிலைகளையும் நினைக்கும் பொழுதே கரகமலம் குவிய, கண்மழை பொழிய, 'அண்டங்கள் பலவாக' "ஆக்கி அளித்துத் துடைக்கும்-செயல் அத்தனை வைத்தும் என் அத்தனையேனும், தாக்கற நிற்கும் சமர்த்தல்" என்று, பரம தெய்வத் திறத்தைப் பாடியுளர் மேலோர்; உணர்ந்து இன்றும் அதை ஓதுவார் உளர்.

'அண்டங்கள் பல ஆகி' என்றது, தெரிந்த நூல் அளவு; 'அவற்றின் மேலும் அளவாகி' என்றது, பெயர் குறிக்க முடியாமல் அருளாளர்கள் அறிந்திருக்கும் அளவு. 'அளவாத அதீதம்' என்றது, அனுபூதிமான்கள் அறிந்து மகிழும் அற்புதச் செய்தி.

"பெறுபகி ரண்டம் பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணல் அளவாகப்
பொறிஒளி பொன்னணி என்ன விளங்கிச்
செறியும் அண்டாசனத் தேவர் பிரானே"

எனும் திருமூலர், நிமலனது வியாபகப் பேருருவின் திருமுன் அண்டங்கள் சிறு மணல்களாயின; அந்த அண்டங்களாகிய பீடத்தின் மேல், மின்னும் பொன்னாபரணம் என்ன மிளிர்கின்றது மெய்ப்பொருள் என்று உணர்ந்து திருமந்திரத்தில் ஓதியுளர்.

'அண்ட அப்பா, பகிர் அண்ட அப்பா, நஞ்சணிந்த மணி
கண்ட அப்பா, முற்றும் கண்ட அப்பா, சிவ காமியெனும்
ஒண்தவப் பாவையைக் கொண்ட அப்பா, சடை ஓங்கு பிறைத்
துண்ட அப்பா, மறை விண்ட அப்பா, எனைச் சூழ்ந்தருளே'

எனும் திருவருட்பா வேண்டுகோள் பகுதியில், அண்டங்களாகி, அந்த அண்டங்களை நிர்வகிக்கும் அப்பன் அருளொளி, தன்னை முற்றுகை யிடவேண்டும் என்பதை உணர்பொழுது, கண்முன் அவ்வொளி காட்சி யாவதுபோல் கண்டு உள்ளம் கரைகிறேதே! (ஓம்.)

அண்டங்கள் தோறும் பிண்டங்கள்; (பிண்டம் - உடலம்) அவைகள் "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்' அளவிறந்த பிண்டங்கள் என ஆகியுள. அப்பிண்டங்களில் உளது பிரான் ஆட்சி. தொண்ணூற்றாறு தத்துவக் கூட்டங்கள் பிண்டங்களாகத் தோன்றியுள. ஒவ்வொரு பிண்டத்தும் ஒவ்வொரு உயிர். தெளிவு பிறப்பிக்கப் பிண்டங்கள்தோறும் தத்துவ தேவதைகள். தேவதைகளைக் கண்காணிக்கிறது திருவருட்ஜோதி. என்ன அதிசயமான செய்தி இது! 'பிண்டங்கள் அநந்த வகை ஆகிப் பிண்டம் பிறங்குகின்ற பொருள் ஆகி' எனும் பகுதியைப் படிக்கும் பொழுது, மெய்ப்பொருள் ஆட்சியை எண்ணி மெய்சிலிர்க்கின்றதே!

அண்டங்கள்; அவைகளில் பல பிண்டங்கள்; பிண்டங்களில் தத்துவங்கள்; அவைகளின் தேவதைகள்; அவைகளின் கண்காணிப்பில் ஆன்மாக்கள்; ஆன்மாக்கள் அனுபவிக்க, தேகசித்தித் தேர்வுபெற, ஆன்ம சித்தி அனுபவம் அடைய, நயம்பெற ஞானசித்தி நலமெய்த, நூல்கள், மூலிகை பொருள்கள் பல அண்டங்களில் பொங்கியுள. எந்தப் பொருளிலும் இறை அருள், பூரித்துத் ததும்பிப் பொலிகிறது. அந்த அருமையை, 'பேதம் தோற்றும் பண்டங்கள் பல ஆகி' என்றார்.

அண்டம் பிண்டம் அனைத்தினும் இருந்து, அவைகளது பக்தி எனும் வரியிறை வாங்கிப் பாதுகாக்கும் பரம முதலாளியை, 'இவற்றைக் காக்கும் பதியாகி' என்றார்.

எதனிலும் பதிதலின், இறையிருப்பை பதி எனும் பெயரில் வள்ளலார் பாடும் அருமையே அருமை.

கம்பீரமான ஆநந்தம் கனிந்து, கொழுவிய சாந்தம் கொண்டு, பார்முழுதும் அருள் நிழலைப் பரப்பி, தகுதியுள ஞானத் தழை தழைத்து, கம்பீர தெய்வக் கற்பகத் தருவாய், எவர்க்கும் எதற்கும் என்றும் உதவும் ஏந்தலை, 'தருவாகிக் குலவும் தேவே' எனும் விளியை எண்ணும் போதெல்லாம், நீளும் அதன் அடியில் நிற்பது போன்ற உணர்வு நம்மில் உதிக்கிறது அல்லவா!

அண்டம் பிண்டம் இரண்டன் செய்தியை அருளார் வள்ளலார், வசனப் பகுதியில் பின்வருமாறு வரைந்துளர். "அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என எதனினும் நான்கு நிலையுளது.

அண்டத்தில் (1) அகம் அக்கினி; (2) அகப்புறம் சூரியன்; (3) புறம் சந்திரன்; (4) புறப்புறம் நட்சத்திரங்கள்.

பிண்டத்தில் (1) அகம் ஆன்மா; (2) பொருள்களின் உண்மையை அறிவது ஆன்ம அறிவு.

(2) அகப்புறம் ஜீவன்; (2) பொருள்களின் பயனை அறிவது ஜீவ அறிவு

(3) புறம் (1) கரணம்; (2) பொருள்களின் பெயர்களையும், உருவங்களையும், குணங்களையும், குற்றங்களையும் விசாரித்து அறிவது கரணமாகிய மன அறிவு.

(4) புறப்புறம் (1) மெய் வாய் கண் மூக்கு செவி எனும் அறிகருவிகள். (2) பொருள்களின் பெயர், உருவம், கண், குற்றங்களை ஆயாமல் காண்பதே அவைகளின் அறிவு.

இங்ஙனம் அண்டத்தில் நான்கு இடம்; பிண்டத்தில் நான்கு இடம். இந்த எட்டினும் கடவுள் பேரொளி காரியத்தில் உளது. காரணத்தில் உள்ள இடம், அண்டத்தில் பரமாகாசம்; பிண்டத்தில் புருவநடு.

காரிய காரணமாக உள்ள இடம் 4; அவைகள் அண்டத்தில் (1) மின்னல், (2) இடி, (3) பிண்டத்தில் விந்து, (4) நாதம்.

சர்வ யோனியிடத்திலும், விந்து விளக்கமான மின்னல் இடத்திலும், நாத விளக்கமான இடியிடத்திலும், இஃது அல்லாமல் "பாரொடு விண்ணாய்ப் பரந்ததோர் ஜோதி", ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாயும் உளது" இந்த விளக்கம், சிந்தனைக்கு உரிய செய்தி.

அனுபவம் இதனில் ஆழ்ந்தவர் ஆதலின்,

"அண்டவகை எவ்வளவோ அவ்வளவும், அவற்றில்
அமைந்த உயிர் எவ்வளவோ அவ்வளவும், அவைகள்
கண்டபொருள் எவ்வளவோ அவ்வளவும், அவற்றில்
கலந்த கலப்பு எவ்வளவோ அவ்வளவும் நிறைந்தே,
விண்தரும்ஓர் நாதவெளி சுத்தவெளி மோன
வெளிஞான வெளிமுதலாம் வெளிகள் எலாம் நிரம்பிக்
கொண்டதுவாய் விளங்குகின்ற சுத்தசிவ மயமே
குலவுநடத் தரசேஎன் குற்றமும்கொண் டருளே"

என்றும்,

"அண்டஅளவு எவ்வளவோ அவ்வளவும், அவற்றில்
அமைந்தசரா சராஅளவெல் வளவோஅவ் வளவும்
கண்டதுவாய், ஆங்கவைகள் தனித்தனியே அகத்தும்,
காண்புறத்தும், அகப்புறத்தும், புறப்புறத்தும் விளங்க,
விண்தகுபேர் அருட்ஜோதிப் பெருவெளிக்கும் நடுவே
விளங்கஒரு பெருங்கருணைக் கொடிநாட்டி, அருளாம்
தண்தரும்ஓர் தனிச்செங்கோல் நடத்திமன்றில் நடிக்கும்
தனியரசே என்மாலை தாளில்அணிந் தருளே"

என்றும் திருவருட்பாவின் அருள்விளக்க மாலையில் அறிவிப்பார் ஆயினார். (11)

**பொன்னாகி மணியாகிப் போக மாகிப்**
**புறமாகி அகமாகிப் புனித மாகி**
**மன்னாகி மலையாகிக் கடலு மாகி**
**மதியாகி ரவியாகி மற்று மாகி**
**முன்னாகி பின்னாகி நடுவு மாகி**
**முழுதாகி நாதமுற முழங்கி எங்கும்**
**மின்னாகிப் பரவியின்ப வெள்ளம் தேக்க**
**வியன்கருணை பொழிமுகிலாய் விளங்கும் தேவே.**

(ப-ரை) பொன் ஆகி --, மணி ஆகி --, போகம் ஆகி --, புறம் ஆகி அகம் ஆகி புனிதம் ஆகி - வெளியாகி, உள்ளாகி, மிகு தூய்மையாகி; மன் ஆகி - என்றும் நிலைபேறு எய்தியதாகி; மலை ஆகி --, கடலும் ஆகி --, மதி ஆகி ரவி ஆகி - சந்திரனாகி சூரியனாகி; மற்றும் ஆகி -- மற்றுமுள்ள விண் மீன்கள் ஆக விளங்கி, முன் ஆகி பின் ஆகி நடுவும் ஆகி - (எதற்கும்) முற்பட்டதாகி, பிற்பட்டதாகி, இடைப்பட்டதும் ஆகி; முழுது ஆகி - (இதுகாறும் கூறியவை அல்லாத) எல்லாமும் ஆகி; நாதம் உற முழங்கி - ஒலியெழ இடித்து; எங்கும் மின் ஆகிப் பரவி - எங்கணும் படர்ந்த மின்னலாய்ப் பரவி; இன்ப வெள்ளம் தேக்க - இன்ப வெள்ளம் நிரம்பி வழிய; வியன் கருணை பொழி முகிலாய் விளங்கும் தேவே - அகன்ற பரப்பில் பொழியும் அருள் மேகமாகி விளங்கும் பேரொளி மயமான பெருமானே, (எ-று)

(வி-ரை) ஆடகம், கிளிச்சிறை, சாநதம், சாம்பூநதம் என நலம் சிறந்த பொன்கள் நான்கு வகை. இவைகள் ஒன்றின் ஒன்று ஏற்றம் உடையன. மக்கள்குலம் மதிக்கும் கனகம், என்றும் களங்கம் இல்லாதது. "பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்" என்று எண்ணிப் பொன்வண்ணத்தந்தாதி இறைவனை ஏத்துகின்றது.

"ஒன்பது மாற்றினும் உயர்ந்த பொன்னால் அமைந்த விக்கிரகம் ஆலயத்து இருந்தால், மகத்துவம் அதிகம்; மாற்றுதாழின் மகிமை குறையும்; மாற்று உயர்ந்த தங்கரேக்கில் ஐந்தெழுத்தை அடைத்து விக்கிரகத்தின் அடியில் வைத்தால், உயர்ந்த மகத்துவம் உளதாகும்; இது ரகசியம்" என்பது வள்ளலாரது வசனப் பகுதி. இந்த நிலையை உணர்ந்து, 'பொன்னாகி' என்று போற்றினார்.

(1) "அண்டத்தையும், அண்டப் பொருள்களையும், பார்வைக்குப் புலனாம்படிக் காட்டுவது, பரம்பரமணி.

(2) பிண்டத்தையும், பிண்டப் பொருள்களையும், பயன் விளையக் காட்டுவது, பராபரமணி.

(3) எண்ணியவைகளை எண்ணியவாறு எய்தச் செய்வது, அரும்பெறல் மணி.

(4) ஆகாயத்தில் உள்ள பொருள்களை ஆட்டி வைப்பது, சுகனமாமணி.

(5) நிலவுலகையும், நிலவுலகப் பொருள்களையும் ஆட்டி வைப்பது, சரஒளிமணி.

(6) காணப் பெறும் உலகம் முழுதும் உலவி வர உதவுவது, கலைநிறைமணி.

(7) இயங்குபொருள், நிலைப்பொருள்கள் இடத்தில் நிலைத்து நிற்பது வித்தமணி.

(8) நலம் மிகு சித்திகள் நடைபெறச் செய்வது, சித்தி செய்மணி.

(9) அழியாப் பெருவாழ்வு அளிப்பது வளரொளிமணி. இவ்வளவும் வள்ளலார் அருளிய வசனப் பகுதி.

இவைகளுடன் முத்து, மரகதம், வைரம், நீலம், வைடூரியம், கோமேதகம், புட்பராகம், பவளம், மாணிக்கம் எனும் நவமணிகளும் இந் நானிலத்துள. அத்தன் அருள்ஒளி அவைகளில் விரவி யிருத்தலின், மணிகட்கு அதிக மதிப்பேறியுளது. மகிமை யிவைகளை யறிந்து, 'மணியாகி' என்றார்.

மாயாமலச் செயல்கள், புவன போகங்களாகப் பொங்கியுள.

"பூசி முடிப்பனவும் பூண்பனவும், பொன்துகிலும்
ஆசை மிகுந்த அரசியர்க்காம்"

என்பது ஒழிவிலொடுக்கம். இவைகட்கு அயலாக, சிவம் சீவனில் தோய்தல் சிவபோகம் எனப்பெறும். சீவன் முத்தர்க்கே இப்பேறு சித்திக்கும்; இதனைப் 'போகமாகி' என்றார்.

எந்தப் பொருளிலும் அளவளாவிப் புறத்தினும் இனிது பொலிதலின், 'புறமாகி அகமாகி' எனப் பெற்றது.

இயல்பில் மலம் இல்லா இறைமை, என்றும் தூய்மையில் இருப்பது; நினைவார் களங்கத்தையும் நீக்குவது ஆகலின், 'புனிதமாகி' என்றார். ஏற்றத் தாழ்வு இன்றி என்றும் ஒரே நிலையில் இருத்தலின், 'மன்னாகி' எனப் பெற்றது.

மலைகள் யாவும், தரையை வேர்களால் தாங்குகின்றன. அதுபோல் அண்டபிண்ட சராசரம் அனைத்தையும் தாங்குதலால், 'மலையாகி' என்று செய்தி மதித்தற்கு உரியது. 'மலையே மலைகூறிடு வாகையனே' என்பது சுந்தர் அனுபூதி.

ஆழம் காண்பதரிதாய், கரையிலாததாய், இறப்பு பிறப்பு இருப்பிற்குக் காரணமான கடலே போல்வது கடவுள் நிலை ஆதலின் 'கடலுமாகி' என்றார்.

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரனுரு அல்லனோ"

என்பது ஐந்தாம் திருமுறை. அதனுடன், பிண்டத்தில் செங்கதிரவன் பிங்கலையாகிப் பிரகாசிக்கிறான். "மண்டலம் பொழி அமிழ்தில் மெய் குளிர" வைக்கிற மதி, இடகலையெனும் பெயரானும் இயங்குகின்றது. சிவனார் கண்கள் எனும் இந்த இரண்டிலும் இறையாட்சி இருத்தலின், 'மதியாகி ரவியாகி' என்றார். அருளும் பரையும் ஆகியது ஞான ஆகாயம். அதைக் கடந்தால் சிவ சந்திர ஆட்சி தெரியும். வித்தக ஆநந்த அமிர்தம் அவனில் விளங்கும். இந்த அருமை இங்கு எண்ணத் தகும்.

மின்னும் விண்ணின் மீன்கள் யாவும், சிவனார் அருளொளி சிந்திய திவலைகள்; இது யோக தத்துவ உபநிடதங்களின் உள்ளுரை. உரிய இந்த அருமையை ஓர்ந்து, 'மற்றும் ஆகி' என்றார்.

முன்னும் பின்னும், இதய கமலத்தும், நடு நாடியினும் இறை நடமுளது. ஆதலின், 'முன்னாகிப் பின்னாகி நடுவுமாகி' எனப் பெற்றது. அந்த நடம் இல்லாத இடமே இல்லையாதலின், 'முழுவதுமாகி' என்றார்.

கைம்மாறு கருதாத கார்முகில், இடித்து மின்னி எங்கும் பரவி, நீர்நிலை நிரம்புமாறு பெய்யும் செய்தியைப் பெரிதறிவம். அதுபோல் பேரருள் பெருகி, ஞான விண்ணில் பரநாத முழுக்கெழுப்பி, பரவிந்துவின் ஒளிபரப்பி, இதய நிலத்தில் இன்ப பெருகக் கருணை பொழியும் கடவுள் நிலையை, இறுதியடி எண்ண வைக்கின்ற அருமையைச் சொல்வதற்கு உலகில் சொற்களே இல்லையே. (ஓம்.)

வியன் என்பது அகலிடம்; கருணைக்கு அடை, "மன்னானாய்--பொன்னானாய், மணியானாய், போகமானாய்" எனவும், "மதியமும் ஞாயிறும் ...... அந்தரமும் அலைகடலும் ஆனான்" என்பவை, தமிழ்மறையில் உள்ள தனிப்பெரும் பெயர்கள். (12)

**அரிதாகி அரியதினும் அரிய தாகி**
**அநாதியாய் ஆதியாய் அருள தாகிப்**
**பெரிதாகிப் பெரியதினும் பெரிய தாகிப்**
**பேதமாய் அபேதமாய்ப் பிறங்கா நின்ற**
**கரிதாகி வெளிதாகிக் கலைக ளாகித்**
**கலைகடந்த பொருளாகிக் கரணா தீதத்**
**தெரிதான வெளிநடுவில் அருளாம் வண்மைச்**
**செழுங்கிரணச் சுடராகித் திகழும் தேவே.**

(ப-ரை) அரிது ஆகி - (காணற்கு) அரியது ஆகி; அரியதினும் அரியது ஆகி - (அகப்படுதற்கு) அரும்பொருள் அனைத்தினும் அரும்பொருளாகி; அநாதி ஆகி - காலவரம்பு காணாததாய்; ஆகி ஆய் - (அனைத்திற்கும்) முதலதாய்; அருளது ஆகி - அருளின் சொரூபம் ஆனதாய்; பெரிதாகி - (அனைத்தினும்) பெரிய பொருளாய்; பெரியதினும் பெரியது ஆகி - பெரிய பொருள்கள் எல்லாவற்றினும் பெரும் பொருளாகி; பேதம் ஆய் - (ஒவ்வொரு சமயத்தினும்) வேறுபாடு தோன்ற விளங்குவதாய்; அபேதம் ஆய் - (சொரூப நிலையில்) பேதம் இல்லாததாய்; பிறங்கா நின்ற கரிது ஆகி வெளிது ஆகி - விளங்குகின்ற கரியது வெண்மையது என்று நினைக்கின்ற நிறங்கொண்டதாய்; கலைகள் ஆகி - அருள் நூற்கள் அனைத்தும் ஆனதாய்; கலை கடந்த பொருள் ஆகி - சொற் பிரபஞ்சமான கலைகட்கு எட்டாத பொருள் என்று கவினுவதாய்; கரண அதீத தெரிது ஆன வெளி நடுவில் - அந்தக் கரண சிந்தனைக்கு அப்பாற்பட்ட சிதம்பர நடுவில்; அருள் ஆம் வண்மை செழும் கிரணச் சுடர் ஆகித் திகழும் தேவே - கருணை விலாச ஈகையில் செழிந்த கதிர்களையுடைய (சுயஞ்சோதிச்) சூரியனாக விளங்கும் தெய்வமே, (எ-று)

(வி-ரை) அரிது பெரிது, பேதம் அபேதம், கரிது வெளிது, கலைகள் கலைகளில் கடப்பு, கரணம் கரண அதீதம் என உடன்பாடும் எதிர்மறையுமான கடவுள் நிலையைக் கருதிய பா இது.

கதிரவன் புறத்தில் காணப் பெறுகிறான்; இது பருமைக் காட்சி; கதிரவன் கண்களுள் கலந்தபோது, அக் கதிரவனைக் காண முடிவதில்லை.

உடம்புளது; உடம்புள் உயிருளது; உயிருள் உணர்வுளது; உணர்வுள் ஒளியுளது; ஒளியுள் தெய்வம் உளது; எனினும் கருதிய உயிரை, உணர்வை, ஒளியைக் கண்கள் காண முடிவது இல்லை.

"சென்று சென்று, அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் திருப்பெருந் துறையுறை சிவனே! ஒன்றும் நீ அல்லை, அன்றி ஒன்று இல்லை, யார் உனை அறியகிற் பாரே" என்று திருவாசகம் தெரிவித்தபடி,

'அரிதாகி அரியதனினும் அரியதாகி' என்றார். வாக்கு மனம் ஆக்கையெனும் மூன்றானும் அறிதற்கு அரியது என்பதை, அரியது அரியது அரியது எனும் உரிய தொனி தோன்ற உணர்த்தியபடி.

ஆதி என்பது கால வரம்பு; அநாதி - கால தத்துவம் கடந்த நிலை. மற்று, அனைத்திற்கும் முதல் பொருளை ஆதி எனவும், எப் பொருட்கும் அப்பாலதை அநாதி யெனவும் அறிவித்தபடி,

"ஆதி என்பது கீழ்; அது, கால்; அநாதி என்பது மேல்; அது, தலை." இது வள்ளலாரது வசனப் பகுதியின் அறிவிப்பு. வித்தில் இருந்து விருட்சம் என்பதுபோல், அநாதியி லிருந்து வெளிப்பட்டது ஆதி. அநாதி என்பது சொரூபம்; ஆதி என்பது தடத்தம் எனினுமாம்.

உயர்ந்த அருளிரக்கத்தால் பருமை, நுண்மை, காரணம் எனும் மூன்று காயத்தினும் கலந்திருந்து, 'திருத்தித் திருத்தி வந்து' சிந்தையில் தங்கிச் சிறப்பளித்தலின், 'அருளதாகி' என்றார்.

உலக உருவான போது, பெரிய பொருள்; உலகைத் தன்னுள் அடக்கிய பொழுது, பெரியதினும் பெரிய பொருள்; வடமொழியில் இது ப்ரஹ்மம் என்று பெயரிடப் பற்றுளது. இதை, 'பெரிதாகிப் பெரியதினும் பெரியதாகி' என்றார்.

தடத்தத்தில் பேதமான பல திருமேனிகள் பேசப்பெறும். முரணும் சமயங்கள், அது குறித்து மோதலை எழுப்பும். அவ்வச் சமயிகள், புறத்திற் குறைகூறும் போக்கைத் தவிர்த்து, தமக்கென வகுத்த அனுட்டானங்களைத் தழுவி யிருந்தால், பரிபாகத்திற்குத் தக்கபடி, தூய சொரூப ஜோதி தோன்றும். அந்நிலைகளை, 'பேதமாய் அபேதமாய்' என்று அதி நுட்பமாக அறிவித்தார்.

"ஏக வர்ணம், த்வி வர்ணம், திரி வர்ணம், சதுர் வர்ணம், பஞ்ச வர்ணம்" என்பது மந்திரச் செய்திகள். அதற்கேற்ப, 'கரிதாகி வெளிதாகி' எனப் பரனது நிறங்களைப் படித்தார்; இது, பிற நிறங்கட்கும் உபலக்கணம். நிறங் கடந்த பொருட்கு நிறங் கூறலும் ஒரு நியதி. வெள்ளைக்கில்லை கள்ளத் தன்மை என்பது, வழக்கியல் மொழி. "அறநிறம் கரிதோ" என்பது விபீடணன் வாக்கில் கம்பர் மனநிலை. மற்று இவ்விரு நிறங்கள், வெண்ணீறு சண்ணித்த திருமேனிச் சிவத்தையும், நீல் நிற உமை மேனியையும் நினைவுறுத்தும். எந்தப் புராணங்களும், ஆரம்பத்தில் கருமுகில்கள் புறப்பட்டு, கொணர்ந்த நீரை மழைப் பெயரால் கொட்டிவிட்டு, வெளுத்துச் சென்றன என்று வாயாரப் பாடுவது வழக்கம். அக் கருமைக்கும் வெண்மைக்கும், சிவ நிறத்தையும் தேவி நிறத்தையும், சிவ நிறத்தையும் திருமால் நிறத்தையுமே குறிப்பாகப் புலவர்கள் நினைவு கூர்ந்தனர் என்பதும் இங்கு எண்ணத் தகும்.

இருக்கும் நூற்கள் யாவும், புனித மெய்ப் பொருளைப் புகல்கின்றன; புத்தகப் பெட்டகத்துள் பொருள் நிலை; பிரணவம் ஐந்தாகப் பிரியும்; அவைகள் அகர உகர மகர விந்து நாதம் எனப்பெறும்; அகரத்தில் விசயை, சௌமியை முதலிய 10; உகரத்தில் குகை, மனோரமை முதலிய 16; மகரத்தில் சிரவணி, சிராவணி முதலிய 24;

விந்துவில் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி முதலிய 4; நாதத்தில் இந்திகை, தீபிகை முதலிய 10ம் தோன்றின; இந்த ஒரு செய்தியே கலைகள் எங்கிருந்து தோன்றின என்று காட்டுகின்றன அல்லவா. அந்த அருமையை அறிந்தே அவைகளை வைத்துப் பூசையில் வழிபடுவம்; எனினும், வழிகாட்டும் கைகாட்டி மரங்கள் என்றே அனுபவ ஞானிகள் அவைகளை அறிந்துளர்.

"வேதசாத் திரமிருதி புராணகலை ஞானம்
விரும்பசபை வைகரியா தித்திறங்கள் மேலாம்
நாதமுடி வானஎலாம் பாச ஞானம்"

என்று, குறிப்பாகச் சித்தியார் கூறுகின்றது. பதியறிவு ஆணறிவு; பாச அறிவு பெண்ணறிவு; பதியொடு கூடிப் பதியறுவாயும், பாச அறிவொடு பயின்று பாச அறிவாயும் இருக்கும் பசு அறிவை, அலி அறிவு என்று ஒழிவிலொடுக்கம் உரைக்கும். இந்த நியாயத்தாலும், நூல்களாகியும் நூலறிவிற்கு எட்டாத நுண்பொருளாயும் உள்ளானை, 'கலைகளாகிக் கலைகடந்த பொருளாகி' என்றும் காட்டினார்.

ஞானிகளின் கரணங்கள் ஒருமுகம் பெறும். மற்றவர்கட்குப் பன்மையாகி மல்லடிக்கும்; ஆதலின், அவைகளின் செயல்கட்குப் பரம் அகப்படுவது இல்லை. அதைக் 'கரண அதீதம்' என்றார்.

இதய குகையின் நடு இடம், பிண்ட சிதம்பரம்; அத்தகராகாசத்தில் சிவசூரியன்; அவன் கிரணங்கள் ஒவ்வொன்றும், அருட்கொடையை இடையறாது அருள்கின்றன.

சூரியன் வாளா இருந்தாலும், அவன் திருமுன் தாமரைகளுள் ஒன்று அரும்பல்; மற்றொன்று அலர்தல்; பிறிதொன்று உலர்தல் கண்டுளம்; அதுபோல், சிவசூரியன் வாளா இருந்தாலும், அவனது அருள் கதிர்களின் அருட்கொடை, படைத் தலாகிய ஐந்தொழில்கள் என்பதை உய்த்துணர் வைப்பாக ஓதியபடி. (13)

**உருவாகி உருவினில்உன் உருவ மாகி**
**உருவத்தில் உருவாகி உருவுள் ஒன்றாய்**
**அருவாகி அருவினில்உன் அருவ மாகி**
**அருவத்தில் அருவாகி அருவுள் ஒன்றாய்க்**
**குருவாகி சத்துவசிற் குணத்த தாகிக்**
**குணரகிதப் பொருளாகிக் குலவா நின்ற**
**மருவாகி மலராகி வல்லி யாகி**
**மகத்துவமாய் அணுத்துவமாய் வயங்கும் தேவே.**

(ப-ரை) உரு ஆகி - (சம்புபட்ச சதுர்முகன் எனும்) திருவுருவாகி; உருவினில் உள் உருவம் ஆகி - (பிரமனெனும்) உருவினுள் (திருமால் என்னும்) திருமேனியாகி; உருவத்தில் உரு ஆகி - (திருமால்) உருவுள் (உருத்திர) வடிவம் கொண்டது ஆகி; உருவுள் ஒன்றாய் - (அவ் உருத்திர) வடிவுள் ஒப்பற்ற மகேச உருவம் தாங்கியதாய்; அரு ஆகி - (அம் மகேச உருவுள் விந்து எனும்) அருவம் ஆகி; அருவின் உள் அருவம் ஆகி - (விந்து எனும்) அருவத்துள் (நாதம் எனும்) அருவம் ஆகி; அருவத்தில் அரு

ஆகி - (நாத) அருவத்துள் (சக்தி எனும்) அருவம் ஆகி; அருவுள் ஒன்றாய் - அருவ சக்தியுள் ஒப்பற்ற சிவமாகி; குரு ஆகி - (சதாசிவ அருவுருவக்) குருவின் திருமேனி கொண்டதாய், சத்துவசித் குணத்தது ஆகி - சாத்விக ஞானப் பண்புளதாகி; குணரகிதப் பொருளாகி - (அரிய குணங்கள்) அனைத்துக்கும் அப்பாற்பட்ட பரம் பொருளாகி; குலவாநின்ற மரு ஆகி மலர் ஆகி வல்லி ஆகி - (எக்காலத்தும்) விளங்குகின்ற (அருள்) மணமாகி, மலராகி, (மலர் விளையும்) கொடியாகி; மகத்துவமாய் அணுத்துவம் ஆய் வயங்கும் தேவே - பெரியதிற் பெரியதாய்ச் சிறியதிற் சிறியதாய்ப் பிரகாசிக்கும் பெருமானே, (எ-று)

(வி-ரை) உருவத் திருமேனி நான்கு அருவத் திருமேனி நான்கு. அருவுருவத் திருமேனி ஒன்று. ஆணவத்தைத் தவிர்த்து, கன்மத்தைக் கழிப்பித்து, கருணையுடன் உயிர்களைக் காத்தல் கருதி, அத் திருமேனிகள் ஒன்றுள் இருந்து ஒன்று எழும்; ஒடுக்க காலத்தில் ஒன்றுள் ஒன்று ஒடுங்கும். இங்ஙனம் 'நவம்தரு பேதமாக நாடகம் நடிப்பன்' நம்பன்.

உலகியல் கலகத்தில் விருப்பில்லை; வெறுப்பும் இல்லை என்னும் மனநிலை எய்தியபின், பெருகிய ஞானத்தில் வேட்கை பிறக்கும். அந்நிலை கண்டு, இதய சதாசிவம் விமல குருவாகி வெளிப்படும். ககன மெய்ப்பொருளைக் காட்டும், இன்று முதல் நீ சுதந்திரன் என்று அருளும். உருவ இறைவன், அருவ அமலன், அருவுருவ குருவாகி இங்ஙனம் அருளும் அருமையை, 'குருவாகி' என்று குறித்த அருமை கோடி பெறும்.

"அகளமாய் யாரும் அறிவரிது, அப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற"

(அகளம் - சொரூப சிவம். சகளம் - குரு திருமேனி)

வந்து என்ன செய்தது எனில்,

"தானாகத் தந்ததென் றுந்தீபற"

(தானாகத் தந்தது - தன் நிலையை ஆன்மாவிற்குத் தந்தது)

இங்ஙனம் திருவுந்தியாரில் இந்நுட்பம் தெரிவிக்கப் பெற்றது.

கொடியுளது; அதனில் மலருளது; மலருள் மணமுளது. அதுபோல் இறைவன் உளன்; அவனில் அருள் உளது. அருளில் மணமுளது. மலரில் உள்ள மணம், வெளிப்பட்டு எவர்க்கும் இன்பம் விளைவிக்கும்.

குண்டலினிக் கொடியுளது. அது செல்லும் இடந்தோறும் ஆதார மலருளது; உச்சியில் சகஸ்ரார கமலமுளது. மலர் தோன்றும் காலத்தில் மணம் தோன்றும்; சொல்லால் அந்த சுகம் சொல்லி முடிவது அல்லவே!

"உகந்த தண்ணீரிடை மணந்த சுகந்த மணமலரே" எனும் திருவருட்பா இங்கு நினைவில் உறுகிறது அல்லவா!

"பரியர் நுண்ணியர் பார்த்தற்கு அரியவர்"

என்பது, திரு ஐயாற்றுத் தேவாரம்.

"அண்டமோர் அணுவாம் பெருமை கொண்டு,
அணுஓர் அண்டமாம் சிறுமைகொண்டு, அடியேன்
உண்டவூண் உனக்காம் வகை எனதுளத்தும்
உள்கலந் தெழுபரஞ் ஜோதி"

என்பது திருவிசைப்பா. அதற்கேற்ப, 'மகத்துவமாய் அணுத்துவமாய் வயங்கும் தேவே" என்றார். மகத்துவம் பெரியதிற் பெரிய மகிமையது; அணுத்துவம் பரம நுண்மை யாதல் (14)

**சகலமாய்க் கேவலமாய்ச் சுத்த மாகிச்**
**சராசரமாய் அல்லவாய்த் தானே தானாகிப்**
**அகலமாய்க் குறுக்கமாய் நெடுமை யாகி**
**அவையணைத்தும் அணுகாத அசல மாகி**
**இகலுறாத் துணையாகித் தனிய தாகி**
**எண்குணமாய் எண்குணத்தெம் இறையாய் என்றும்**
**உகவிலாத் தண்ணருள்கொண் டுயிரை யெல்லாம்**
**ஊட்டிவளர்த் திடுங்கருணை ஓவாத் தேவே.**

(ப-ரை) சகலம் ஆய் - (ஆன்மாவின்) சகல நிலையில் சார்வு ஆகி; கேவலம் ஆய் - கேவல நிலையில் கேண்மையதாய்; சுத்தம் ஆகி - (தொன்மைச்) சுத்த நிலையில் தோய்வாகி; சர அசரம் ஆய் - இயங்குதிணை நிலைத் திணையில் இயல்பாகி; அல்ல ஆய் - (மேற்சொன்ன நான்கு நிலையில் இருந்தும் இல்லாதும் இருக்கும்) அன்மை நிலையாகி; தானே தான் ஆய் - (முன்னிலை படர்க்கை ஒன்றும் இன்றித் தன்மை மட்டுமான) தான் மட்டுமே இருப்பு என்று ஆகி இருப்பதாய்; அகலமாய் குறுக்கும் ஆய் நெடுமை ஆகி - (எப் பொருளிலும் இயல்பா யுள்ள) நீளம் அகலம் கனம் எனும் மும்மையுமாகி; அலை அணுகாத அசலம் ஆகி - (மேற்சொன்ன) அவைகள் யாவும் (இயல்பில் தன்னை) அணுக முடியாதபடி அசையாப் பொருள் ஆகி; இகல் உறா துணை ஆகி - (எதனொடும்) பகையில்லாமல் (ஒவ்வொன்றிற்கும்) உறுதுணையாகி; தனி ஆகி - ஏகாந்தம் ஆகி; எண்குணம் ஆய் - இயல்பான எட்டுப் பண்பின் சொரூபம் ஆகி; எண்குணத்து என் இறை ஆய் - (அந்த) எண் குணங்களும் தன்னதே என்று இருக்கும் எமது பரம பதியாகி; என்றும் உகல் உறாத் தண் அருள் கொண்டு - என்றும் சிதைவு இல்லாத தண்மைக் கருணை தழுவியதாய்; உயிரை எல்லாம் ஊட்டி வளர்த்திடும் - (கேவலம் சமலம் சுத்தமென்னும் முந்நிலை) உயிர்கள் அனைத்தையும் (தரத்திற்குத் தக்கபடி) ஊட்டி வளர்க்கும்; கருணை ஓவாத் தேவே - தெளிந்த அருள் சக்தியை (எந்நாளும்) நீங்காது இருக்கும் தெய்வமே, (எ-று)

(வி-ரை) உடல் இல்லை. இச்சை இல்லை. அறிவில்லை. எந்தச் செயலும் செய்வது இல்லை. அதனுடன் ஆணவச் சார்பால் முழு மறதி, முழு அறியாமை, முழு இருள், முழு துன்புள் மூழ்கி உயிர்கள் பல முடங்கியுள, அந்த நிலையில் இருந்து, அவைகள் தாமே அகல அறியா, இது கேவல நிலை.

முற்றறிவுள்ள முதல்வன், இரக்கம் பெரிதுடைய எம்மான், ஆன்மாக்களின் அவதியை யகற்றி, அவைகளைத் தன்போல் ஆக்கத் திருவுளம் கொள்கிறான். ஆர்த்த தளையை முறையே அவிழ்க்க, மாயையின் மூலம் ஆக்கை பலவும் அளிக்கின்றான். அறியாமை முதலியவற்றை அகற்ற, மாயை அரியதொரு கருவி. "மாயா தனு விளக்கு" என்பது, சிவஞான சித்தியார் கூறும் செய்தி.

தனுகரண புவன போகம் யாவும், மாயையின் காரியம். பகரும் இவைகளை, ஆன்மாவுடன் இணைப்பதற்குப் படைப்பு என்று பெயர்.

புல் செடி கொடி முதலிய எண்ணிறந்த உடல்களை எய்தி, புழு மீன் பறவை விலங்கு ஆகிய யாக்கைகளில் விளங்கி, ஒவ்வொன்றிலும் சிறிது சிறிதாக அறிவு சிலிர்த்து, இறுதியில் அரிய மனித தேகத்தை யடைகிறது ஆன்மா. மக்கள் பிறப்பில் வந்தபின், முதன்மைப் பகுத்தறிவு முதிர்கிறது.

கேவல நிலைபோல் இன்றி, இப்போது இருளொடு ஒளியும் இணைகிறது. மறதியொடு நினைவும் மலர்கிறது. அறியாமையொடு, அறிவும் தொடர்ந்து அமைகிறது. துன்பத்தொடு இன்பமும் தொடர்கிறது. இது சகலநிலை என்று சாதுக்கள் கூறுவர்.

இந் நிலைக்குத் தன்னைக் கொணர்ந்த இறைவனை, உணர்ந்து ஆன்மா உள்ளம் உருகும். இது நன்றி மறவா நலன். உருகும் உள்ளத்தில் பரமன் உறைவன்.

மாயையைப் பயன்படுத்திக் கொள்ள அறியாமல் மயங்கிய ஆன்மா, தொந்த பந்தத்தில் தொடர்பு கொண்டு தொல்லை கொண்ட சீவன், ஆக்கை சாய்ந்தபின், பழைய கேவலத்தைப் பற்றிப் பதைக்கும்.

எப்பிறப்பும் இல்லானை எண்ணி யிருந்த உயிர்க்கு, வெம்மைப் பிறவியின் வேறும். இதன் பயனாக, இருள்பாதி ஒளியாதி யென்பதின்றி முழு ஒளியாய், மறதிபாதி நினைவுபாதி யென்பதன்றி முழுநினைவாய், அறிவுபாதி அறியாமை பாதி யென்பதன்றி முழு அறிவாய், துன்பம் பாதி இன்பம் பாதி என்பதின்றி முழு இன்பத்தில் மூழ்கும்.

முதன்மை இந் நிலையே முந்திப் பேறு. இது, சுத்தநிலை என்று சொல்லப் பெறும். 'சகலமாய்க் கேவலமாய்ச் சுத்தமாகி' என்று அங்கங்குள உயிர்க்கு அருளறிவை ஊட்டி, அத்தன் வளர்க்கும் அருமையை அறிவித்தது முதலடி.

கேவலம் என்பது தனித்து, சரீர உபாதியின்றி, அவித்யோபாதிக்கு உட்பட்டு, பிரத்யகான்மா என்னும் பெயரைச் சீவன் பெறும்நிலை ஒன்று உளது எனலை, உறங்குவார்பால் உணரலாம்.

சகல நிலை, விழித்து இருப்பார் சூழ்நிலையிலும் விளங்கும்.

மாய்ந்து நிலத்தில் மறையாத வண்ணம், நிமல விண்ணைப்போல் உடலை நிறுத்தி, எந்த இடத்தையும் ஈர்க்கவுள்ள இறைமயமாக இருப்பார்பால் அரிய சுத்த நிலையை அறிந்து கொள்ளலாம்.

சராசரம் - உம்மைத் தொகை; தீர்க்க சந்தி. சரம் - சங்கமம், இயங்கு திணைப்பொருள், இயங்கியல் பொருள் எனப்பெறும். அசரம் - ஸ்தாவரம், நிலைத் திணைப்பொருள், நிலையியல் பொருள் என்றும் பெயர்பெறும். எழுவகைப் பிறப்புள், தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன எனும் ஆறும் சரம்; ஸ்தாவரம் அசரம். எனவே, சரமென்பவை சஞ்சரிப்பவை; அசரம் - சஞ்சரியாதவை என்று எண்ணுவம்.

இறைவன் எதனிலுமுளன்; எதனிலும் அலன் எனுமாறு இருத்தலின், "சராசரமாய் அல்லவாய்" என்றார்.

அகலம் நீளம் கனம் எப்பொருளிலும் இருக்கும்; அம் மூன்றினும் உளது அமலன் ஆட்சி; அவைகளை 'அகலமாய்க் குறுக்கமாய் நீளமாகி' என்று, வள்ளலார் அருளிய அருமை மறக்க முடிவதில்லையே.

"அகலம் அளக்கில் பார் இல்லா அடி"

"அரை மாத்திரையில் அடங்கும் அடி"

"நீள் விசும்பை ஊடறுத்து நின்றஅடி"

என அத்தன்மையை, திருவடி மேல் ஏற்றி அப்பர் பாடிய அருமையை இங்கு எண்ண இன்பம் எய்துகின்றதே!

யாவும் என் செயல்; இறை செயல் என்பது பொய்யே பொய் என்று இறுமாத்து உரைத்து, இருவினை தேடியிருக்கும் உயிரைச் சினவாமல், சிற்றறிவுடைய சீவனெனத் திருவுளம் கொண்டு, உடற்குத் துணையாய், உயிர்க்குத் துணையாய் வழிகாட்டும் வான் பொருளாதலின், 'இகலுறாத் துணையாகி' என்றார். எதனிலும் இருந்தே ஒட்டாது பற்றாது இருத்தலின், 'தனியதாகி' என்றார்.

"எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்குமவன் தானே தனி"

என்பது திருவருட் பயன்.

எண்குண விவரம் முன் வந்துளது. அந்த எட்டுப் பண்பும் உடைமையென உடையவனாதலின், 'எண்குணத்து எம் இறை' என்றார். குணத்தை யுடைய குணி பரன் என்பது குறிப்பு.

கருவில் இருக்கும் சேய்க்கும், முட்டையுள் இருக்கும் குஞ்சிற்கும், கல்லுள் உள்ள தேரைக்கும் ஊட்டி வளர்ப்பது ஒருவகை. தகுதிக்குத் தக்கபடி உமிழ் நீராகி, உணவில் சத்தாகி உடலை வளர்த்து, அறிவில் அருளமுதை அழியா அருளொடு ஊட்டி வளர்க்கும் பிராட்டியைப் பிரியாத பிரான் எனும் அருமையை, இறுதி அடியில் எண்ணும் போதே உள்ளம் நெகிழ்ந்து உருகுகின்றதே! மேலும் இரண்டற்ற அத்துவிதத்தில் வெளிப்படும் அந்த ஆநந்தமான அருளமுதம். அதை ஆளுடை பிள்ளையார்க்கு அம்பிகை அருந்திய வரலாறு, பெரிய புராணத்தில் பேசப் பெறும். அம்மை ஆநந்த வடிவி ஆதலின், அவன் ஊட்டுவதும் ஆநந்தம் என்றபடி, (15)

**வாசகமாய் வாச்சியமாய் நடுவாய் அந்த**
**வாசகவாச் சியங்கடந்த மவுன மாகித்**
**தேசகமாய் இருளகமாய் இரண்டும் காட்டாச்**
**சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும் பந்த**
**பாசமுறாப் பதியாகிப் பசுவு மாகிப்**
**பாசநிலை யாகிஒன்றும் பகரா தாகி**
**நாசமிலா வெளியாகி ஒளிதா னாகி**
**நாதாந்த முடிவில்நட மியற்றும் தேவே.**

(ப-ரை) வாசகம் ஆய் - (அளவிறந்த) சொற்கள் ஆகியும்; வாச்சியம் ஆய் - (புனித அவைகளில் உள்ள) பொருள்களாகியும்; நடுவாய் - (அவற்றின்) நடுவில் இருப்பது ஆகியும்; அந்த வாசக வாச்சியம் கடந்த மவுனம் ஆகி - அச்சொற் பொருள்கட்கு அப்பாற்பட்ட மோனம் ஆகியும், தேசு அகம் ஆய் - ஒளிப் பொருள்களின் உள்ளாகியும்; இருள் அகம் ஆய் - இருளின் இதயம் ஆகியும்; இரண்டும் காட்டா சித் அகம் ஆய் - (அந்த இருள் ஒளி எனும்) இரண்டையும் காட்டாத (அரிய) பரஞான உள்ளம் ஆகியும்; வித்தகம் ஆய் - (ஆன்மப்) பகுத்தறிவு ஆகியும்; சிறிதும் பந்த பாசம் உறா பதி ஆகி - சிறிது அளவுகூட கட்டாகிய தளையில் கலவாத பரம முதல்வன் ஆகியும்; பசுவும் ஆகி - கட்டுப் பட்ட ஆன்மாவிற் கலந்திருப்பது ஆகியும்; பாசநிலை ஆகி - (இறுக்கி) ஆர்க்கும் பந்தம் ஆகியும்; ஒன்றும் பகராது ஆகி - ஒரு சிறிதளவும் சொல்ல முடியாத சொரூப நிலையது ஆகியும்; நாசம் இலா வெளி ஆகி - (என்றும்) அழிவு இல்லாத (ஞான) விண்ணாகி; ஒளிதான் ஆகி - (அந்த விண்ணில்) பேரொளி தானே ஆகி; நாதாந்த முடிவில் நடம் இயற்றும் தேவே - நாத தத்துவ உச்சியில் தாண்டவம் செய்யும் நங்கள் பெரும, (எ-று)

(வி-ரை) சொல்லில் நாதம்; பொருளில் ஒளி; நாத ஒளியில் வரத சிவம். உரைக்கும் சொல்லிற்கும் பொருளிற்கும் இடையில் உணர்வின் கிளர்ச்சி. அவ்வுணர்வின் கருவில் திருவருள்; இந்த அருமையை, 'வாசகமாய் வாச்சியமாய் நடுவாய்' என்றார்.

சொற்களின் உருவில் சொரூப நிலையைச் சொல்ல முடிவதில்லை; இதனால் சொற்கள் யாவும் சோர்வடைகின்றன. சொற்களில் தோய்ந்துள்ள பொருள்களின் போக்கும் இஃதேதான்.

அத்தன் சொற் பொருள்கட்கு அகப்படுவதாயின், அபிப்பிராய பேதம் காரணமாக எண்ணிறந்த சமயங்கள் எழுந்திருக்க மாட்டாவே.

"பூதங்கள் அல்ல, பொறியல்ல, வேறு புலனல்ல, உள்ள மதியின்
பேதங்கள் அல்ல, இவையன்றி நின்ற பிறிதல்ல என்று பெருநூல்
வேதம் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப கூடல் மறுகில்
பாதங்கள் நோவ, வளையிந்த னாதி பகர்வாரை ஆயுமவரே"

"அல்லையீ தல்லை யீதென மறைகளும் அன்மைச்
சொல்லினால் துதித்திளைக்கும் இச்சுந்தர நாடற்கு
எல்லை யாகுமோ என்னுரை"

என்று பாடுகின்றார் முனிவர் பரஞ்சோதியார்.

ஆரம்பத்தில் வாசகம். அடுத்து வாச்சியம்; அவைகளின் நடு இடம்; அந்த வாசக வாச்சியம் கடந்த பொருள் சிவம். அதை வாசக வாச்சியத்தில் அடக்க நினைத்தது மதியீனம் என்று, அறிந்த முடிவில் விளைகிறது மோனநிலை. அம்மோன நிலையில் சிவம் முறுவலிக்கும். இதையே, "மோன ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிகம்" என்று தகவொடு கூறுகிறார் தாயுமானவர்.

பிரகிருதி உலகில், கலையுலகில், இருவினையில், ஆன்ம வாழ்வில் இருளும் ஒளியும் இருக்கின்றன. இந்த இரண்டும் இல்லா ஞான உளமும் இனிதுளது. அவரவர் பரிபாகத்திற்குத் தக்கபடி அனுபவிக்குமாறு அம்மூன்றும் அமைந்துள. சிறக்க அவைகளைச் செயல்படுத்துதலால், 'தேசகமாய் இருளகமாய் இரண்டும் காட்டா சித் அகமாய்' என்றார். "இருளே வொளியே எனுமெங்கும் ஈசன்" என்பது திருமந்திரம்.

ஆகூழ் போகூழ்க்குத் தக்கபடி ஆன்மப் பகுத்தறிவு அமைகிறது. "ஊட்டுகின்ற வல்விளையாம் உள்கயிற்றால் உள்ளிருந்தே ஆட்டுகின்ற நீ" என்று சிவதேச வெண்பாவில் சித்தித்தபடி, இருக்கும் பகுத்தறிவை இயக்கப் படுத்தலின், 'வித்தகமாய்' என்றார்.

அதிநுட்ப ஞானம் ஆனது. எங்கும் நிறைந்தது. இயல்பில் எதையும் அறிவது. கால தத்துவம் கடந்தது. பேரொளி மயமாய்ப் பிரகாசிப்பது. சத் எனும் பெயர் சார்வது. பழுத்த இன்பம் ஆவது **பதி**.

அறிவித்தால் அறிவது அநாதி ஆனது. காலத்திற்குள் கட்டுப் படுவது. மும்மலத் தொடர்பால் முறைதுறை மறப்பது சதசத் எனும் பெயர் சார்வது. மலரின் அடங்கித் தோன்றும் மணம்போல் பதியைச் சார்ந்து பதிமயமாகி, பாசத்தைச் சார்ந்து பாசமயமாகிப் பல்லிளிப்பது. இங்ஙனமன்றித் தனித்து நில்லாத் தகுதியது **பசு**.

ஆணவம் கன்மம் மாயை என்னும் மலங்கள் மூன்றாய் மலர்வது. அளவிறந்த தனு கரண புவன போகங்களாகத் தழைப்பது. ஆன்மாவால் அறியப்படுவது. அசந்து எனும் பெயர் அமைந்தது. அமல பதியைக் காட்ட அறியாமல், தன் இனமான சடத்தைக்

காட்டும் தரத்தது. ஆன்மாவும் பரமும் ஒரே இடத்தில் இருந்தாலும், அருளார் சிவத்தைக் காண்பிக்க அறியாமல், மாபெரும் ஆன்ம அறிவை மட்டும் மறைப்பது. கடல்நீர் இருந்த இடமெல்லாம், அதன் நிழல் வானம் முழுவதும் பரவி யிருந்தாலும், தன்னின் உப்புத் தன்மை விண்ணைத் தாக்காமல் தண்ணீர் ஒன்றையே தழுவியிருக்கும்; அதுபோல் செயல்படுவது பாசநிலை. சிறிதும் பந்த பாசமுறாப் பதியாகிப் பசுவுமாகிப் பாச நிலையாகி' என்று, திரிபதார்த்த நிச்சயத்தை வள்ளலார் தெளிவு படுத்திய அருமையே அருமை.

சொல்லாகிப் பொருளாகி, அவைகட்கு அப்பாற்பட்டு மோனநிலை விளைவிக்கும் முதலாதலின், உணர இயல்வது அன்றி ஓத எளியதன்று அது என்பார், 'ஒன்றும் பகராதாகி' என்றார்.

பருமை வெளி, நுண்மை வெளி, குணவெளி, கஞ்சுக வெளி, காரணவெளி, ஆன்மவெளி, பெருவெளி, பேரின்பவெளி; வெண்காயத்தை உரிக்க உரிக்க அதனுள் வெண்காயம் என்பது போல், வெளிக்குள் எண்ணிறந்த வெளிகள் உள. அவைகளை முற்பகுதிகளின் உரைகளில் ஓரளவு எண்ணியுளம். தோற்றமுள யாவும் மாற்றமுறும்; அருவமான வெளிகட்கு அழிவில்லை. அந்த வெளிகள் எல்லாம் அத்தன் ஆலயங்கள் ஆதலின், 'நாசமிலா வெளியாகி' என்றார்.

"ஆகாச வண்ணம் அமரர் தவக்கொழுந்து
ஏகாச மாசுணம் இட்டங் கிருந்தவன்
ஆகாச வண்ணன் அமர்ந்துநின் றப்புறம்
ஆகாச மாயங்கி வண்ணனும் ஆமே"

[மாசுணம் ஏகாசம் இட்டு - பாம்பை மேலாடையாகக் கொண்டு. ஆகாச வண்ணம் அமர்ந்து - ஆகாயத் தன்மையாக எங்கும் நிறைந்து, அங்கி வண்ணன் - செந்தீ வண்ணச் சிவபிரான்.]

"புறத்துள் ஆகாசம் புவனம் உலகம்
அகத்துள் ஆகாசம் எம்ஆதி அறிவு
சிவத்துள் ஆகாசம் செழுஞ்சுடர்ச் சோதி
சுகத்துள் ஆகாசம் தானம் சமாதியே"

[புறத்துள் - வெளியில். அகத்துள் - உளத்துள். ஆதியறிவு - சிவஞானம். சமாதி தானம் - நிட்டைகூடும் இடம்.]

இங்ஙனம் குறிப்பிடும் திருமூலரை இங்கு எண்ணல் நலம். ஷடாந்தத்தில் மூன்றாவது இடம் நாதாந்தம். அதன் உச்சியில் உளது அருளாலயம். தத்துவம் முப்பத்தாறும் தனக்கு அன்னியம் என்று தள்ளி முன்னேறிய ஆன்மா, அருளாலயத்தில் உள்ள அருளும் பரையும் தனக்கு அன்னியம் அல்ல என்று அறியும் பொழுது, ஆணவ வாசனை அடியொடு கெடும்; அந்நிலையில் விமல ஆநந்தம் விளையுமாறு, ஆநந்தத் தாண்டவம் செய்வானை, 'நாதாந்த முடிவில் நடம் நவிற்றும் தேவே' என்று விளிப்பாராயினார். (16)

**சகமாகிச் சீவனாய் ஈச னாகிச்**
**சதுமுகனாய்த் திருமாலாய் அரன்றா னாகி**
**மகமாயை முதலாய்க்கூ டத்த னாகி**
**வான்பிரம மாகிஅல்லா வழக்கு மாகி**
**இகமாகிப் பதமாகிச் சமய கோடி**
**எத்தனையு மாகிஅவை எட்டா வான்கற்**
**பகமாகிப் பரமாகிப் பரம மாகிப்**
**பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியும் தேவே.**

(ப-ரை) சகம் ஆகி - உலகம் ஆகியும்; சீவன் ஆய் - ஆன்மா ஆகியும்; ஈசம் ஆகி - (உலகையும் உயிர்களையும்) உடைமையாக உடையவன் ஆகியும்; சதுமுகன் ஆய் - நான்முகன் ஆகியும்; திருமால் ஆய் - திருமகள் மணாளன் ஆன விஷ்ணு ஆகியும்; அரன் தான் ஆகி - உருத்திரன் ஆகியும்; மக மாயை முதலாய் கூடத்தன் ஆகி - சுத்த மாயை முதலான அதிரகஸ்ய ஞான ஆன்மா ஆகியும்; வான் பிரமம் ஆகி - அனைத்தையும் தன்னுள் அடக்கும் (அறிவிற்கும் அறிவாகி), எங்கும் நிறை பெரிய பொருள் ஆகியும்; அல்லா வழக்கும் ஆகி - (இது காறும் கூறிய அவைகட்கு) எதிர்மறையாக வழங்கும் சூழ்நிலை ஆகியும்; இதம் ஆகி - இம்மைநிலை என ஆகி; பதம் ஆகி - பதமுத்தி முதலிய மறுமை அனுபவ நிலையாகி; சமயகோடி எத்தனையும் ஆகி - அளவிறந்த சமயங்கள் அனைத்தினும் இருப்பதாகி; அவை எட்டா வான் கற்பகம் ஆகி - அச்சமயங்கள் அணுக இயலா வண்ணம் தழைத்த கற்பகத் தருவாகி; பரம் ஆகி - (அதற்கும்) மேலானது ஆகி; பரமம் ஆகி - அதி நுட்பம் ஆனது ஆகி; பர அபரம் ஆய் - சிவானுபவம் கலானுபவம் (எனும் அதன் சொரூபம்) ஆகி; பர அம்பரம் ஆய் பதியும் தேவே - பர ஆகாயம் ஆகி (எங்கும்) பதித்து இருக்கும் தெய்வமே, (எ-று)

(வி-ரை) 'சர்வம் சக்திமயம் ஜகத்' என்பது சுருதிச் செய்தி. காணப்படுபவை யாவும் சக்தி சொரூபம்; அதனால் உலகைச் சகம் என்பர் அறிஞர். இதனால்தான் மறைகள், இறைவனை விஸ்வரூபன் என்னும் பெயரால் ஏத்துகின்றன. ஊன்றி அந்த அருமையை உணர்ந்து, 'சகமாகி' என்றார்.

சகத்தில் எங்கும் சீவ வர்க்கங்களே பலவகை உடல்களில் பரவியுள.

அளவிறந்த வினைப்பாரங்களில் அழுந்தியும், சிவானுக்கிரகத்தால் சீவித்திருக்கும் ஆன்ம கோடிகட்குச் சீவர்கள் என்று பெயர். நீறுபோல் உளர் சீவர்கள்; நீறுபூத்த நெருப்புப் போலுளது சிவம். பால்போலுளர் சீவர்கள்; அதன் சுவைபோல் உளது சிவம். மலர்போலுளர் சீவர்கள்; அதன் மணம்போல் உளது சிவம். இங்ஙனம் பல உவமைகளால் எண்ணுமாறு இருத்தலின் 'சீவனாய்' என்றார். (சீவன் - சிவனை அகம் கொண்டோன்)

உலகம் தன் உடைமை; உயிர் உரிமை அடிமை எனுமாறு ஏன்றுளனாகலின், 'ஈசன் ஆகி' என்றார். (ஈசன் - சர்வ ஐஸ்வர்ய சம்பன்னன்.) உலகங்களை உருவாக்கி, விளையளவான உடலுள் புகுத்தும் தொழில்களை நாற்றிசையினும் நடத்தலின்,

'சதுமுகனாகி' என்றார். இவர் சம்புபட்ச பிரமதேவர் எனப் பெறுவர். படைக்கப் பெற்ற உலகங்களில் துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் செய்ய மாதவராதலின், 'திருமாலாய்' என்றார். (திரு - இலக்குமி, மால் - விருப்பம்; சிறந்த மாயன் எனினுமாம்) இவரும் சம்புபட்ச நாரணர்.

தனை அடைந்தவர் துயரைத் தவிர்த்தலின், 'அரன் தான் ஆகி' என்றார் தான் என்பதைத் திரிமூர்த்திகளிடத்தும் கூட்டிப் பொருள் கொளப் பெற்றது. இவரும் சம்புபட்ச உருத்திரர்.

மாயை - உளதை இலதாகவும், இல்லதை உள்ளதாகவும், ஒன்றை மற்றொன்றாகவும் காட்டும் ஒரு சக்தி. மனம் அந்த மாயைக்கு வயப்பட்ட பொழுது, பொருள்களின் நிலையை உள்ளபடி அறியும் தத்துவ ஞானம் உதிப்பது இல்லை. எனவே நிலையுள பொருள்களை நிலையில்லாதன என்றும், நிலையில்லாதவைகளை நிலையுள்ளன என்றும் மாறுபட அறியும் விபரீத ஞானமே விளையும். அதனால், நித்தியமான ஆன்மாவுக்கு யாதொரு தொடர்பும் இல்லாத அநித்தியான உடலையே பற்றிய பொய் அபிமானப் போர்வையுறும்; இந்த மாயை இங்கு எண்ணப்படவில்லை. இது சகமாயை; பிரகிருதி சொரூபம் எனப்பெறும்.

மக எனும் அடையால் மகத்தான மாயை, சுத்த மாயை என்று சொல்லப்பெறும். மகமாயை என்பது ஓங்கார சாயை, கூடஸ்தன் - கூடம்போல் அசையாது இருப்பவன்; சீவ சைதன்யத்திற்கு இடமான சைதன்யமாக இருப்பவன்; அல்லது, சொல் தோன்றற்கு இடமானவன் எனலும் ஒரு வகை. "கூடஸ்தம் அசலம் த்ருவம்" (கீதை 12-4) "கூடஸ்தோ அட்சர உச்யதே" (கீதை 15-16) ஆக்கையுள், ஆன்மாவுள், சாட்சியாக அமைந்த அதிரகஸ்யப் பொருள் எனினும் பொருந்தும். இவ்வளவும் உள்ளடங்க, 'கூடஸ்தன் ஆகி' என்றார்.

நீக்கம் இன்றி எங்கும் நிறைந்து, எங்கும் சான்றாக இருக்கும் பெரிய பொருள் ஆதலின், 'வான் பிரமம்' என்றார். காணாத காட்சி, கேளாத கேள்வி, வழங்காத வார்த்தை மயம் ஆதலின், உலகியலில் வழங்காத புறமாயுள்ள மெய்ப்பொருள் என்பார். 'அல்லாத வழக்குமாகி' என்றார். இம்மை யின்பம், பதமுத்தி இன்பமயமாதலின், 'இகமாகிப் பதமாகி' என்றார். 'விரிவிலா அறிவினார்கள் வேறு ஒரு சமயம் செய்து, எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்" என்று அருள் நூற்கள் அறிவித்தபடி, படிக்கிரமமான சமயங்கள் பலவுள. ஒவ்வொன்றும் மூலப் பரம் பொருளையே முன்னுகின்றன. அவரவர் தரத்திற்குத் தக்கபடி அங்கங்கு இருந்து அருளலின், 'சமயகோடி எத்தனையுமாகி' என்றார். அச் சமயங்கட்கு எட்டாத சொரூப நிலையது ஆயினும், எட்டிச் சென்று உணர்வால் தொட்டவர்க்கு, எண்ணிய எண்ணியாங்கு எய்துவிப்ப தாகலின், 'அவை எட்டா வான் கற்பகம் ஆகி' என்றார். (கற்பகம் - கல்பகம்; அணுகினர்க்கு அவர்கள் நினைத்தவைகளை அருள்வது; கல்பித்தல் - உளதாக்கி அருளல்)

பரம் என்பது, மேலதான முத்தி நிலம்; பரமம் - தனக்கு மிக்கது இல்லாதது. பர+அபரம்--பராபரம்; பரம்-அதி சூட்சம சிவஞானம். அபரம் - கலைகளின் வழியே வந்த நுட்ப அறிவு. இந்த இரண்டன் மயம் ஆயினானை, 'பராபரமாய்' என்றார். பர+அம்பரம் -

பரம்பரம்; பரம் - அதி சூட்சுமம்; அம்பரம் - ஆகாயம்; முன்னுரைகளில் இது குறித்து வந்த செய்திகளை இங்கெண்ணல் நலம். பதிதல் - மேற்சொன்ன ஒவ்வொன்றினும் முத்திரையான தன் கைவண்ணம் காட்டிய அற்புதம்.

"தேசம் கலந்தொரு தேவன் என்றெண்ணினும்
ஈசன் உறவுக்கு எதிரில்லை தானே"

எனும் திருமந்திரம் இங்கு எண்ணத் தகும்.

வான் - பெருமையை உணர்த்தும் பொழுது, உரிச்சொல்; பெயர்ச் சொல்லாகி, வானத்து அளாவிய பெரிய பொருள் எனினும் ஒக்கும். (17)

**விதியாகி அரியாகிக் கிரீச னாகி**
**விளங்குமகேச் சுரனாகி விமல மான**
**நிதியாகும் சதாசிவனாய் விந்து வாகி**
**நிகழ்நாத மாய்ப்பரையாய் நிமலா னந்தப்**
**பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப்**
**பக்கமிரண் டாயிரண்டும் பகரா தாகிக்**
**கதியாகி அளவிறந்த கூதிக னெல்லாம்**
**கடத்துநின்று நிறைந்தபெருங் கருணைத் தேவே.**

(ப-ரை) விதி ஆகி - படைக்கும் பிரமன் ஆகி; அரி ஆகி - திருமாலாகி; கிரீசன் ஆகி - வெள்ளி மலையில் விற்றிருக்கும் உருத்திரப் பிரபுவாகி; விளங்கும் மகேச்சுரன் ஆகி - (என்றும்) பிரகாசிக்கும் மகேச்சுரன் ஆகி; விமலம் ஆன நிதி ஆகும் சதாசிவன் ஆய் - என்றும் களங்கம் இல்லாத அருட்செல்வம் ஆன சதாசிவனாய்; விந்து ஆகி - விந்து தத்துவ ஒளியாகி; நிகழ் நாதம் ஆய் - நலம் விளங்கும் நாதம் ஆகி; பரை ஆய் - பராசத்தியாகி; நிமல ஆநந்தப் பதி ஆகும் பரசிவம் ஆய் - களங்கமிலாத ஆநந்த முதல்வரான பரசிவம் ஆகி; பரம் ஆய் - பரம் பொருள் எனும் பெயர்க்கு உரியதாய்; மேலாய் - (பேர் சொலற்கும் இயலாதபடி அதற்கும்) மேற்பட்ட மெய்ப் பொருளாகி; பக்கம் இரண்டு ஆய் - (சம்பு, அணு எனும்) இரு பக்கங்கள் ஆகி; இரண்டும் பகராது ஆகி - (இது சம்பு பட்சம், இது அணு பட்சம் என்று) இரண்டையும் பிரித்துச் சொல்லக்கூட முடியாததாகி; கதி ஆகி - அடைக்கல நிலயம் ஆகி; அளவு இறந்த கதிகள் எல்லாம் கடந்து நின்று - கணக்கற்ற பதமுத்திகள் யாவற்றிற்கும் அப்பாற்பட்டு இருந்து; நிறைந்த பெரும் கருணைத் தேவே - பரிபூரணப் பேரருளைப் பெருக அருளும் சொரூபப் பெருந் தெய்வமே, (எ-று)

(வி-ரை) விதிப்பவன் விதி விதித்தல் - படைத்தல். அரி - பலபொரு ளொருசொல். தீமையை அழிக்கும் திருமாலை இங்குக் குறித்தது. (ஹரித்தல் - அழித்தல்) கிரி+ஈசன்=கிரீசன்; (கிரி - மலை; ஈசன் - பிரபு.) இவர், வெள்ளிமலையில் உள்ள உருத்திர முதல்வரான சீகண்டர். 'விளங்கு' எனும் அடையால், மகேச்சுரர் பெருமை விளங்கும். சதாசிவத்திற்கு 'விமலமான நிதி' எனவும், பரசிவத்திற்கு நிமலாநந்தப் பதி எனவும் போந்த அடைகள். அந்த மூர்த்திங்களின் அற்புதங்களை

நினைவுறுத்துகின்றன. (விமலம் - இயல்பில் மலம் இல்லாமை. நிமலம் - உயிர்க்குயிராகி யிருந்தும், அவைகளின் களங்கச் சார்பு தன்னில் கலவாமை.)

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என ஐந்து மண்டலங்கள் உள. அவைகளில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, அண்ணம், ஆக்ஞை, பிரமரந்திரம், சிரசிற்கு மேலிடம், துவாதசாந்தம், அதற்கு மேலிடம், பரவெளி என இருந்த இடங்கள் பன்னிரண்டு. அங்குக் கணபதி, பிரமா, திருமால், உருத்திரன், மகேசர், சதாசிவன் எனும் குறிப்பான அறுவர் குடியுளர்.

பிருதிவி மண்டலத்து ஜடராக்கினி சத்தி, அப்பு மண்டலத்து ராகினி சத்தி, தேயு மண்டலத்து லாகினி சத்தி, வாயு மண்டலத்து காசினி சத்தி, ஆகாய மண்டலத்து சாகினி சத்தி என ஐவர் உளர்.

அதற்குமேல் பரசிவம். இவர்கள் அனைவரும் இப்பாசுரத்தில் உளர். உய்த்து உணர்ந்தால் இவ்வுண்மை புலனாகும்.

தேவரும் மக்களுமான உயிர்க்கூட்டங்கள், அபர நாதமாயையின் வடிவங்கள்; இங்கு உரைத்த நாதம், இறைவனது இயல்பான பரநாதம்.

பூதங்கள் நானல்ல; பொறிகள் நானல்ல; கரணங்கள் முதலியவை யானல்ல என நியதி களைத்து அனைத்தையும் கடந்து அப்பாற்படும் பொழுது, அனுபவம் ஆவது பரநாதம்; அதன் முடிவில் நிற்பது சைதன்யம். ஆதலின், 'நிகழ் நாதமாய்ப் பரையாய்' என்றார். "துவாத சாந்தத் தலம் கடந்த மூலத் தலத்து முளைத்த முழுமுதலே' என்பது, மீனாட்சிப் பிள்ளைத்தமிழ்.

பரை தரிசனத்தின் பின், 'நிமலாநந்தப் பதியாகும் பரசிவ' தரிசனம் பலிக்கும். ஆஹா! என்ன அருமையான செய்தி யிது!

பரம் என்பது பேச்சற்ற மேலிடம்; அதற்குமேல் நாமரூப விகற்பம் அற்ற நலம்; அங்கிருந்தே உயிர்களின் நலம் கருதி விமல சம்பு பட்சம் வெளிப்படும். அதனிலிருந்து பிரமன் திருமால் உருத்திரன் என அணு பட்சங்கள் அரும்பி விரியும். ஒடுங்கும் பொழுது முறையே அவைகள் மேலிடத்தில் ஒடுங்கும்; அப்பொழுது இரு பட்சம் இருந்ததென இயம்புதற்கே இடமில்லை. அந்த அருமையை 'பக்கம் இரண்டாய்; இரண்டும் பகராதாகி' என்றார்.

கதி - அடைக்கல நிலயங்களான பதமுத்திகள்; அளவற்ற அவைகட்கு எல்லாம் அப்பாற்பட்டது நிறை கருணைத் தெய்வம் என்பதை, உணர்வார் உள்ள மெலாம் பாகாய் உருகுமாறு, வைப்பு முறையில் வள்ளலார் வரிசைப்படுத்தி அருளிய இவ் வாசகம், என்றும் மறக்க இயல்வது இல்லையே.

(தனது அத்துவிதத் தன்மையால்) சத்தும் அசித்தும் அமுதமும் ஆனவன் தேவன் எனும் பொருளில், "தேவஸ்ஸதஸச்சாம்ருதஞ்சயத்" என்கிறது அதர்வணம். "தேவ ஏக:" என்கிறது சுவேதாச்வதரம்; இன்ன பிரமாணம் பலவுள. இத் தேவனே, அருட்பெருஞ்

ஜோதி தனிப்பெருங்கருணையாயுளன் எனும் செய்தியை, இறுதி அடி எண்ண வைக்கின்றது.

மற்று தேவன் என்பது, பிரகாசன் எனப் பொருள் தருதலையும் இங்குச் சிந்தித்தல் நலம். 'நிறைந்த பெருங் கருணையே' தயா மூல தர்மம். (18)

**மானாகி மோகினியாய் விந்து மாகி**
**மற்றவையால் கரணாத வான மாகி**
**நானாகி நானல்ல னாகி நானே**
**நானாகும் பதமாகி நான்றான் கண்ட**
**தானாகித் தானல்ல னாகித் தானே**
**தானாகும் பதமாகிச் சகச ஞான**
**வானாகி வான்நடுவில் வயங்கு கின்ற**
**மவுனநிலை யாகியெங்கும் வளரும் தேவே.**

(ப-ரை) மான் ஆகி - (மயக்குவிக்கும்) பிரகிருதி மாயை யாகி; மோகினி ஆய் - அசுத்த மாயை ஆகி; விந்தும் ஆகி - (அதி) தூய மாயையாகி; மற்றவையால் காணாத வானம் ஆகி - அம் மூன்று மாயைகளால் அறிந்து கொள்ள முடியாத ஞான ஆகாயம் ஆகி; நான் ஆகி - நான் என நிற்கும் ஆன்மாவில் ஆகி; நான் அல்லன் ஆகி - ஆன்மா அல்லன் என்றும் ஆகி; நானே நான் ஆகும் பதம் ஆகி - (பாச இருளில் பயின்று பசு ஞானமுள்ள) நானே (மலமகன்றபின், மகா வாக்கியத்தில் உள்ள) அஹம் எனும் பத சொரூபம் ஆகி; நான் தான் கண்ட தான் ஆகி - (அஹம் எனும்) நான் தரிசித்த (ப்ரஹ்மம் எனும்) தன் சொரூபம் தழுவியதாகி, தான் அல்லன் ஆகி - தான் (அச் சொரூபத்தில்) அன்மைப் பொருளாக (அமைவான்) ஆகி; தானே நான் ஆகும் பதம் ஆகி - (அனைத்தும்) தானேதான் ஆகிய (தத்) பத சொரூபமாகி; சகச ஞான வான் ஆகி - இயல்பாக உள்ள ஞான ஆகாயம் ஆகி; வான் நடுவில் வயங்குகின்ற மவுனநிலை ஆகி - (அந்த) வானத்து நடுவில் மிளிர்கின்ற (ஆக்க மெலான் கொண்ட) நிலை பேறான மோன நியதியாகி, எங்கும் வளரும் தேவே - எங்கும் பிரகாசித்து இருக்கும் தெய்வமே, (எ-று)

(வி-ரை) மும்மலரான சகலர் தங்குமிடம் பிரகிருதி மாயை. இருமலரான பிரளயாகலர் வசிக்குமிடம் அசுத்த மாயை. ஒருமலரான விஞ்ஞானகலர் வாழுமிடம் தூய மாயை.

பிரகிருதியின் வேறு பெயர் மான்; அசுத்த மாயையின் மற்றொரு பெயர் மோகினி. தூய மாயையின் இன்னொரு பெயர் விந்து.

மூன்று மாயைகளும் முதற் காரணம்; சிற்சத்தியும், கால தத்துவமும் துணைக் காரணம். இம் மூன்றையும் இணைத்து, நிமித்த காரண நிமலன், அகில உலகங்களையும் ஆக்குகிறான். தொடர்பு கொண்டு உலகங்களைத் தோற்று வித்தலின், 'மானாகி மோகினியாய் விந்துவாகி' என்றார்.

மாபெரும் தனுகரண புவன போகமாகப் பெருந்தோற்றம் கொண்ட மூன்று மாயைகளால், இன்றுவரை காணாத வானம் ஞான வானம்; அந்த வசிவம் அத்தன் சொரூபம் ஆதலின் 'மற்றவையால் காணாத வானமாகி' என்றார்.

தேகமே நான் எனும் மயக்கம் தீர்ந்தால், உயிர் உடலுள் உயிர்க்கிறது; உயிருள் தெய்வம் உறைகிறது எனும் நுட்பம் உணர வரும். எனவே, நான் நான் எனும் சொல்லினும் பொருளிலும் அவன் உளன் என்பார், 'நானாகி' என்றார்.

அங்ஙனமேல், ஆரம்பத்திலேயே அவனே நான் எனலாமா? இம் முளைப்பின் சாயை எழும் போதே, 'நான் அல்லன் ஆகி' உளன் என்றார்.

நான் நான் எனும் சொல்லின் பொருளாக, சாதனையில், பிறிது மொழிதல், பிறிது நினைதல், பிறிது செயலில் இருத்தல் இன்றி, அஹம் அஹம் என இருப்பில், அந்த அஹத்தில் அவன் ஆகிறான் என்பார், 'நானே நான் ஆகும் பதமாகி' என்றார்.

வாழுமாறு அச் சாதனையை வளர்த்தால், அடுத்துப் பிரம்ம தரிசனம் ஆகும். அதை, 'நான் தான் கண்ட தானாகி' என்பது சாதகர்கட்குக் காட்டிய சமிக்ஞை.

சாதனைச் சார்பில் உளபொழுது தான்; பகிர்முகம் ஆம் பொழுது தூய அத் தரிசனம் தோன்றுவது இல்லை. அந்நிலையில் சாதகர்கள் அலறி அழுத அழுகைகள்தான், திருவாசகம், திருவருட்பா, திருவாய்மொழி எனும் பல பெயர் கொண்டு, ஓதுனரை உள்முகமாக்கி உருக்கி விடுகின்றன. அதை, 'தான் அல்லன் ஆகி' என்பதில் பெறவைத்தார்.

மகாவாக்கியம் குறிப்பாகக் கூறுவது உண்மையாம்படி, தத் பதம் ஆகிறது தற்பரம். அதை, 'தானே தானாகும் பதமாகி' என்றார்.

இயற்கையான ஞான வானம், 'சகஜவான்' எனப் பெறும். (சக - சமம்; ஜம் - உதயம்) அவ் வானமே இறை சொரூபம் என்பது குறிப்பு.

அவ் வான் நடுவில் மாபெரும் மோனமாகி மலர்ந்து, நீக்கமின்றி எங்கும் நிறைந்த பரத்தை, 'மௌன நிலையாகி எங்கும் வளரும் தேவே' எனும் பகுதியை, பத்துத் தரம் எடுத்த குரலால் பாடிப் பாருங்கள்! உணர்ச்சி பூர்வமான இந் நிலையில், ஏன் ஏன் என்று எதிர்குரல் எழுவதை எண்ணும் போதே இன்ப லாகிரி எழுகிறதே! (19)

**மந்திரமாய்ப் பதமாகி வன்ன மாகி**
**வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவன மாகிச்**
**சந்திரனாய் இந்திரனாய் இரவி யாகித்**
**தானவராய் வானவராய்த் தயங்கா நின்ற**
**தந்திரமாய் இவையொன்றும் அல்ல வாகித்**
**தானாகித் தனதாகித் தானான் காட்டா**
**அந்தரமாய் அப்பாலாய் அதற்கப் பாலாய்**
**அப்பாலுக் கப்பாலாய் அமர்ந்த தேவே.**

(ப-ரை) மந்திரம் ஆய் - (வாய்மை) மந்திர வழியாகி; பதம் ஆகி - (பயனை விளைவிக்கும்) பதங்களாகி; வன்னம் ஆகி - (அனைத்துமான) எழுத்துக்கள் ஆகி; வளர் கலை ஆய் - வளர்கின்ற கலைகளில் வழி ஆகி; தத்துவம் ஆய் - (அதி நுட்ப) தத்துவங்கள் ஆகி; புவனம் ஆகி - (வாழ்விக்கும்) புவன வழிகளாகி; சந்திரனாய் --, இந்திரனாய்--, இரவி ஆகி - சூரியனாகி; தானவர் ஆய் - அசுரர்கள் ஆகி; வானவர் ஆய் - தேவர்களாகி; தயங்கா நின்ற தந்திரம் ஆய் - அதிகமாக விளங்குகின்ற ஆகமங்கள் ஆகி; இவை ஒன்றும் அல்ல ஆகி - இவைகள் ஒன்றும் தன்னில் தொடர்பிலது போல் ஆகி; தான் ஆகி - தான் எனும் தத்துவம் ஆகி; தனது ஆகி - (அனைத்தும்) தன்னுடைமை என்று ஆகி, தான் நான் காட்டா அந்தரம் ஆய் - தான் நான் எனும் இரு நிலைகளையும் காண்பிக்காத அதிரகஸ்ய அனுபவமாகி; அப்பால் ஆய் - (அந்நிலைக்கும்) அப்பாற்பட்டது ஆகி; அதற்கு அப்பால் ஆய் - அந்த நிலைக்கும் மேற்பட்டது ஆகி; அப்பாலுக்கு அப்பாலாய் அமர்ந்த தேவே - மேற்பட்ட அந்நிலைக்கும் மேற்பட்டதாகி அமர்ந்த தெய்வமே, (எ-று)

(வி-ரை) ஆன்மாக்களை உய்விக்கும் வழிகள் ஆறு. அவைகள் முறையே மந்திராத்துவா, பதாத்துவா, வன்னாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா எனப் பெறும். (அத்துவா என்பது வடசொல்; வழி என்பது அதன் பொருள்)

எழுகோடி மந்திரங்கள் இருக்கின்றன; சித்தத்தைச் சிவமாக்கும் மந்திரங்கள் சில. மந்திர அரசு பஞ்சாக்கரம் எனப் பெறும். கருதுபவரை அவைகள் காக்கும் தன்மையன. ஆதலின், மந்திரங்கள் என்னும் பெயரை எய்தின. அவைகளை உருவேற்றுதல், உள்ளத்து எண்ணுதல் முதலிய சாதனைகள், இன்றும் பலர்பால் உள. "சத்தியும் மந்திர சாதக போதகமும், பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே" என்பது திருமந்திரம்.

மந்திரம் பதத்தில் ஒடுங்கும்; பதம் எழுத்தில் அடங்கும். எழுத்து புவனத்தில் ஒடுங்கும். புவனம் தத்துவங்களில் ஒடுங்கும்; தத்துவங்கள் ஐந்து கலைகளில் அடங்கும்.

உதாரணம் பின் வருமாறு --

சத்தியோசாதம், இதயம் எனும் மந்திரங்கள் இரண்டு. ஓம் நமோ நம எனும் பதம் முதல், மகாதேவ எனும் பதம் வரை இருபத்தெட்டு பதங்கள்; இறுதியதான க்ஷ எனும் எழுத்து ஒன்று, காலாக்கினி ருத்திரபுவனம் முதல், வீரபத்திரர் பத்திரகாளி

புவனம்வரை நூற்றெட்டுப் புவனங்கள்; பிருதிவி தத்துவம் ஒன்று. இவைகள் முறையே ஒன்றின் ஒன்றாக நிவிர்த்தி கலையில் ஒடுங்கும். இக் கலைக்கு அதி தெய்வம் பிரமன்.

வாமதேவம், சிரசு ஆகிய மந்திரங்கள் இரண்டு; மகேசுவரம் எனும் பதம் முதலாக, அரூபின் எனும்பதம் இறுதியதாக, இருபத்தொரு பதங்கள்.

ளகாரம் முதல், டகாரம் இறுதியாக இருபத்து நான்கு எழுத்துக்கள்; அமரேசாதி புவனம் முதல், சீகண்ட புவனம் இறுதியாக ஐம்பத்தாறு புவனங்கள்; அப்பு தத்துவம் முதல், பிரகிருதி இறுதியாக 83 தத்துவங்கள்; பிரதிட்டா கலையில் இவைகள் ஒன்றின் ஒன்றாக ஒடுங்கும். இக் கலைக்கு அதி தெய்வம் திருமால்.

அகோரம், சீகை எனும் மந்திரங்கள் இரண்டு; வியாபின் எனும் பதம் முதலாக, தியானகாராயா எனும் பதம் இறுதியாக இருபது பதங்கள்; ஏகாரம் முதலாக, வகாரம் இறுதியதாக ஏழு எழுத்துக்கள்; வாமாதி புவனம் முதல், அங்குட்ட ருத்திராந்த புவனம் இறுதியாக இருபத்தேழு; புருட தத்துவம் முதல், மாயை இறுதியாக ஏழு தத்துவங்கள் முதலியன, ஒன்றின் ஒன்றாக வித்தியா கலையுள் ஒடுங்கும்; இக் கலையின் அதி தெய்வம் உருத்திரன்.

தற்புருடம், கவசம் எனும் மந்திரங்கள் இரண்டு; நித்திய யோகினே எனும் பதமுதல், வியோம வியாபினே எனும் பதம் ஈறாகப் பதினொரு பதங்கள்.

க்க, ஃக, க எனும் மூன்று எழுத்துக்கள்; வாமை முதல் சாதாக்யம் எனும் பதினெட்டுப் புவனங்கள்; சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம் எனும் மூன்று தத்துவங்கள் எனுமிவைகள், ஒன்றின் ஒன்றாக சாந்தி கலையுள் ஒடுங்கும். இக் கலைக்கு அதி தெய்வம் மகேசுவரன்.

ஈசானம், அத்திரம், மூலம் எனும் மூன்று மந்திரங்கள், ஓம் எனும் பதம் ஒன்று. அகரம் முதல் அஃவரை பதினொறு எழுத்துக்கள். நிவிர்த்தி முதல், சாந்தியாதீதம் இறுதியாக உள்ள ஐந்து புவனங்கள்; இத்திகை முதல் அநாசிருதை இறுதியான பத்துப் புவனங்கள் ஆகப் பதினைந்து புவனங்கள்; சத்தி தத்துவம், சிவ தத்துவங்கள் என இரண்டு தத்துவங்கள், ஒன்றின் ஒன்றாக சாந்தீயாதீத கலையுள் ஒடுங்கும்; இக் கலைக்கு அதி தெய்வம் சதாசிவர். ஒவ்வொரு மந்திரத்திற்கும் பீஜம் உண்டு. அதையும் சேர்க்க மந்திரங்கள் 11 என்று ஆகும்.

இங்ஙனம், பதினொரு மந்திரங்கள், எண்பத்தொரு பதங்கள், ஐம்பத்தொரு எழுத்துகள், இருநூற்றிருபத்து நான்கு புவனங்கள், முப்பத்தாறு தத்துவங்கள், ஐந்து கலைகள், மேலுரைத்தபடி ஒன்றின் ஒன்று ஒடுங்கும்; ஒடுங்கிய இடத்தில் இருந்து உதிக்கும்.

இந்த ஐந்தினும் இருந்து, வாழுமாறு ஆன்மாக்கட்குத் திருவருள் வழி காட்டுதலின், ஆறு அத்துவாக்களிலும் ஆகி என்று அறிவித்தார்.

இறைவனது எண்வகை வடிவில், சந்திரனாம் திருமேனி ஒன்று. அத் திருமேனியின் சாயை, ஒரு சமயம், வித்தக அத்திரி முனிவரது விழிகளின் வழியே வெளிப்பட்டது. மற்றொரு சமயம், திருமாலின் இதயத்தில் இருந்து தோன்றியது. ஒரு காலத்தில், மின்னும் விண்மீன்களான இருபானெழுவரை மணந்தது. உரோகணி எனும் துணைவி வழியே புதன் எனும் புதல்வனை அருளி, அவனை ஒன்பது கோள்களில் ஒருவன் ஆக்கியது. ஆன்மீக வாழ்வில், இடகலையாகி என்றும் இருக்கிறது. தன் வம்சம் எனப் பாரத தேசத்தில் ஒரு பரம்பரையை உருவாக்கியது. சிவாமிசமாக இங்ஙனம் எல்லாம் சிறத்தலின், 'சந்திரனாய்' என்றார்.

சந்திரன்போல், அமலனது அட்ட மூர்த்தங்களுள் ஒன்று சூரியன். அத் திருமேனி, பகலில் ஒளியை உலகிற்குப் பாலிக்கிறது. தன் அமிசமாக விண்ணில் பன்னிரு பரிதிகளையும், மண்ணில் ஒரு வம்சத்தையும் படைத்தது. கண்ணொளியிற் கறந்து, ஆன்மாக்கட்கு எதையும் காட்டுகின்றது. அண்டத்தில் செங்கதிர், பிண்டத்தில் பரிதி, மனத்தில் கதிரோன், ஞானத்தில் ஆதித்தன் என்றாகி, இயல்பான தன்னில் சிவாதித்தன் என்று சிறக்கிறது. ஆத்மீக சாதனையில், பிங்கலைப் பெயர் கொண்டு பிரகாசிக்கிறது. இங்ஙனவும் சிவாட்சி ஆதலின், 'இரவி ஆகி' என்றார்.

இம்மையில் புண்ணியம் இயற்றினோர், போக அனுபவம் பொன்னுலகு எய்துவர். அங்ஙனம் சேரும் அவர்கட்கு, அதிபன் ஒருவன். பஞ்ச தருக்கள், காமதேனு, சிந்தாமணி, சங்கநிதி, பதுமநிதி முதலிய தழைத்த செல்வத் தலைவன் ஆதலின், இந்திரன் எனும் பெயரை அவன் எய்தினன். அமுதம் பருகி, அணங்கனார் போகம் கண்டு, இமையா விழிகளுடன் மின்னுகின்ற ஒளியுறு மேனியனாகி, அரக்க அசுர அகிதர்களை அழித்து, சீறிய மலைகளின் சிறகுகளை அறித்து, ககன உலகரைக் காத்தல் செய்து, மாநிலம் உய்ய மழை பெய்வித்து, மருதநில மக்கள் வழிபாடு ஏற்ற அந்த இந்திரனில் உளது சிவ ஆட்சி. அவன் துணைவியில் இறைவியின் அருள் உளது. ஊன்றி அந்த அருமையை உணர்ந்து, 'இந்திரன் ஆகி' என்றார்.

இமையவர்களில் இணைந்து இருந்து, பேறு விளையுமாறு அவர்கட்குத் தம் பெயரை யருளி, வளருமாறு அவர்கட்கு வாழ்வை யளித்தலின், 'வானவராய்' என்றார்.

இருந்த பதவியால் இறுமாந்து, தகாதன செய்யும் இமையவர்களைத் தண்டித்து ஆன, தற்பரன் ஆட்சி தானவரினும் உளது ஆகலின், 'தானவர் ஆகி' என்றார். (தாநவர் - காசிபர்க்குத் தநு என்பாளிடம் பிறந்தவர்கள் எனும் காரணப் பெயர்.)

தந்து என்பது வட சொல்; நூல் என்பது அப் பெயர்ப் பொருள். மனக் கோணலை மாற்றி, கனிவாக நேர்வழியை ஆகமங்கள் காட்டும். சரியை கிரியைகளில் சார்வித்து, மனம் கரைத்து மலம் அகற்றி, அமுத கலையை யாக்கையில் ஆக்கி, சிவஞானம் சிந்திக்கச் செய்வது, தந்திர கலை செய்யும் தந்திரம். அந்த ஆகமங்களை அருளியவர் சதாசிவர். அந்த அருள் வாக்குகள் என்றும் பிரகாசித்து இருத்தலின், 'தயங்கா நின்ற தந்திரமாய்' என்றார். (தயக்கம் - மிக்க விளக்கம்.)

தோய்ந்தும் மாநிலம் தோயாப் பரஞ்சுடர் ஆதலின், அனைத்தும் ஆகி, அவைகளோடு ஒட்டு பற்று ஒன்றும் அல்லாதவனும் ஆக இருத்தலின், 'ஒன்றும் அல்லவாகி' என அன்மைப் பொருள் தோன்ற அறிவித்தார்.

அனுபூதி நிலையினர்க்கு, நான் நீ அது எனும் தன்மை முன்னிலை படர்க்கை தோன்றா. தான் எனும் பரமே ததும்பும் ஆகலின், 'தான் ஆகி' என்றார்.

உருவான உலகத்தில் உள்ளன பல எனில், அவை யாவும் அமலனது உடைமை. அதைத் 'தனதாகி' என்பதில் அறிவித்தார். நான் என்பது அகங்காரம்; எனது என்பது மமகாரம். நானும் இல்லை; எனதென உரைக்க எதுவும் இல்லை; எதையும் தனதாகக் கொண்ட தானுளன்.

எள் போல்வது சீவன்; நெய் போல்வது சிவம். சொல்லளவில் இவ்வளவுதான் சொல்ல இயலும். சீவனான நான் சிவத்தைத் தரிசிக்கிறேன் எனும் சொல் உள்ளவரைக்கும் இருமை உளது; ஒருமை உதித்தில என்று ஆகும். நானும் இல்லை, தானும் இல்லை எனுமாறு, காணும் எதையும் தன்னுள் கரக்க வைத்துத் தானும் கரந்துளன் ஆன அற்புதத்தை, 'தான் நான் காட்டா அந்தரமாய்' என்றார். (அந்தரம் - அதி ரகஸ்யம்; அம் தரம் - அழகிய தரம் எனினுமாம்.

"தானாகி நானாகித் தனியே நின்றவர்க்குத்
தண்டனிட்டேன் என்று சொல்லடி"

என்பது திருவருட்பாவின் கீர்த்தனைப் பகுதி.

"என்னையும் தன்னையும் வேறா - உள்ளத்(து)
எண்ணாத வண்ணம் இரண்டற நிற்கச்
சொன்னது மோஒரு சொல்லே - அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்வேன்"

என்ற தாயுமானார் இங்கு எண்ணற்கு உரியவர்.

'அப்பாலாய்' என்பது பரவெளி; 'அதற்கு அப்பாலாய்' என்பது பராபரவெளி. 'அப்பாலுக்கு அப்பாலாய்' என்பது சுத்தப் பெருவெளியை. "அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங் காண் அம்மானாய்" என்பது திருவாசகம். (20)

**மலைமேலும் கடல்மேலும் மலரின் மேலும்**
**வாழ்கின்ற மூவுருவின் வயங்கும் தேவே**
**நிலைமேலும் நெறிமேலும் நிறுத்து கின்ற**
**நெடுத்தவத்தோர் நிறைமேலும் நிகழ்த்தும் வேதக்**
**கலைமேலும் எம்போல்வார் உளத்தின் மேலும்**
**கண்மேலும் தோள்மேலும் கருத்தின் மேலும்**
**தலைமேலும் உயிர்மேலும் உணர்வின் மேலும்**
**தகுமன்பின் மேலும்வளர் தான்மெய்த் தேவே.**

(ப-ரை) மலை மேலும் - (மாபெரும் கயிலை) மலை மேலும்; கடல் மேலும் - (மேன்மைத் திருப்பாற்) கடல் மேலும்; மலரின் மேலும் - (மணம் கமழ்) தாமரை மலர் மேலும்; வாழ்கின்ற மூவுருவின் வயங்கும் தேவே - (வளமும் இன்பமும் வாய்மையுமாக) வாழ்கின்ற மூன்று திருமேனிகள் தாங்கி, (பால்நிறக் கருநிறச் செந்நிறமாகப்) பளபளக்கும் பரம் பதியே; நிலைமேலும் - (ஆதார) நிலைகளின் மேலும்; நெறி மேலும் நிறுத்துகின்ற - வழிமுறைகளிலும் (தம்மை) நிலைபெறுத்திக் கொள்கின்ற; நெடும் தவத்தோர் நிறை மேலும் - பெருந்தவத்தை யுடைய பெரியோர்களின் நிறைவுடைமையின் மேலும்; நிகழ்த்தும் வேதக் கலைமேலும் - வாய் மலரும் மறைகளின் (மெய்ம்மைக்) கலைமேலும்; எம் போல்வார் உளத்தின் மேலும் - எம்மைப் போன்றவர்களது உள்குகின்ற உள்ளத்தின் மேலும்; கண்மேலும்--, தோள்மேலும்--, கருத்தின் மேலும்--, தலை மேலும்--, உயிர் மேலும்--, உயிர்ப்பு எனும் பிராணன் மேலும்; உணர்வின் மேலும்--, ஆன்ம உணர்வின் மேலும்; தகும் அன்பின் மேலும்--, வளர் தாள் மெய்த் தேவே - எழுந்தருள்கின்ற திருவடிகளை யுடைய மெய்ப்பொருளான பேரொளி மயப் பெருமானே, (எ-று)

(வி-ரை) கோவே - எவர்க்கும் எவைக்கும் இறை யோனே! தேவே - தேவர்களுள் முதன்மைப் பேரொளி முழுமையனே எனும் விளியிரண்டும், பரத்வ நிர்ணயம் பகர்கின்றன.

ஆடையில் ஏறிய அழுக்கை யகற்ற, உழமண் சேர்த்து ஒலிப்பது வழக்கம். அதுபோல் உயிருள் உறையும் அழுக்கை ஒழிக்க, அழுக்கு ஆக்கையை மாயை அளித்தது. உடல் கிடைத்த அருமையை உணராமல், ஆகாமிய அழுக்கை, மென்மேலும் ஆன்மா சேகரித்து அவதி யடைகின்றது. காலையில் விழிப்பு. கடும்பகல் உழைப்பு. அந்தியில் அயர்வு. இது கண்டு இரவை அளித்தது இயற்கை. ஓய்வு கொள்? அமைதியடை என்பது அதன் அறிவிப்பு. நனவு நடையாவும், கனவில் வந்து கடை விரிக்கின்றன. கனவு இல்லாத நேரத்தில், உயிர் சூனியத்தில் ஒடுங்கி விடுகின்றது. விழித்த பின், பலவினை விளையப் பதைப்பும் துடிப்பும் பல்குகின்றது.

அரணம் தருவது சரணம். அதை மறுக்கும் ஆன்மாவை, வலிந்து மரண தேவதை வரவேற்கின்றது. இருவினைப் பயனைச் சுவர்க்க நரகில் சுவைத்த பின், அந்தரத்தில் தங்கி, கடும் வெயில், கடும் பனி, கடும் மழை, கடுங்காற்றுகளால் ஆன்மா கலங்குகின்றது. இதுகண்ட இறையருள் மழையாகி, மழைத் துளியாகி, ஆன்ம

அணுவில் இறங்கி, அதை நிலத்தில் இறக்கி, நீரொடு சேர்த்து, வித்தில் ஊற வைத்து, விளைவில் இணைத்து விடுகிறது.

வினையளவாக யானை வயிற்றுள் புகுந்து யானையாய், கொசு வயிற்றுள் புகுந்து கொசுவாகி, மானுட வயிற்றுள் புகுந்து மானுடனாகிப் பிறக்கிறது. பழையபடியே ஆசைவாய்ப் பட்டு அல்லலும் தொல்லையும் அடைகிறது.

பாடுபல பட்டு வினைகளைப் பெருக்கி, அழுது கதறுகிறது ஆன்ம இதயம். எல்லா உயிர்களின் கதியும் இஃதேதான்.

இதுகண்டு பொறாத இயற்கையருள், சர்வ சம்மாரம் செய்கிறது. அதன்பின் பலகாலம், ஆன்மாக்கள் அந்தரத்தில் தங்கி அலைமோதுகின்றன. அதுகண்டு பொறாத சுத்த சைதன்யம், அருளொடு சிறிது அசைகிறது. அந்த அசைவில் இருந்து பளபளத்து எழுகிறது பரை. பரையில் இருந்து மூன்று குணங்கள், ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி முறுவலிக்கின்றன.

சத்வகுணம் வெண்ணிறம்; அதனில் இருந்து இரட்டையான திருமேனி எழுந்தது. அவைகளுள் ஒரு திருமேனி நீறுபூத்த நெருப்பு எனுமாறு, வெண்ணிறச் சிவமாகி விளங்கியது. மற்றொரு திருமேனி, வெண்மேனிக் கலைமகளாக விளங்கியது. இரட்டைத் தோற்றம், எப்பொழுதும் ஒரே நிறம், ஒரே குணமாக இருப்பது எங்குமுள இயற்கை. தட்சிணாமூர்த்தம் வெண்ணிறம்; ஒரு கரத்தில் புத்தகம், ஒரு கரத்தில் ஜபமாலை; அதுபோல் கலைமகளும் வெண்ணிறம்; ஒரு கரத்தில் புத்தகம், மற்று ஒரு கரத்தில் ஜபமாலை.

தாமச குணம் கருநிறம்; அதனி லிருந்து இரட்டையான திருமேனி எழுந்தது. ஒரு திருமேனி திருமால்; மற்றொரு திருமேனி உமாதேவி. சங்கு சக்கரம் திருமாலிற்கு உரியன. சிவாலயங்களில் வடக்கு நோக்கிய துர்க்கை திருக்கரங்களிலும், சங்கு சக்கரங்கள் இருப்பதை அறிவம்.

இராஜச குணம் செந்நிறம்; அதனில் இருந்து இரட்டையான திருமேனி எழுந்தது. ஒரு திருமேனி, உருக்கி வார்த்த பொன் போன்ற பிரமதேவர்; ஒரு திருமேனி, மாபெரும் தங்க நிற மகாலக்ஷ்மி.

இம் முத்திறத் திருமேனிகளும், சிறக்கத் திருமணம் செயல் வேண்டும். லௌகிக மணமும், அந்தரத்தில் அவதியுறும் ஆன்மாக்கட்கு ஆக்கை யளிக்கும் அருள் நெறியே, இதனால்தான் இல்லறம் என்பது நல்லறம் என்றனர். "மிதுன இச்சையும் புத்திரோற்பத்தியால் விரும்பு என்ற விதி கேளாய்" என்று கைவல்யம் கூறும் செய்தி, இங்குக் கருதத் தகும். (தேக இச்சைக்குத் திருமணம் எனும் விபரீத உணர்வு, விதி செய்யும் சதிகளுள் ஒன்று)

சிவமும் சரஸ்வதியும், திருமாலும் உமையும், பிரமனும் லட்சுமியும் இரட்டையராகத் தோன்றிய சகோதர சகோதரியர். தங்கையைத் தந்து, அடுத்தவர் தங்கையை மணப்பது தர்மவிரோதம்.

அதனால், வெண்ணிறச் சிவனார், திருமாலின் சகோதரியான கருநிற உமையாளைக் கடிமணம் புரிந்து கொண்டார்.

கருநிறத் திருமால், பிரமனின் சகோதரியான செந்நிறத் திருவைத் திருமணம் செய்தார்.

பொன்னிறப் பிரமன், சிவனார் சகோதரியான வெண்ணிறக் கலைமகளை மணந்தார்.

இதன் மூலம் இராஜசப் பிரமன் நாவில் இருந்து, கலை மகள் வேதம் ஓதல் ஆயினள்; அந்த நாதத்தில் லயித்து, ஆன்மாக்களாகிய, அணுக்கட்கு, கன்ம அளவான காயம் தருகின்றன் கமலத்தோன்.

நீல நிறத் திருமால் சித்திக்கும் இதயத்தில், சிறக்க இருக்கின்றாள் திருமகள். அக்கிரமத்தை அழித்து, கிரமத்தை உளதாக்கி, ஆன்மாக்களைக் காத்தல் செய்கிறார் கடல்நிற வண்ணர். சீகண்டரின் வெண்ணிற மேனியில், உமை விளங்குகின்றாள். இதன் மூலம் அயர்வை அகற்றி, ஆன்மாக்கட்கு அருள்பாலிக்கின்றார் சிவபிரான்.

எனவே செந்தாமரைமேல் இராஜா பிரமதேவர், வெண் தாமரை மேலுள சத்துவகுண சரஸ்வதியுடன் இருந்து, பயனாம்படிச் செய்வது படைப்பு. தாமசத் திருமால், செந்தாமரை மேலுள இராஜசத் திருவுடனிருந்து, கனிவொடு செய்வது, காப்பு. சத்வகுணச் சிவனார் தாமச உமையுடன், அயர்வை யகற்றும் அரும்பணியாளர் ஆகியுளர்.

படைப்பவர் மலர்மேலுளர்; காப்பவர் கடல்மேலுளர். எவரும் காணுமாறு மலைமேல் இருந்து அயர்வு மாற்றுகிறார் அமலர். என்ன அதிசயமான செய்தியிது? குறித்த இடத்தில் தனக்கென இருத்தல், வசித்தல். வேறு வேறு இடங்களில் பிறர்க்கென இருத்தல், வாழ்தல். இதை 'வாழ்கின்ற மூவுரு' என்றார் வள்ளலார். 'வயங்கும்' என்பது, மூன்று நிறம் கொண்டு விளங்கலை நினைவுருத்திய நிலை.

அளவிறந்த மலைகள் உள; எட்டுத் திக்கு மலைகள் வேறு; நில நடுவுள் இருக்கும் மேரு. ஏழு கடல்கள் இருக்கின்றன. எண்ணிறந்த மலர்கள் இருப்பதை யறிவம். எனினும் கயிலைமலை, பாற்கடல், சுவாதிட்டானத் தாமரை எனும் இவைகட்கு ஒப்பானதும் மிக்கானதும் இல்லை. ஆதலின் அவைகளை, அடைகொடாது அறிவித்த அருமையை அருமை. "என்னைய முனிவரரும் இமையவரும் இடையூறொன் றுடைய ராயின், பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும், பாற்கடலும், பதுமபீடத் தன்னகரும் அல்லாது புகலுண்டோ?" எனக் கம்பர் கோசிகர் வாய்வழி, இம்மூன்று இடங்களையும் குறித்துக்கூறும் அருமை இங்குக் குறிக்கொளத் தகும்.

சாதனை பல. அவைகள் அனைத்தையும் அறிந்து, பலமுகமாகிப் பழுது படாமல், ஒன்றில் காலூன்றி உறவு கொளல் உத்தமம். 'நிலைமேலும்' என அதனை நினைப்பித்தார்.

நிலையில் நிற்க, உரிய அனுட்டான வழிகள் உள; அவ்வழியே முயன்று பெரிதும் முன்னேற வேண்டும்; அந்த அருமையை, 'நெறி மேலும்' என்று நினைவுறுத்தினார்.

நிலைமேலும் நெறிமேலும் நெடுங்காலம் முயல்பவர். இடைவழுக்கி இறங்கி விடாதபடி, வைராக்கியத்தை உறுதியாக வளர்ப்பர். இவர்களே அரிய பெரிய தவத்தினர்.

குறைவொன்றும் இல்லாத இவர்களது நிறைவுடைமையின் மேல் திருவடிகள் நிழலிடும் ஆதலின், 'நெடுந்தவத்தோர் நிறை மேலும்' என்றார்.

ஓதற்கு எளிய மறைகள், உணர்தற்கு அரியன; உணர்தற்கு எளிய கலைகள், ஓதற்கு அரியன.

"உன்னரும் அருமறை ஓதும் மண்டபம்
பன்னரும் கலைதெரி பட்டி மண்டபம்"

என்று கலைகட்கும் மறைகட்கும் உள்ள வேற்றுமையை, கம்பர் கூறும் நுட்பம் கருதற்கு உரியது. மற்று, அரிய கலாந்தம் மறைக்குள் அடங்கும்; ஆதலின், 'வேதக் கலை மேலும்' என்றார் எனினுமாம்.

உள்ளம்--தகராகாசம் எனும் சிதம்பரம். எவர்க்கும் அங்ஙன் உளது எனினும், எண்ணுவதும் ஏத்துவதும் தவிரப் பிறிது அறியாத எம் போன்றார்க்கு அத் திருவடிகள், வெளிப்பட்டு இதய சிதம்பரத்தில் விளங்குகிறது என்பார், 'எம் போல்வார் உளத்தின் மேலும்' என்றார். மற்று, "உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந் தறிதி யென்று, வெள்கினேன் வெள்கி நானும் விலவறச் சிரித்திட்டேனே" என்று தமிழ் மறை கூறுவதுபோல், எம் போல்வார் உள்குவதை உடனிருந்து விரைந்துணர, உளத்தின் மேலும் திருவடிகள் உறவு பூண்டுள எனினுமாம்.

"காணும் கண்ணிற் கலந்த கண்ணே! உன்னைச்
சேணும் பாரும் திரிபவர் காண்பரோ?"

என்று தாயுமானவரும்,

"கண்ணே! கண்ணிற் கருமணியே! மணியாடு பாவாய்! காவாய்" என்று தமிழ் மறையும், "எண்ணுளே இருந்த போது யாவரென்று தேர்கிலேன், கண்ணுளே இருந்த போதும் என்கொல் காண்கி லாதவே" என்று சானகி வாய் வழி கம்பரும் குறிக்கும் சாதனையின்படி, கண்ணுள் அருட்ஜோதி கவினுகின்றது. அதைக் 'கண்மேலும்' என்று, குறிப்பு முகம் தோன்றக் கூறினார்.

கண்ணிற் கலந்த ஒளி, தீட்சை வழியே தோளில் இறங்கி, கருத்தில் புகுந்து, சகஸ்ரார கமலச் சால்புறச் சார்ந்து, உரிமைப் பிராணனிலும் உயிரின் உணர்வினும் உறவு கொண்ட பொழுது, ஆஹா! அருமை அருமை என்று அன்புறு பொழுது, அந்த

அன்பின் மேலும் நடமாடும் திருவடிப் பெருமைகளை இயலும் அளவு வியந்து புகழ்ந்து விநயம் காட்டிய பா இது! (21)

**பொற்குன்றே அகம்புறமும் பொலிந்து நின்ற**
**பூரணமே ஆரணத்துட் பொருளே என்றும்**
**கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பே தான**
**கற்பகமே கற்பகத்தீங் கனியே வாய்மைச்**
**சொற்குன்றா நாவகத்துள் மாறா இன்பம்**
**தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதி யேவிண்**
**நிற்கின்ற சுடரேஅச் சுடருள் ஓங்கும்**
**நீளொளியே அவ்வொளிக்குள் நிறைந்த தேவே.**

(ப-ரை) பொன்குன்றே - (மகமேரு எனும்) பொன்மலையே; அகம் புறமும் பொலிந்து நின்ற பூரணமே - (எதனுடைய) உள்ளிடத்தும் வெளியிடத்தும் நிமிர்ந்து இருக்கின்ற நிறைவே; ஆரணத்து உள் பொருளே - (உறுப்பான) அருள் நூற்களின் உள்ளுறை பொருளாக உறைபவனே; என்றும் கற்கின்றோர்க்கு இனிய சுவைக் கரும்பே - எந்நாளும் கற்பதே தொழிலான கருத்தினர்க்கு, இனித்த சுவைக் கரும்பாக இருப்பவனே; தான கற்பகமே எந்த இடத்தினும் தருவான கற்பகமாகத் தழைப்பவனே; கற்பகத்து இன் கனியே - (அக்) கற்பகத்தின் கனிந்த நறுங்கனியே; வாய்மை சொல் குன்றா நா அகத்துள் மாறா இன்பம் தோற்றுகின்ற திருவருள் சீர் சோதியே - (நல்) வாக்குத் தவறாத நாவுள், மாறாத இன்பமாக மலர்கின்ற திருவருளாம் பெருஞ்சிறப்பினை யுடைய பேரொளிப் பிழம்பே; விண் நிற்கின்ற சுடரே--(நிமல) விண்ணில் நிலைபேறான ஒளித் தொகுதியே; அச் சுடருள் ஓங்கும் நீள் ஒளியே - அந்தக் கிரணக் கற்றையுள் உயர்ந்து நீளும் ஒளிமயமே; அவ் ஒளிக்குள் நிறைந்த தேவே - அந்த ஒளிக்குள் தெய்வ நிறைவாகித் திகழ்பவனே, (எ-று)

(வி-ரை) அண்டத்தில் மேருமலை; அது, பிண்டத்தில் நடுநாடி எனும் பெயர் பெறும். வளர்ந்த அம்மலையை, சந்திர சூரியர் வலம் வருவர். நடு நாடியை, இடைகலை பிங்கலைகள் வலம்வரல் அறிவம். அண்டத்திற்கு ஆதாரம் மேரு; பிண்டத்திற்கு ஆதாரம் நடுநாடி. மேரு பொன்னிறம்; நடுநாடியும் தங்க நிறம். வானவர் முனிவர் மேருவில் வாழ்கின்றனர்; நடு நாடியில் தேவ நடமாட்டம்; அது முனிவர்களது தவநாட்டம். உயர்ந்த இந்த மகிமைகளை உணர்ந்து, 'பொற்குன்றே' என்று பெருமானைப் போற்றிப் புகழ்வது புனித நடை.

"செஞ்சுட ரோன்முகல் ஆகிய தேவர்கள்
மஞ்சுடை மேரு வலம்வரு காரணம்,
எஞ்சுடர் ஈசன் இறைவன் இணையடி
தஞ்சுடர் ஆக வணங்கும் தவமே"

எனப் பத்தாந் திருமுறை இந் நுட்பத்தைப் பகர்கிறது.

"அகண்டாகார சிவ போகமெனும்
பேரின்ப வெள்ளம் பொங்கிற் ததும்பிப்
பூரணமாய் ஏகவுருவாய்க் கிடக்குது"

எனும் தாயுமானார் அனுபவம், 'அகம் புறமும் பொலிந்து நின்ற பூரணமே' என்பதில் வெளியாகின்றது.

"வேதம் பதிபசு பாசத்தைச் சொல்லும்; அதுபோல் ஆகமும் சொல்லும். வேதம் என்பது நான்கு மகாவாக்கியாங்கள் தான்; மற்றவை, அங்க உபாங்க சாங்கப் பிரத்தியாங்கங்கள்." இது திருவருட்பா வசனப் பகுதியில் 'வேதம் முதலிய நூற்கள்' எனும் தலைப்பில் உள்ள செய்தி. இதனால், வேதப் பெட்டகத்துள் இருப்பவை மெய்ப்பொருளே அன்றிப் பிறிதில்லை யென்பது உணரத் தகும். வெளிப்படையாக அப்பொருள் விளங்குவது இல்லை. தன்னிழப்பிற்குத் துணிந்து, ஆழமான கடலுள் ஆழ்ந்து முத்தெடுப்பார் போல்வது அப்பொருளுணர் நிலை. அதை, 'ஆரணத்து உள் பொருளே' என்பதில் அறிவித்தார்.

"பத்து ஆள் சுமை ஒரு வண்டிப் பாரம். நானூறு வண்டிச் சுமை ஒரு சூல் வண்டிப் பாரம். சூல் வண்டி ஆயிரம் கொண்ட நூல்களை ஒரு ஜென்மத்தில் ஒருவன் அதிதீவிர ஜீவ முயற்சியால் படிக்கச் சிறிய உபாசனை சக்தியால் முடியும். அப்படிப் பட்டவன் ஆயிரம் ஜென்மம் எடுத்துப் படிக்கும் கலையறிவை, ஒருவன் அருள் முன்னிடமாகச் சுத்த சிவ நோக்கத்தால் அறியத் தொடங்கினால், ஒரு கணத்தில் படித்துக் கொள்ளலாம். இது சத்தியம்" என்பது வள்ளலாரது வசனப் பகுதி.

இக்கல்வி, நேர் நடையில் கற்பது. இங்ஙனம் கற்றவர்கள், தன் அனுபவத்தை வாய் திறந்து கூற வருபொழுது, அவர்களது வாயெலாம் தித்திக்கும்; தெளிந்து எண்ணும் மனமெலாம் தித்திக்கும். அங்ஙனம் கரும்பாகி அவர்களில் கலக்கின்ற பெருமானை, 'இனிய சுவைக் கரும்பே' என்கிறார். இந்நிலைக்கு மாறானார் கற்றதெல்லாம், வெறும் சொல்லாட்டம், பல்லாட்டம், மல்லாட்டம். "காதி மோதி வாதாடு நூல் கற்றிடுவோர்" என்று திருப்புகழ் அவர்களைத் தெரிவிக்கின்றது.

நேர் முகமாகி நினைவார் நிறைவேற்றுதலின், 'கற்பகமே' என்றார். "கற்பகமே யானுன்னை விடுவேனல்லேன்; கனகமா மணிநிறத்தெங் கடவுளானே" என்பது தமிழ்மறை.

நீளும் கற்பகமாகி நிழல் அளிக்கும் பெருமான், அதன் கனியாகி ஆன்மப் பசியை அகற்றுகின்றான் ஆதலின், 'கற்பகத்தின் கனியே' என்று வாயூறப் பாடும் இவ்வழி முறையை, உணர்ந்ததும் அனுபூதிமான்கள் உள்முகம் ஆவர்.

எங்கும் ஆனது மெய்ம்மையின் முழுமை. உள்ளம் கொண்டு உணர்பொழுது, அது பெருகிய உண்மை யென்னும் பெயர்பெறும். உணர்ந்ததை உள்ளவாறு ஓதும் பொழுது, வளரும் அதன் பெயர் வாய்மை. வாய்மை முழுமையை வழுவார் நாவில், திருவருள் செல்வம் திரள்கிறது. அதுவே ஜோதிமயமான திரு. அந்தத் திருவே சிவம்.

'திருவருட் சீர் ஜோதியே' எனும் பகுதியை ஓதும் போதே புல்லரிக்கிறது உடல்; புளக்கிறது மனம்.

இடகலை பிங்கலைகள் முதுகந் தண்டின் இருபுறமும் பின்னிச் செல்ல, சுழுமுனை நாடி வழியாக வித்தகப் பரவெளி விளங்கும். அந்தச் சிதாகாய நடுவுள் சுடர்கிறது சுடர். அச்சுடருள் செழுஞ்ஜோதி சுழிக்கிறது. அந்த ஒளியுள் தெளிவாக விளங்குகிறது தெய்வம். 'சுடரே! ஒளியே! ஒளிக்குள் நிறைந்த தேவே' எனும் பகுதியை ஓதும்போதே இன்ப அலைமோதல் எழுகிறதே!

"இரவுபகல் - சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே" என்று அபிராம பட்டரும், "ஜோதியே! சுடரே! சூழொளி விளக்கே" எனத் திருவாசகமும், "வெளியில் வெளியில் வெளியன் வெளியில், ஒளியில் ஒளியில் ஒளியன்" எனும் சித்தாந்தச் செய்திகளும் இங்குச் சிந்திக்கத் தக்கன.

**தேசுவிர்த் திருகளகற்றி என்றும் ஓங்கித்**
**திகழ்கின்ற செழுங்கதிரே செறிந்த வாழ்க்கை**
**மாசுவிரித் திடுமனத்தில் பயிரைத் தெய்வ**
**மணிவிளக்கே ஆநந்த வாழ்வே எங்கும்**
**காசுவிரித் திடுமொளிபோல் கலந்து நின்ற**
**காரணமே சாந்தமெனக் கருதா நின்ற**
**தூசுவிரித் துடுக்கின்றோர் தம்மை நீங்கார்**
**சுகமயமே அருட்கருணை துலங்கும் தேவே.**

(ப-ரை) தேசு விரித்து இருள் அகற்றி என்றும் ஓங்கி திகழ்கின்ற செழும் கதிரே - ஒளி பரப்பி இருளை ஒழித்து என்றும் உயர்ந்து எழுகின்ற செழும் கிரண (ஞான) சூரியனே; செறிந்த வாழ்க்கை மாசு விரித்திடும் மனத்தில் பயிலா தெய்வ மணி விளக்கே - (மாயம்) அடர்ந்த வாழ்க்கையில் களங்கக் கடை விரிக்கும் மனத்தில் பழகாத தெய்வ மாணிக்கத் தீபமே; ஆநந்த வாழ்வே - (அருள்) இன்ப வாழ்வுமயம் ஆனவனே; எங்கும் காசு விரித்திடும் ஒளிபோல் கலந்து நின்ற காரணமே - பொன் பரப்பும் புகழ் போல, எந்த இடத்திலும் (நிமித்த) காரணமாகக் கலந்து நிர்பவனே; சாந்தம் என கருதா நின்ற தூசு விரித்து உடுக்கின்றோர் தம்மை நீங்கா சுக மயமே - அமைதியென அறியப் பெறுகின்ற ஆடையை விரித்து உடுக்கும் ஞானிகளே அகலாத இன்ப மயமாக இருப்பவனே; அருள் கருணை துலங்கும் தேவே - அருளாகிய கருணை பிரகாசிக்கும் ஜோதி மயமான தெய்வமே, (எ-று)

(வி-ரை) எங்கும் பரவுகிறது இருள். அஃறிணையும் உயர்திணையும் அலமருகின்றன. காலத்தில் கீழ்க் கடலில் கதிரவன் உதிக்கிறான். இருளாட்சி புறங்காண, தன் ஆட்சியை ஞாயிறு தாபிக்கிறது. இது அண்ட நியாயம்.

கல்வியால், பெற்ற கேள்வியால், சிறந்த ஆன்மா சிவத்தைச் சிறிது சிறிதாக சிந்திக்கின்றது. அத் தகுதி கண்டு, அருள் ஒளி சிறிது சிறிதாகச் சிலிர்க்கிறது. அதன் ஆற்றல் தாங்கல் ஆற்றாது, ஆணவ இருளும் சிறிது சிறிதாக அடங்குகின்றது. ஆணவ ஆட்சி அடங்கிய பின், தாணுவின் ஆட்சி தழைக்கிறது. இது பிண்ட நுட்பம். 'தேசு

விரித்து இருளகற்றி என்றும் ஓங்கித் திகழ்கின்ற செழுங்கதிரே' எனும் இக்குறிப்பைச் சாதகர்கள் காண்பரேல், உண்மையே உண்மையம்மா என்று உவகை யுறுவர்.

தானும் வாழ்ந்து, பிறரையும் வாழ வைப்பதுதான் வாழ்க்கைத் தத்துவம். இதுவே அறவாழ்க்கை, அருள் வாழ்க்கை என்று அறியப் பெறும். சதி செய்யும் பாவத்தின் சார்பால், இல்லதை உள்ளதென ஏமாந்து, நரித்தந்திரம் பல கொண்டு நலிகிறது மனம். புனித இயற்கையைப் புறக்கணித்தமையின், வழுக்கி விடுகிறது வாழ்க்கை. அழிவிற்கான செயல்கள் அகன்ற மனத்தில், மாணிக்கத் தீபமாய்த் தங்கும் அந்த மாதேவன். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றார் திருவள்ளுவர். தெய்வமணி விளக்கு தங்கிய நெஞ்சினரை, தெய்வத்துள் வைத்துத்தான் தரிசித்தல் வேண்டும்.

ஆநந்தமே குகப்பிரமம்; சுகவாழ்வின் சொரூபமே சிவம். அதைச் சார்ந்தார் துன்பமே சாராதார்; இன்ப மயமாகவே இருப்பர். அந்த அருமை யறிந்து, 'ஆநந்த வாழ்வே' என்று விநயம் காட்டி விளித்தார்.

பொன்னிற்கு எங்கும் புகழுண்டு; அதுபோல் தவநிலை வினைநிலைக்குத் தக்கபடி, காணும் எவரிலும் எதனிலும் கலந்து இருந்து, அவர்களை அவைகளைக் காரியப் படுத்தக் காரணம் ஆனவன் கடவுளர் பெருமான். காரியம் கண்கட்குத் தெரிவது; காரணம் கருத்திற்குப் புரிவது; அதுபோல், ஏறிய மதிப்பு எதிர் தெரிகிறது. அதை இயக்கி வைக்கும் காரண அருளையும், புனித உணர்வு ஓரளவு புரிந்து கொள்கின்றது. 'எங்கும் காசு விரித்திடும் ஒளிபோல் கலந்து நின்ற காரணமே' என்பதில், ஆஹா! எவ்வளவு நுட்பம் அடங்கியுளது!

கன்ம அளவான காய உணர்வை, அணு அணு ஆக ஆகாயத்தில் ஆக்கிய ஞானமேனியர் ஞானியர். கண்ணைப் பெயர்த்த கண்ணப்பர்க்கு, நேர்தல் தோன்றில. சீராளனை நிவேதித்த பெற்றோர்க்குச், சிந்தை அதிர்ந்தில. காரணம் யாது? அவர்கள் உணர்வு அவர்கள் காயத்தில் இல்லை. "அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ?" என்று சிந்திக்கிறது தெய்வச் சேக்கிழார் திருவுள்ளம். சீவ கரணம் சிவகரணமாக, சீவ ஞானம் சிவஞானமாகச் சிறந்த அவர்கள் திருமேனி சிவமேனி. அவர்கள் உடுத்துவது சிவஞான ஆடை. திசைகளை ஆடையாக உடைய சிவபிரான் திகம்பரன் எனப் பெறுவன்; அதுபோல் சாந்த பதப் போர்வை சார்ந்தவர்கள் சாதுக்கள். அவர்களது திருவுளத்தில் பரன் ஆநந்த மேனியனாக அமர்ந்துளன். இவ்வுண்மையை, 'சாந்தம் எனக் கருதா நின்ற தூசு விரித்து உடுக்கின்றோர் தம்மை நீங்காச் சுகமயமே" எனும் பகுதியை, எண்ணும் போதெல்லாம் இன்பம் பிறக்கும் திண்ணம் இது. (தூசு - ஆடை) இந்த அருமையை அறிந்தே அடியவர் ஆடையைத் துவைத்து, அதன் பெருமையை அகில வுலகிற்கும் அறிவித்த ஒரு அடியர் வரலாற்றை, வீர சைவ புராணமும் பெரிய புராணமும் விரித்துரைத்துள. (23)

**கோவேஎண் குணக்குன்றே குன்றா ஞானக்**
**கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்த மோனக்**
**காவேமெய் அறிவின்ப மயமே என்றன்**
**கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத்**
**தேவேஅத் தேவுக்கும் தெளிய ஒண்ணாத்**
**தெய்வமே வாடாமல் திகழ்சிற் போதப்**
**பூவேஅப் பூவிலுறு மணமே எங்கும்**
**பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தேவே.**

(ப-ரை) கோவே - பரம பதியே; எண் குணக்குன்றே - எட்டுக் குணங்களை யுடைய மலையே; குன்றா ஞானக் கொழும் தேனே - தளராத ஞானமாகிய வளமுறு தேனாக வாய்த்தவனே; செழும் பாகே - வெல்லப் பாகாய்ச் செழித்து விளங்குபவனே; குளிர்ந்த மோனக் காவே - குளிர்ச்சி பொருந்திய மௌனம் ஆகிய கற்பகச் சோலையே; மெய் அறிவு இன்ப மயமே - உண்மை ஞான இன்ப மயமாக உள்ளவனே; என்றன் கண்ணே --, முக்கண் கொண்ட கரும்பே - மூன்று கண்களை யுடைய கரும்பே; வானத் தேவே - ஆகாயத்தின் அதிபதியே; அத் தேவுக்கும் தெளிய ஒண்ணா தெய்வமே - அந்த மூர்த்தியாலும் தெளிவாக அறிய இயலாத பெருமானே; வாடாமல் திகழ் சித் போதப் பூவே - வாட்டம் அடையாமல் பிரகாசிக்கின்ற (மாபெரும்) ஞானத் தெளிவான மலரே; அப்பூவில் உறு மணமே - அம் மலரில் உள்ள மணமே; எங்கும் பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தேவே - எல்லா இடத்தினும் நிறைவில் நிறைவாகி (ப் பரம) திருவருளைப் பாலிக்கும் அதி தூய்மை யுள்ள ஆண்டவனே, (எ-று)

(வி-ரை) கோ - ஓரெழுத் தொருமொழி; தலையாயான் என்பது பொருள்; மாற்று, எதனையும் கோவைப்படுத்துபவன் எனினுமாம். (கோவைப் படுத்துதல் - ஒழுங்கு செய்தல்)

"பவமின்மை, இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை,
உவமை யின்மை, ஒருவினை யின்மை,
குறைவில் அறிவுடைமை, கோத்திரம் இன்மையென்று,
இறைவன் இடத்தில் எண்குணம் இவையே."

என வரும் பிங்கலத்தை, இறைவன் எண்குணப் பெயர்களை முறையே இயம்பியுளது. ஆன்ம முக்குணங்கட்கு அயலான அமலன், இயல்பான எண்குணம் எய்தியுளன். குன்று - மலை; குவிந்து உயர்ந்து நிமிர்ந்து நிற்பது என்னும் குறிப்புப் பெயர் இது. நிலத்தில் உள்ள மலைகள் அனைத்தும், நிமிர்ந்து கல் மயமாக நிற்கின்றன. வேறுபாடு அவைகளில் இருந்து விளங்க, 'எண் குணக் குன்றே' என்பதில், உருவக அணி ஒளி மிகுந்துளது. ஒவ்வொரு குணமும் குன்றுபோல் உயர்ந்து குலவுகின்றன என்பது குறிப்பு.

காலையில் ஒருவகை அறிவு; பகலில் ஒரு வகை; மாலையில் அந்த அறிவு மங்கும் அனுபவம் கண்டுளம். இறை ஞானம் என்றும் ஒருபடித்தாக இருத்தலின், 'குன்றாத ஞானம்' என்றார்.

மலைத்தேன் எப்போதும் மதிப்பிற்கு உரியது. குன்றானான்; குன்றில் குன்றா ஞானத் தேன் ஆயினான்; தேன் உடல்நோய் தவிர்த்து உரத்தை யளிக்கும்; குன்றாத ஞானக் கொழுமையை உதவும் இத் தெய்வத் தேன் என்றபடி. "சுருதிச் சுரும்பு புறஞ்சூழ்ந்து சூழறத், தெய்வ மருதிற் சிறந்த பெருந்தேன்" என்று, இத் தேனைப் பாராட்டுகின்றார் பரஞ்சோதியார்.

பாகம் செய்தது பாகு; பக்குவப் படுத்தியது எனினுமாம். சாதகரில் அந்த சால்பை அளித்தலின்; 'செழும் பாகே' என்றார். இதைச் சொல்லுருவில் சொல்லிச் சுவைக்க நினைந்து,

"தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் அமுதே
என் ..............................................அலங்கல் அணிந்தருளே"

என்று பாடி, அருள் விளக்க மாலையில் பரவியுளர் அடிகளார்.

பிறந்து பிறந்து, வாழ்க்கையில் உழன்று உழன்று கொதிப்பேறிய ஆன்மாக்கள், குளிர்ச்சியுற மோனம் ஒன்றையே முன்னுவர். மோன நெறியில் உணர்வு முன்னேறும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி; எனும் தண்மையும் நாதமும் ஆன்மாவைத் தழுவும். இதன்வழி ஆறாத பிறவித் தாபம் அகலும்; அந்த அருமையை, 'குளிர்ந்த மோனக் காவே' என்பதில் குறிப்பிட்டார்.

பொய்யறிவால் துன்பில் புழுங்கும் உயிர்களைப் புரக்கும் மெய்யறிவு இன்பமயம் எம்மான் எனும் பகுதியை, எண்ணும் போதே இன்பம் பிறக்கும்.

'என்றன் கண்ணே' என்பது கொஞ்சும் நடை. மற்று "காணும் கண்ணில் கலந்த கண்ணே" என்று கருதப் பெறுபவன் பரன். முன் வினைக்குத் தக்கபடி, புறக்கண்ணாகிப் புறவுலகைக் காட்டுகிறான்; ஆன்ம அமைதிக்குத் தக்கபடி, அசுக்கண்ணாகி அருளின் நுட்பங்களை அறியச் செய்கின்றான் ஆதலின், 'என் கண்ணே' என்று அருமை பொருந்த அழைக்கின்றர் எனினுமாம்.

செங்கதிரும், வெண்கதிரும், கனலுமான கண்களாயினான்; அண்டத்தில் இங்ஙனம் ஆகி, பிண்டத்தில் பிங்கலையில், இடகலையில், சுழுமுனையில் பரந்த அருள் நோக்கைப் பாலிக்கின்றான். உரிய இவ்வுண்மையை உணர்பொழுது, உடலுருகத் தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பே போல இருத்தலின், 'முக்கண் கொண்ட கரும்பே' என்றார்.

விண்ணில் தேவர் பலர் விளங்குகின்றனர். இறைவன் அருளொளி, அந்த இமையவரில் இருக்கிறது. ஆதலின் 'வானத் தேவே' என வழுத்தவுளன் அந்த வரதன்.

வானவர்கள் அருளொளியால் வாழ்கின்றா ரெனினும், இவ்வாழ்விற்கு மூலம் இறையருள் எனலை என்றும் அவர்கள் அறிந்திலர். ஆஹா! 'தேவுக்கும் தெளிய ஒண்ணாத் தெய்வம்' சிவம். என்ன அற்புதமான செய்தியிது!

வாடாத மலர். என்றும் ஒருபடித்தாக இருக்கும் மலர். மாபெரும் ஆதாரந்தோறும் மலரும் மலர். அதன் பெயர் 'சித் போதம்'. (சித் - ஞானம்; போதம் - போதிப்பது.)

"மூக்கே நீ முரலாய்! முதுகாடுறை செம்பவள, வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீ முரலாய்!"

என அப்பர் முகந்த அம்மலர் மணத்தை, 'அப் பூவிலுறு மணமே' என்று அனுபவிக்கிறார். ஒவ்வொரு விளியையும் உணர்பொழுது, பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தன்மை புரிதலுறும். (24)

**வானேஅவ் வானுலவும் காற்றே காற்றின்**
**வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரில்**
**தானேயும் புவியேஅப் புவியில் தங்கும்**
**தாபரமே சங்கமமே சாற்று கின்ற**
**ஊனேநல் உயிரேஉள் ஒளியே உள்ளத்**
**துணர்வேஅவ் வுணர்வுகலந் தூறு கின்ற**
**தேனேமுக் கனியேசெங் கரும்பே பாகின்**
**தீஞ்சுவையே சுவையனைத்தும் திரண்ட தேவே.**

(ப-ரை) வானே--, அவ் வான் உலவும் காற்றே - அந்த வானத்தில் உலவுகின்ற காற்றே; காற்றின் வரும் நெருப்பே - காற்றில் இருந்து தோன்றும் கனலே; நெருப்பு உறு நீர் வடிவே - நெருப்பில் இருந்து வெளிப்படும் நீரின் சொரூபமே; நீரில் தான் ஏயும் புவியே - நீரில் இருந்து பிறக்கும் மண்ணே; அப் புவியில் தங்கும் தாபரமே - அந் நிலத்தில் தங்கிய அசையாப் பொருளே; சங்கமமே - இயங்கும் பொருளே; சாற்றுகின்ற ஊனே (உலகர்) உரைக்கின்ற ஊன் மயமான உடலே; நல் உயிரே - நலமுள்ள உயிரே; உள் ஒளியே - (அவ் வுயிரின்) உள்ளிருக்கும் ஒளியே; உள்ளத்து உணர்வே - (ஒளியின்) அகத்து உள்ள ஞானமே; அவ் வுணர்வு கலந்து ஊறுகின்ற தேனே - அந்த ஞானத்தில் இணைந்து இனித்துச் சுரக்கின்ற தேனே; முக்கனியே - (வாழை மா பலா) எனும் மூன்று கனிகளின் சுவைக் சொரூபமே; செங்கரும்பே - சிவந்த கரும்பின் சாறே; பாகின் தீஞ்சுவையே - பாகின் இனிய சுவையாக இருப்பவனே; சுவை அனைத்தும் திரண்ட தேவே - சுவை முழுதும் ஒருங்குகூடிய தெய்வமே, (எ-று)

(வி-ரை) தூய பூதங்கள் முறைப்படி தோன்றின. இருதிணைகள் நிலத்தில் எழுந்தன. ஊனுடல்கள் அதன்பின் உதித்தன. உதித்தவைகளுள் உயிர்கள்; உயிர்களுள் ஒளி; ஒளியுள் உணர்வு; இங்ஙனம் உறவு உதித்த முறைவைப்பை நினைதலும், உதிப்பித்தானை உணர்தலும் ஆன பொழுது, அவ்வுணர்வு சுவைக்கும். தேனாகி,

முக்கனியாகி, கரும்பாகி, பாகின் சுவையாகி, இன்னுமுள சுவையாவும் திரண்ட தோற்றமாகிறது தெய்வம் என்று தெரிதலுறும். அந்நிலையில் ஐம்பூதங்களும், இருதிணைகளும், ஊனும் உயிரும் யாவும் இறைமயம் என்பது புரிதலுறும். யாவும் சிவமயம் என ஆயின், நான் என எனதென வாய்திறக்க வழியில்லையே. "நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னே பிழைப்பம்மா" என்றுபாடி, அகதிகளான தம்மை அமலனிடத்து அர்ப்பணித்துக் கொள்வார் ஆன்றோர். "வானத்தில் கண்ணினந்தம் வைத்து வைத்துப் பார்க்க எனக்கு, ஆனந்தம் தந்த அரசே பராபரமே" என்றார் தாயுமானார். (25)

**விண்ணேவிண் உருவேவிண் முதலே விண்ணுள்**
**வெளியேஅவ் வெளிவிளங்கு வெளியே என்றன்**
**கண்ணேகண் மணியேகள் ஒளியே கண்ணுள்**
**கலந்துநின்ற கதிரேஅக் கதிரின் வித்தே**
**தண்ணேதண் மதியேஅம் மதியில் பூத்த**
**தண்ணமுதே தண்ணமுத சார மேசொல்**
**பண்ணேபண் இசையேபண் மயமே பண்ணின்**
**பயனேமெய்த் தவர்வாழ்த்திப் பரவும் தேவே.**

(ப-ரை) விண்ணே - (அருவமான) வானம் ஆனவனே; விண் உருவே - வானத்தின் சொரூபமே; விண்முதலே - (முதன்மை அவ்) வானத்தின் முதலாளியே; விண்ணுள் வெளியே - வானத்துள் வாய்த்த பர வெளியே; அவ்வெளி விளங்கு வெளியே - அப் பர வெளியின் மிளிரும் சித் வெளியே; என்றன் கண்ணே - என்னுடைய கண்ணே; கண்மணியே - கண்ணுள் இருக்கும் (கரு) மணியே; கண் ஒளியே - கண்ணுள் ஒளியாய்க் கலந்தவனே; கண்ணுள் கலந்து இருந்த கதிரே - கண்ணிற்குள் (ஒருமைபெறக்) கலந்துள (ஞானக்) கதிரவனே; அக் கதிரின் வித்தே - அக்கிரணத்தின் முதல் ஆனவனே; தண்ணே - தண்மை மயமே; தண் மதியே - குளிர்ந்த திங்களாகக் குலவுபவனே; அம் மதியில் பூத்த தண் அமுதே - அத் திங்களில் மலர்ந்த குளிர்ந்த அமுதமே; தண் அமுத சாரமே - தண்மை அமுதத்தின் ரசமே; சொல் பண்ணே சொற்களின் பண்ணாகத் தோன்றுபவனே; பண் இசையே - (இனிய) பண்களில் இசையானவனே; பண் மயமே - (அப்) பண்ணின் மயமாப் பலிப்பவனே; பண்ணின் பயனே - பண்ணினால் விளையும் பயன் ஆனோனே; மெய்த்தவர் வாழ்த்திப் பரவும் தேவே - மெய்ம்மைத் தவத்தினர் வாழ்த்தி வழிபடுகின்ற அருள் முதலே, (எ-று)

(வி-ரை) விண்வெளி, அதன் நடுவில் பாயும் மனவெளி. மனவெளியில் அறிவு வெளி மலரும். அதன் நாப்பண்; தண்மை அமுதான சதாநந்தம். சிறந்த இந் நிலையது சிவம்.

அகண்ட வெளி, அகண்டமும் தன்னுள் அடக்கும் நிலை, அகண்ட நிலையின் ஆதி பத்தியம், அந்த நிர்வாக சூக்கும நிலை, நுண்மையுள் நுண்மையான ஞான வெளி யாவும் இறைநிலை எனலை, முதலடியில் விளக்கினார்.

கண்ணொளியும் விண்ணொளியும் கலந்தபின் தான், எதுவும் காட்சியாகும். அவ்வழி முறையில் கண்ணாகி, மணியாகி, ஒளியாகி, கதிராகி, வித்தாகிக் கலந்துளன் பரன்.

தண்மை, காட்சியில் தளிர்க்கிறது. அத் தண்மையில் மதி தழைக்கின்றது. அம்மதியில் அமுதம் திரள்கிறது. அந்தத் தண்மை அமுத சாரமே ஆயினன் தற்பரன்.

எங்குமானது விண். அதைக் காண இருப்பது கண் காண்பதால் வருவது தண். அத் தண்மையில் ஆன்மா பெறுவது அருளமுதம். அருந்திய பின் பிறப்பது பண். அப் பண்ணால் வாழ்த்து எங்கும் பல்குகின்றது. இப்படிப் பரவு பவர் மெய்த்தவர். அனுபவ பூர்வமான இச்செய்தியை, வரிசைக் கிரமமாக வைத்தபடி,

"விண்ணாதி பூதமெலாம் தன்னகத்தில்
அடக்கிவெறும் வெளியாய், ஞானக்
கண்ணாரக் கண்ட அன்பர் கண்ணூடே
ஆனந்தக் கடலாய், வேறொன்று
எண்ணாத படிக்கிரங்கித் தானாகச்
செய்தருளும் இறையே."

"விண்ணாரக் கண்ட விழிபோல் பரஞ்சோதி!
கண்ணார நின்னிறைவைக் காணவைத்தால் ஆகாதோ?"

எனவரும் தாயுமானார் பாடல்களும்,

"ஆரும் அறியாத அண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலும் கடத்திலே"

எனும் திருமந்திரமும்,

"பண்காட்டிப் படியாய தன்பத்தர்க்குத்
கண்காட்டிக் கண்ணில் நின்ற மணி ஒக்கும்"

எனும் தமிழ் மறையும் இங்கு எண்ணத் தகும்.

பண் என்பது, ஒலியின் பல பேதம். ஒலிக்குப் பண் புறம்பன்று. ஒலியெல்லாம் பண்ணுகாமையின் ஒலியும் அன்று. இங்ஙனம் ஒலியும் அன்றாய் ஒலியின் பேதமே ஆன பண், ஒலியை விட்டுத் தனித்து நில்லா என்பது, இங்கு உணரத் தகும். இதனால் பண்ணும் இசையும் பரசொரூபம் என்று படித்தபடி.

இன்ன பண் இசைத்தால் மழை பெய்யும். இன்ன பண்ணொலியில் பயிர் வளரும். இன்ன பண்ணால் நோய் தீரும். இன்ன பண்ணால் உத்தம ஜீவன் உதிக்கும் என வரையறையுளது; அந்த அருமையை, 'பண்ணின் பயனே' என்பதில் பெற வைத்தார். போலித் தவத்தர்க்கு இந்த அனுபவம் பொய்த்துப் போம். மெய்த்தவர்க்கு உள்ளங்கை

நெல்லியென கண்மும் அனுபவமாகக் காட்சியாகும். அறிந்ததும் விளைந்த ஆநந்த அதிசயத்தால், வாழ்த்திப் பரவுகின்றார் அந்த வாய்மையர் என்று வழுத்தியபடி. (26)

**மாணேயத் தவருளத்தே மலர்ந்த செந்தா**
**மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப்**
**பூணேமெய்ப் பொருளேஅற் புதமே மோனப்**
**புத்தமுதே ஆநந்தம் பொலிந்த பொற்பே**
**ஆணேபெண் உருவமே அலியே ஒன்றும்**
**அல்லாத பேரொளியே அனைத்தும் தாங்கும்**
**நூணேசிற் சுகமேஅச் சுகமேல் பொங்கும்**
**சொரூபானத் தக்கடலே சோதித் தேவே.**

(ப-ரை) மாண் நேயத்தவர் உளத்தே மலர்ந்த செந்தாமரை மலரின் வயங்குகின்ற மணியே - புனித அன்பர் உளத்தில் பூத்த செங்கமலப்பூவின் முதன்மைபெற விளங்கும் முத்தே; ஞான பூரணனே - (அவர்கள் அணியும்) ஞான அணிகலனே; மெய்ப்பொருளே - (அவர்களிடம் வைப்பாக உள்ள) மெய்ப்பொருளே; அற்புதமே - (அவர்கள் மூலம்) வெளிப்படும் அற்புதமே; மோனப் புது அமுதே - (அவர்கள் துய்க்கும்) மவுனம் ஆகிய புதிய அமுதமே; ஆநந்தம் பொலிந்த பொற்பே - (அவர்கள் இடத்தில் அமைந்த) இன்ப வனப்புடைய எழிலே; ஆணே பெண்ணே அலியே - (அவன் அவள் அது என அவர்கள் அறியும்) ஆண்பாலும் பெண்பாலும் அலிப்பாலும் ஆனவனே; ஒன்றும் அல்லாத பேர் ஒளியே - (இதுகாறும் கூறிய அவை) ஒன்றும் அல்லாத பேரொளிப் பிழம்பே; அனைத்தும் தாங்கும் தூணே - (சொற் பிரபஞ்சம் பொருட் பிரபஞ்சம்) யாவற்றையும் தாங்குகின்ற தம்பமே; சித் சுகமே - (சித் எனப் பெறும்) அறிவான இன்பமே; அச் சுகமேல் பொங்கும் சொரூப ஆநந்தக் கடலே - அந்த இன்பம் மென்மேல் பொங்கி வரும் சொரூப இன்பப் பெருங் கடலே; சோதித் தேவே - சுயஞ்ஜோதித் தெய்வமே, (எ-று)

(வி-ரை) மாண்+நேயம் - மாணேயம்; மாண் - பகுதி மாத்திரமாய் நின்றது. நேயம் என்பது நெய்ம்மை நெகிழ்வுள அன்பின் பண்பு; இது, நேசம் எனும் வடசொல் என்பதும் ஒருவகை. நேயத்தவர் - நெகிழும் அன்பினர்; இடை யிருப்பது அத்துச் சாரியை. (அத்து மரியாதை காரணமாக வருவது.) மற்று நேயத்து அவர் எனப் பிரித்து, பண்டு தொட்டுள பக்தி நெறியினர்; அகரம் - பண்டறி சுட்டு எனுனிமாம். நேயத் தவர் என நிறுத்தி, தவமும் அன்பும் தழுவினோர் எனக் கொள்ளினும் ஒக்கும்.

உள்ளம் ஒரு கூம்பிய கமலம்; நெய்ம்மை அன்பால் அது நெகிழ்ந்து மலரும். அம்மலரின் நடுவில் மணியான முத்தாய் மாதேவர் உளர். (முத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்று தாமரை. இறைவருக்கும் முத்தர் என ஒரு பெயருளது.)

"தினியான மனோசிலை மீதுன தாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ?"

எனும் அனுபூதி நூலில், கல்மனத்தில் அடிமலர் அரும்பா எனும் கருத்தும் இங்குக் கருதத் தகும்.

அருளாளர்க்கு ஞான அணிகலன் ஆகி, மெய்யர்க்கு மெய்ப் பொருளாகி, புத்தி தத்துவத்திற்குப் புலனாகாத அற்புதமாகி, உடல் பசி தவிர்க்கும் உணவுபோல் ஆன்மப் பசியகற்றும் மோன அமுதாகி சிவன் என ஆணாகி, சிவை யெனப் பெண்ணாகி, சிவம் என அலியாகி, பால்கள் யாவற்றிற்கும் அப்பாலான ஒளிப் பிழம்பாகி, துணையாகித் தாங்கும் தூணாகி ஞான சுகமாகி, சுகானுபவம் சுரக்கும் கடலாயுளது பெரொளிப் பிழம்பான பெருந்தெய்வம் எனும் இப்பாசுரக் கருத்து. அருட்பெருஞ்சோதி அகவலில் விரிவாக எடுத்து விளக்கப் பெற்றுளது; அதை வைத்து ஒப்பு நோக்கினால், தெய்வ இப்பாடலின் அருமை தெரிதலுறும். (27)

**பூதமே அவைதோன்றிப் புகுந்தொ டுங்கும்**
**புகலிடமே இடம்புரிந்த பொருளே போற்றும்**
**வேதமே வேதத்தின் விளைவே வேத**
**வியன்முடிவே அம்முடிவின் விளங்கும் கோவே**
**நாதமே நாதாந்த நடமே அந்த**
**நடத்தினையுள் நடத்துகின்ற நலமே ஞான**
**போதமே போதமெலாம் கடந்து நின்ற**
**பூரணமே யோகியருள் பொலிந்த தேவே.**

(ப-ரை) பூதமே - (ஐம்) பூதங்கள் ஆயவனே; அவை தோன்றிப் புகுந்து ஒடுங்கும் புகல் இடமே - அப் பூதங்கள் உதித்து, (உதித்த இடத்திலேயே) புகுந்து ஒடுங்குதற்கு உரிய அடைக்கலம் நிலயம் ஆனவனே; இடம் புரிந்த பொருளே - (அங்ஙனம் தோன்றி ஒடுங்கும்) இடத்தைத் தோற்றுவித்துக் கொண்ட (பரம்) பொருளே; போற்றும் வேதமே - துதிக்கும் வேத வடிவமே; வேதத்தின் விளைவே - வேதநிலப் பயிர்போல் விளைபவனே; வேத வியன் முடிவே - வேதங்களின் தேர்ந்த தீர்ப்பாகத் திகழ்பவனே; அம் முடிவின் விளங்கும் கோவே - அத் தீர்ப்பில் விளங்கும் அதிபதியே; நாதமே - நாத சொரூபமே; நாதாந்த நடமே - (ஷடாந்தத்துள் ஒன்றான) நாதாந்தத்தில் விளையும் நடனமே; அந்த நடத்தினை உள் நடத்துகின்ற நலமே - அத் திருக்கூத்தை உள்ளம் ஆகிய அம்பலத்தில் நிகழ்த்துகின்ற நன்மையனே; ஞான போதமே - ஞானம் ஆகிய தேர்ந்த தெளிவே; போதம் எலாம் கடந்து நின்ற பூரணமே - (ஆன்மத்) தெளிவு முழுதிற்கும் அப்பாற்பட்டு உள்ள நிறைவாகி எங்கும் நிகழ்பவனே; யோகியர் உள் பொலிந்த தேவே - (உள் முகமாகும்) யோகிகளின் (புனித) உள்ளத்தில் பொலிவுடன் இருக்கும் தெய்வமே, (எ-று)

(வி-ரை) மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை ஐந்தும் பிருதுவியின் கூறுகள்.

ஓடுநீர், உதிரம், சுக்கிலம், மூளை, கொழுப்பு ஐந்தும் அப்புவின் கூறுகள்.

உணவு, துயில், அச்சம், மைதுளம், சோம்பல் ஐந்தும் தேயுவின் கூறுகள்.

ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல் ஐந்தும் வாயுவின் கூறுகள்.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் ஐந்தும் ஆகாயத்தின் கூறுகள்.

பிருதுவி உரத்துத் தரிக்கும். அப்பு குளிர்ந்து பக்குவப்படுத்தும். தேயு சுட்டு ஒன்றுவிக்கும். வாயு உலவி எதையும் திரட்டும். ஆகாயம் நிரந்தரமாக இடம் தரும்.

ஐம்பூதம் சடம்; மண்ணுள் திண்மையாய், நீரிற் சுவையாய், நெருப்பில் வெப்பாய், காற்றுள் ஊக்கமாய், விண்ணில் கலப்பாய் விமலன் இருந்து இயக்கலின், அவைகள் செயல்படுகின்றன. ஊன்றி அந்நுட்பம் உணர்ந்து "பூதமே" என்றார்.

அவைகள் உதித்தது அவனிடம்; செயல்பட்டு இருந்தது இறுதியில் ஒடுங்குவதும் அவன் இடம்; உதித்து ஒடுங்கும் இடத்தை உறுவித்துக் கொண்டதும் அவனே என்பார், "புகலிடமே இடம்புரிந்த பொருளே" என்றார்.

வித் எனும் பகுதியில் இருந்து வேதம் எனும் பெயர் விளங்குகிறது. அப்பெயர், வித்தை; அஃதாவது ஞானம் எனும் பொருளது. அந்த ஞானம், தன்னையும் முதல்வனையு திருவருளால் அறியும் அறிவு. அந்த அபர ஞானமும், அமலன் அருள வருவது ஆதலின், வேதத்தை அவன் சொரூபமாக அறிவது வழக்காறு ஆதலின், 'வேதமே' என்றார்.

"வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் ற்றார்களே"

என்று திருமூலர் தெரிவித்தது போல், அவ்வேத விளைபயன் முத்திப் பேறு என்பது, இங்கு நினைவு கொளற்குரிய செய்தி.

நிலத்தில் பயிர் எழும். வேத நிலத்தில் விளையும் பயிர் விமலன். "வேதத்தை விட்ட அறமில்லை." சொற்பிரஞ்சச் செய்திகள் யாவும், வேதத்தின் விளைவுகளே. எவர் தீர்ப்பும் முடிவன்று. வேத முடிபே முடிபு. அம்முடிபின் உச்சியில் அருளாளன். என்ன அருமையான செய்தியிது!

பருமைப் பூத உடலைப் பற்றிய பொழுது பூதான்மா; அகத்தில் உள்ள வாக்குகளைப் பற்றிய பொழுது அந்தரான்மா; சூக்கும பூதங்களைப் பற்றிய பொழுது தத்துவான்மா; புருட தத்துவமாகி நின்று இன்ப துன்பங்களைத் துய்க்கும் பொழுது சீவான்மா; மந்திர மயமாய் நிற்கும் பொழுது மந்திரான்மா; அத்துவிதப் பாவனை செய்து, இந்த ஐந்து வகைப் பெயரும் அகலும் பொழுது பரமான்மா எனப் பெயர் பெறும் என்று, சர்வ ஞான உத்திர ஆகமம் பறையறைகின்றது.

ஆரம்பமுதல், ஐந்து ஆன்ம நிலையிலும் அரிய வேதங்கள் மூலம் அறிவிப்புச் செய்த அமலன், தன்னை 'அம்முடிவின் விளங்கும் 'கோ' எனலையும் குறிப்பிக்கிறான்.

ஆரம்பம் ஆவது பூதம்; அடுத்து அறிவது வேதம்; உணர உதவுவது நாதம். நாதக் கடவுள் நடம். அதை உள்ளிருந்து நடக்கச் செய்வது நலம்; அதன்பின் விளைவது போதம். போதம் முடிந்த இடத்தில் பூரண சிவம். புனித யோகிகளுள்

பொலிவாயுளது தெய்வப் பேரொளி எனும் அருமையை, உணர்பவரே உயர்ந்த ஞானிகள். (28)

**ஞாலமே ஞாலமெலாம் விளங்க வைத்த**
**நாயகமே கற்பமுதல் நவிலா நின்ற**
**காலமே காலமெலாம் கடந்த ஞானக்**
**கதியேமெய்க் கதியளிக்கும் கடவு ளேசிற்**
**கோலமே குணமேஉள் குறியே கோலம்**
**குணங்குறிகள் கடந்துநின்ற குருவே அன்பர்**
**சீலமே மாலறியா மனத்திற் கண்ட**
**செம்பொருளே உம்பர்பதம் செழிக்கும் தேவே.**

(ப-ரை) ஞாலமே - நானிலமே; ஞாலம் எல்லாம் விளங்க வைத்த நாயகமே - உலகம் முழுதும் உயர்ந்து விளங்குமாறு உருவாக்கி நடத்தும் முதல்வனே; கற்பம் முதல் நவிலா நின்ற காலமே - பிரம கற்பம் முதலாகப் பேசப் பெறுகின்ற காலத் தோற்றமே; காலம் எலாம் கடந்த ஞானக் கதியே - கால தத்துவம் அனைத்தையும் கடந்துள (நலம் மிகு) ஞான நடையே; மெய்க்கதி அளிக்கும் கடவுளே - பரகதியைப் பாலிக்கும் பரனே; சித் கோலமே - கோலம் ஞானத்தில் இருந்து கொண்டவனே; குணமே - (ஞான) குணமே; உள் குறியே - உள்குகின்ற சின்னமாக உறைபவனே; கோலம் குணம் குறிகள் கடந்து நின்ற குருவே - கோலமாகக் கொண்ட திருமேனிகளையும், குணங்களையும் சின்னங்களையும் கடந்து புறமாக இருந்த குருவானவனே; அன்பர் சீலமே - அன்பர்களது வைதிகம் ஆனவனே; மால் அறியா மனத்திற் கண்ட செம்பொருளே - மயங்கி அறியாத மனத்தால் கண்ட சிவம் எனும் பொருளே; உம்பர் பதம் செழிக்கும் தேவே - மேதகு சிவபதத்தில் செழித்து விளங்கும் (மா) தேவனே, (எ-று)

(வி-ரை) கிழங்கினின்று தோன்றிய தாமரையை, அந்தக் கிழங்கிற்கு ஆதாரமான சேற்றில் நின்று தோன்றியது எனும் பொருள் தோன்றப் பங்கயம் என்பம்; சேறு போல்வது மாயை. கிழங்கு போல்பவன் இறைவன்.

"உலகினை இறந்து நின்றது அரனுரு என்பதோரார்
உலகவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும் என்பதோரார்
உலகினுக்கு உயிருமாகி உலகுமாய் நின்றது ஓரார்"

எனும் அருணந்தி, சிவம், உலகிற்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை உணர்த்தினார்.

உலகம் அவன் உருவம்; எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்கள் அங்கங்கள்; இச்சை, கிரியை, ஞானம் எனும் மூன்று சத்திகள் கரணங்கள் ஆக விளங்கலின், 'ஞாலமே' என்றார்.

இருவினை ஒப்பு, மலரிபாகம் எய்தத் தானான உலகத்தில் தங்குமாறு, உயிர்கட்கு உடல் தந்தான்; கரணம் அளித்தான்; பொங்கி வரும் கர்மப்

புசிப்பளித்தான். பற்றற்று, வீடுபேறு பற்றும் காலம் பற்றும் வரைக்கும் ஐந்தொழில் செய்து, நடத்தி விளக்கும் நாதன் ஆயினன் ஆதலின், 'ஞாலமெலாம் விளங்க வைத்த நாயகமே' என்றார்.

கணம், நாழிகை, நாள், திங்கள், ஆண்டு, யுகம், கற்பம் எனக் கால தத்துவம் பல கோலம் காட்டும். காலம் பற்றிய செய்தியைக் கணக்கதிகாரம் பின் வருமாறு காட்டுகின்றது.

"கணம் பதினைந்து கொண்டது ஒரு காட்டை. காட்டை முப்பது சேர்ந்தால் ஒரு கலை. முப்பது கலை கொண்டது ஒரு முழுத்தம். (முழுத்தம் என்பது இரண்டு நாழிகை) முழுத்தம் முப்பது கொண்டது, இரவும் பகலும் சேர்ந்த ஒரு நாள். நாள் பதினைந்து கொண்டது ஒரு பட்சம். இரு பட்சம் கொண்டது ஒரு திங்கள். ஆறு திங்கள் கொண்டது ஒரு அயனம். அயனம் இரண்டு கொண்டது ஒரு ஆண்டு. மக்கட்கு முந்நூற்று அறுபது ஆண்டு கொண்டது. தேவர் கட்கு ஒரு ஆண்டு. பன்னிரண்டு ஆயிரம் கொண்டது ஒரு சதுர்யுகம்.

| | | | |
|---|---|---|---|
| கிருதயுகத்திற்கு மனுட ஆண்டு | - | 1728000 | |
| திரேதா யுகத்திற்கு மனுட ஆண்டு | - | 1296000 | |
| துவாபர யுகத்திற்கு மனுட ஆண்டு | - | 864000 | |
| கலி யுகத்திற்கு மனுட ஆண்டு | - | 432000 | |
| ஆக சதுர் யுகத்திற்கு | - | 4820000 | ஆண்டுகள் |

இவ்வாறு இரண்டாயிரம் சதுர்யுகம் ஆனால், பிரமனுக்கு இரவும் பகலும் கொண்ட ஒரு நாள். இந்த நாள் முப்பதாயின் மலரவனுக்கு ஒரு மாதம். இம் மாதம் பன்னிரண்டு கொண்டது ஒரு ஆண்டு. இந்த ஆண்டு நூறாயின், பிரமனுக்கு நிறை ஆயுள். இப்படி முந்நூற்றறுபது ஆண்டுகள் சென்றால் பிரமாக்களுக்குத் தலையாய ஆதிப் பிரமாவிற்குப் பிரளய காலம். இப் பிரளயம் நூறு சென்றால், ஒரு விஷ்ணு கற்பம். விஷ்ணு கற்பம் நூறு சென்றால், உரோமா ரிஷிக்குத் திருமேனியில் ஒரு ரோமம் உதிரும். இந்த உரோமசர்க்கு பத்துக் கோடி சென்றால், மீனச மகருஷிக்கு ஒரு செதிள் உதிரும். இந்த மீனசர்க்கு ஒரு கோடி சென்றால் பரத்துவாசர்க்கு ஒரு நிமிஷம். இப் பரத்துவாசர்க்கு 30 கோடி சென்றால், அது, சத்தி தலைமயிர் அவிழ்ந்து முடிக்கும் நேரம். இப்படி எழுநூற்றெண்பது கோடி சக்திகள் கூந்தலை யவிழ்த்து முடிந்தால், அது மகா சக்திக்கு ஒரு நிமிஷ நேரம்.

இப்படி எல்லாம் கால நுட்பம் பலவற்றை விரிவாகக் கணக்கதிகார நூல் விளக்குகின்றது.

இந்தக் கால தத்துவமாகி, அதை இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனுமாறு இயக்குவோனாகி, அக் கால தத்துவத்திற்கு அப்பாற்பட்ட நலமிகு ஞான நடையினனை, 'காலமே! காலமெலாம் கடந்த ஞானக் கதியே' எனும் பகுதியை எண்ணவே உடல் சிலிர்க்கிறதே!

"காலம் என்பது அயில் வேலுடைக் கடவுள் கைவசந்தனில் உள்ளது" என்பது, ஶ்ரீகுமார சுவாமியம்.

ஞானகதி ஒன்றற்குத்தான், மெய்க்கதி உதவ இயலும், அந்தக் கதியின் சொரூபமே இறை.

நிமலன், அருளால் ஒரு திருமேனியில் நிற்பன்; அத் திருவுருவிற்கு என குணமுண்டு; தியானித்தற்கான கரசரணாதிகள் உள; கன்ம வயப்பட்டது அல்ல ஆதலின், அக் கோலமும், குணமும், குறியும், அதே நேரத்தில் இலவாகும் அற்புதத்தை என்னென்றுதான் இயம்புவது?

"காலமே! காலம் ஒரு மூன்றும் காட்டும்
காரணமே! காரண காரியங்கள் இல்லாக்
கோலமே! எனை வாவா என்று கூவிக்
குறைவற நின் அருள் அருள் கொடுத்தால் குறைவோ சொல்லாய்"

"குணங்குறியற்று இன்பநிலை கூடல் என்றோ?"

என வரும் தாயுமானார் பாடல், இங்கு நினைவில் எழுந்து நிற்கிறது.

குருவாகி, அன்பர்களது ஒழுகலாற்றிற்குத் தக்கவாறு ஒழுகுபவன் ஆதலின், 'அன்பர் சீலமே' என்றார்.

மயக்கத்திற் படாத மனமாயின், அதனால் அறியப்படும், அம் மெய்ப்பொருளின் இடத்தில், மேலோர்க்கு வழங்கவுள பதங்கள் வரையறை யின்றி யுள எனும் இறுதிச் செய்தி இறும்பூது தருகிறது அல்லவா. (29)

**தத்துவமே தத்துவா தீத மேசிற்**
**சயம்புவே எங்குநிறை சாட்சி யேமெய்ச்**
**சத்துவமே சத்துவத்தின் பயனாம் இன்பம்**
**தந்தருளும் பெருவாழ்வாம் சாமி யேஎம்**
**சித்தநிலை தெளிவிக்கும் ஒளியே சற்றும்**
**தெவிட்டாத தெள்ளமுதே தேனே என்றும்**
**சுத்தநெறி திறம்பாதார் அறிவில் தோய்ந்த**
**சுகப்பொருளே மெய்ஞ்ஞானம் துலங்கும் தேவே.**

(ப-ரை) தத்துவமே - (என்றுமான) உள்பொருளே; தத்துவ அதீதமே - தத்துவங்கட்கு மேற்பட்ட தனிப்பொருளே; சித் சயம்புவே - முதன்மை ஞானத்தில் இருந்து முளைத்தவனே; எங்கும் நிறை சாட்சியே - எந்த இடத்திலும் நிறைந்த சான்றாகி நிற்பவனே; மெய் சத்துவமே - மெய்ம்மைச் சத்துவமாகி மேவுபவனே; சத்துவத்தின் பயனாம் இன்பம் தந்தருளும் பெரு வாழ்வாம் சாமியே - சத்துவ குணப் பேறான இன்பம் வழங்கும் பெரிய வாழ்வாம் திருவினனே; எம் சித்த நிலை தெளிவிக்கும் ஒளியே - எங்களது இருண்ட மனநிலையைத் தெளிவுறுத்தும் ஒளிப்

பிழம்பே; சற்றும் தெவிட்டாத தெள் அமுதே - ஒரு சிறிதும் தெவிட்டுதல் இல்லாத தெளிந்த அமுதமே; தேனே --, என்றும் சுத்த நெறி திறம்பாதார் அறிவில் தோய்ந்த சுகப் பொருளே - எந்த நாளிலும் சுத்த சன்மார்க்கத்தில் வழுவாதார் அறிவில் பதிந்த இன்ப மெய்ப்பொருளே; மெய்ஞ்ஞானம் துலங்கும் தேவே - சத்திய ஞானத்தில் மிளிரும் சால்புடைய தெய்வமே, (எ-று)

(வி-ரை) உள் பொருளான தத்துவங்களுள் உள் பொருளாகி, இயங்குமாறு அவைகளை இயக்கும் தயாமூல தத்துவன் ஆதலின், 'தத்துவமே' என்றார்.

அறிவற்ற அவைகளில் இருந்து அசைவிப்பது அன்றி, ஒட்டாது பற்றாது ஒதுங்கி யிருப்பவன் ஆதலின், 'தத்துவ அதீதமே' என்றார்.

தானே எழுந்து, தானே இருந்து, தானே அறிவூறித் தழைப்பவன் ஆதலின், 'சித் சயம்புவே' என்றார்.

இயல்பில் எச்செயலும் தனக்கு இல்லை. தன் முன் நிகழும் உயிர்களின் வேட்கை, அறிவு, செயல்களைப் பரம சாட்சியாக இருந்து பார்ப்பவன். 'அப்படி விரும்பவில்லை; அங்ஙனம் செய்யவில்லை' யென்று எவரையும் ஏய்த்து விடலாம். அவனை ஏமாற்ற எவராலும் இயலா. ஆதலின், 'எங்கும் நிறை சாட்சியே' என்றார். முறைமாறி வரும் முக்குணங்களுள், முதன்மையதான சுத்த ஞான சத்துவ முதல் ஆதலின், 'மெய்ச் சத்துவமே' என்றார்.

அருள்நெறி நிற்றல், அறியாமை யகறல், ஏத்தல் இறைஞ்சல், அருள் வாழ்விற்கு அருகர் ஆதல் என அமைவார்க்கு, அவைகளை அருளும் 'பெருவாழ்வாம் சாமியே' என விளிக்கும் அருமையை விவரிக்கும் தரத்தர், இன்றைய வேக உலகில் எவருளர்?

இருண்டு மருண்டு இருக்கும் மனத்தில், தெய்வ ஒளி பாய்ச்சித் தெளிவிப்போன் ஆதலின், 'சித்த நிலை தெளிவிக்கும் ஒளியே' என்றார்.

இருள் நிலை தவிர்த்த பின், ஊனெல்லாம், உயிரின் உணர்வெல்லாம் துய்க்கும் அமுதும் தேனும் ஆனவன் ஆதலின், 'சற்றும் தெவிட்டாத தெள்ளமுதே தேனே' என்றார்.

"உள்ளதாய், என்றும் உள்ளதாய், என்னுள்
        உள்ளதாய், என்றன் உயிருளம் உடம்புடன்
எல்லாம் இனிப்ப இயலுறு சுவையணிந்து
        எல்லாம் வல்லசித் தியற்கைய தாகி
சாகா வரமும் தனித்தபே றரிவும்
        மாகா தவிற்சிவ வல்லப சத்தியும்
..................மயக்கறத் தருந்திறல் வண்மைய தாகி
        .............நடம்திகழ் கின்றமெய்ஞ் ஞானஆர் அமுதே"

எனவரும் அருட்பெருஞ்ஜோதி அகவல், அமுதான அனுபவத்தை அறிவிக்கின்றது.

சன்மார்க்கம் ஒன்றே சுத்த நெறி என்றும் தவறாது அதனில் அழுந்தி இருந்தன ராயின், அவர்களது உணர்விற் புனித சுகப் பொருளாகப் பொலியும் மெய்ஞ்ஞானத் திருமேனி மேலோனே என்று கூவி யழைக்கும் முறை கோடி பெறும். (30)

**யோகமே யோகத்தின் பயனே யோகத்**
**தொருமுதலே யோகத்தின் ஓங்கும் தூய**
**போகமே போகத்தின் பொலிவே போகம்**
**புரிந்தருளும் புண்ணியமே புனித ஞான**
**யாகமே யாகத்தின் விளைவே யாகத்**
**திறையேஅவ் இறைபுரியும் இன்பே அன்பர்**
**மோகமே மோகமெலாம் அழித்து வீறு**
**மோனமே மோனத்தின் முளைத்த தேவே.**

(ப-ரை) யோகமே - யோகம் எனும் பெயரிலும் செயலிலும் பிணைபவனே; யோகத்தின் பயனே - யோகத்தின் பேறாக இருப்பவனே; யோகத்து ஒரு முதலே - யோகத்தின் ஒப்பற்ற முதன்மையனே; யோகத்தின் ஓங்கும் தூய போகமே - யோகத்தில் உயரும் புனித போக அனுபவமே; போகத்தின் பொலிவே - போகத்தில் ஒளிரும் பொற்பே; போகம் புரிந்தருளும் புண்ணியமே - போகத்தை மேற்கொண்டு இருக்கும் புண்ணியத்தின் சொரூபமே; புனித ஞான யாகமே - அதி தூய ஞான வேள்வியே; யாகத்தின் விளைவே - (அந்த) யாகத்தின் பயனான விளைவே; யாகத்து இறையே - வேள்வியின் தலைமையே; அவ் இறை புரியும் இன்பே - அம் முதன்மை யுதவும் ஆநந்தமே; அன்பர் மோகமே - அன்பர்கள் காமிக்கும் தோற்றமே; மோகம் எலாம் அழித்து வீறும் மோனமே - ஆசை யனைத்தையும் நாசம் ஆக்கி வீறு பெற விளங்கும் மோன சொரூபமே; மோனத்தின் முளைத்த தேவே - (அம்) மோன நிலத்தில் வெளிப்பட்டு அருளும் முதன்மைத் தெய்வமே, (எ-று)

(வி-ரை) பிறந்து வளர்ந்த இடத்திலிருந்து சதிபதிகள் மணவறையில் சந்திப்பதுபோல், உயிரும் இறையும் உறவாட ஒன்றுதல் யோக நெறி, (யுக் - சேர்தல்) காற்று அறியாத தீபம் போல் கரணம் அடங்கி, கதிநெறி அதனில் காணலுறும். தன்னறிவால் செய்யும் சரியை கிரியைகள், இதனில் தளர்ந்து விடும். ஒருமுகமாக்கும் சிவராஜ யோக இச் சாதனையில், கணபதி, பிரம்மா, நெடுமால், உருத்திர, மகேச, சதாசிவமாகித் தனிப்பெருஞ்ஜோதி தரிசனமாகும். இந்த யோக சொரூபம் இறைமயம் ஆதலின், 'யோகமே' என்றார். அணிமா, இலகிமா, கரிமா, மகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எண்வகைச் சித்திகள் இதன் வழியே இலேசின் எய்தலின், 'யோகத்தின் பயனே' என்றார்.

பாராதே என்னைப்பார்! ஏந்தாமல் நினைவில் எம்மை ஏந்திக் கொள்! எண்ணாமல் எண்ணியிரு! இது போதும் என்று, கல்லால் நிழலின் வீராசனத்தில் வீற்றிருந்து, சின்முத்திரை காட்டிச் சொல்லாமல் நுட்பம் சொல்கின்றார் இறைவர்; இவரே முதன்மை நெறியுணர்த்தும் முதல்வர் ஆதலின், 'யோகத்து ஒரு முதலே' என விளித்தார்.

கண்ணும் மனமும் இகத்தில் பதித்தால், காயம் போகத்தைக் காமிக்கும். பகரும் அந்த இரண்டும் பரத்தில் பதிந்தால், ஆன்மா சிவபோகத்தை அனுபவிக்கும், "புணர்ப்பது அன்று இது என்ற போது புங்கமான போகமே" என்பது இது குறித்த திருவாசகம். "யோகத்தின் ஓங்கும் தூய போகமே" எனும் விளியில், இதனை விளக்கினார்.

போகம் பலவகை. அந்த இக போகத்தில் எழில் அழியும். தளர்வு விளையும். தடுமாற்றம் நேரும். பரபோகத்தில் எழில் பெருகும். மிடுக்குளதாம். வாழ்த்தி எவரும் ஏத்தும் பொலிவு வளர்தலுறும். அஃது சிவதேஜஸ் எனும் பெயர் பெறும் ஆதலின், 'போகத்தின் பொலிவே' என்றார்.

சிவபோகம் சிவபுண்ணியத்தால் விளையும். அப்புண்ணியமே இறை திருமேனி யாதலின், 'போகம் புரிந்தருளும் புண்ணியமே' என்றார்.

இம்மை மறுமை நலன் கருதிய ஏதமான வேள்விகள் பலவுள. அவைகளை மறுத்துப் புரிவது ஞான வேள்வி. ஞான நூற்களை ஓதல், பிறரை ஓதுமாறு ஊக்குதல், அதன் நுண்மைகளைக் கூர்ந்து கேட்டல், பிறர் கேட்குமாறு தூண்டுதல், சிறக்க அவைகளைச் சிந்தித்தல், தெளிதல், நிட்டை சேர்தல் முதலியன, 'புனித ஞான யாகம்' எனப் புகலப் பெறும். வீடு பேறு விளைய, இவ்வேள்விகளை இதய உணர்வினர் ஏன்றுளர். விளைவித்த ஞான வேள்வியில் விளையும் பயனும் அவன்; அதன் அதியனும் அவனே என்பார், 'யாகத்தின் விளைவே, யாகத்து இறையே' என்றார். அவ்வேள்வியால் உளதாகும் இன்பமும் தானே ஆனவன் என்றமை, நீளச் சிந்தித்து நினைக்கத் தகும்.

"சிவமான ஞானம் தெளியஒண் சித்தி
சிவமான ஞானம் தெளியஒண் முத்தி
சிவமான ஞானம் சிவாநந்தம் நல்குமே"

எனும் திருமூலர் இங்கு எண்ணத் தக்கவர்.

நாதாந்தத்திற்கும் போதாந்ததிற்கும் நடுவில் இருப்பது அகப்பொருள் செய்தி. இரும்பைக் காந்தம் ஈர்க்கும். ஈர்க்கப்பட்ட இரும்பு, உரிய காந்தத்தில் ஒன்றும். இரண்டில் விரைந்தது எது? எவர் அறிய இயலும்? இந்த விளைவே போல்வது இருகிற போகம். அன்பர் மோகிக்க உரியவன் முதல்வன். அப்படியே அன்பரில் அத்தனும் ஆதரம் கொண்டுளன், இந்த இருதிறஒ பொருளும் இணைய, 'அன்பர் மோகமே' என்றார்.

எந்த வேட்கையும் இயல்பில் இல்லாதபடி வாளா மோனம் வாய்த்த முதல்வனை, 'வீறு மோனமே' என்றார். (வீறு - பிறிதொன்றற்கு இல்லாச் சிறப்பு)

மனத்தின் பண்பு மானம்; மானப் பண்பு மோனம். மோனத்தில் முளைக்கும் ஜோதி. 'மௌனத்தின் முளைத்த தேவே' எனும் இந்த அருமை மறக்க முடிவது இல்லையே.

**காட்சியே காண்பதுவே ஞேய மேஉள்**
**கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே ஓங்கும்**
**மாட்சியே உண்மையறி வின்ப மென்ன**
**வயங்குகின்ற வாழ்வேமா மவுனக் காணி**
**ஆட்சியே ஆட்சிசெயும் அரசே சுத்த**
**அறிவேமெய் அன்பேதெள் ளமுதே நல்ல**
**சூட்சியே சூட்சியெலாம் கடந்து நின்ற**
**துரியமே துரியமுடிச் சோதித் தேவே.**

(ப-ரை) காட்சியே - அறிவே; காண்பதுவே - (அறிவால்) அறியும் ஆன்மாவே; ஞேயமே - (ஆன்மாவால்) அறியப்படு பொருளே; உள் கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே - உள்ளக்கண் உடையவர்களின் (புறக்) கண்களில் நிறைந்த களிப்பாய் நிகழ்பவனே; ஓங்கும் மாட்சியே - உயர்ந்த மாண்பை உடையவனே; உண்மை அறிவு இன்பம் என்ன வயங்குகின்ற வாழ்வே - மெய்ஞ்ஞான ஆநந்தம் எனுமாறு விளங்குகின்ற வாழ்வின் மயமே; மர மவுனக் காணி ஆட்சியே - கம்பீரமான மவுன வரம்பைக் கையாள் பவனே; ஆட்சி செய்யும் அரசே - (அம் மவுன ராஜாங்க) ஆளுதல் செய்யும் மன்னவனே; சுத்த அறிவே - (அந்த ஆட்சிக்கு ஏற்ற) தூய அறிவு மயனே; மெய் அன்பே--, தெள் அமுதே - தெளிந்த அமுதாய்த் தித்திப்பவனே; நல்ல சூட்சியே - நலம் சிறந்த தந்திரமே; சூட்சி எலாம் கடந்து நின்ற துரியமே - தந்திரங்கள் அனைத்தையும் தாண்டி யிருக்கின்ற துரியப் பொருளே; துரிய முடி சோதித் தேவே - துரிய அதீத அருட்பெருஞ்சோதி ஆண்டவனே, (எ-று)

(வி-ரை) காண்பான் சக்தி குறைத்து அறிபவன் ஆகிய ஆன்மா, சிறந்த வியாபகமான சிவஞானத்தால் அறியப் படுபொருளான ஆநந்த வடிவ இறைவனே யறிந்து, வேற்றுமை யகன்று, அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறை பணி நிற்றலை, இம்மூன்றும் நினைவுறுத்தும். இதன்படி, காட்சி அவன், காண்பானும் அவன், காணப் படுபொருளும் அவனே என்பார். 'காட்சியே காண்பதுவே ஞேயமே' என்றார். புறக்கண்ணர் குறை நோக்கினர்; அகக்கண்ணர் நிறை நோக்கினர்; நிறைநோக்கினர்க்கும் கண்களிப்பாக நிற்பவனே என்பார், 'உன் கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே' என்றார். அறிவு நூற்கட்கு எட்டாமல், ஆன்றோர் அறிவிற்கும் கிட்டாமல் ஓங்கி வளர்ந்து உயர்ந்தவனாதலின், 'ஓங்கும் மாட்சியே' என்றார்.

உள்கும் தன்மையது உண்மை; உள்ளபடி அறியும் தன்மையது அறிவு; இரண்டும் இயையப் பிறப்பது இன்பம்; இம் மூன்றன் மயம் ஆயினானை, 'உண்மை யறிவு இன்பம் என்ன வயங்குகின்ற வாழ்வே' என்றார்.

நினைப்பு மறப்பு இல்லாதது மோனநிலை. அதுவே 'மாமவுனக் காணி' (காணி - வரம்பு கட்டிய எல்லை) அதனை ஆளும் அதிபன் நீ என்பார், 'ஆட்சிசெயும் அரசே' என்றார்.

மாயையால் வருவது மருள்; அஃது அல்லாதது அருள். அந்த அருள்ஞான மேனியனை, 'சுத்த அறிவே' என்றார்.

அருளிற்குத் தாய் அன்பு. அந்த அன்பே சொரூபம் ஆயினானை, 'மெய் அன்பே' என்று விளித்தார்.

அரணம் தருவது அருளமுதம்; அஃதே இறைவன் திருமேனி என அறிந்து, 'தெள் அமுதே' என்றார்.

களையான தத்துவங்களைக் களைத்து, காணாது காண நின்ற காட்சியனை, 'நல்ல சூழ்ச்சியே' என்றார்.

ஆயும் நூலறிவால் அயர்ந்து, நான் கெட்டுத் தானான நல்லோர் முன் உள்ளவன் ஆதலின், 'சூழ்ச்சி எலாம் கடந்து நின்ற துரியமே' என்றார். சாக்கிர சொப்பன சுழுத்தி யெனும் மூன்றும் கடந்த நான்காவது துரிய நிலை.

அத்துரிய உச்சி, துரிய அதீதம் எனப் பெறும்; அந்த அதீதத்தில் அருட்பெருஞ்ஜோதி உளது; ஆழ்ந்து இந் நிலையை அனுபவிக்கும் வள்ளலார், 'துரிய முடிச் சோதித் தேவே' என்று உள்புல நுட்பம் உரைப்பார் ஆயினார். (32)

**மறைமுடிக்குப் பொருத்தமுறு மணியே ஞான**
**வாரிதியே அன்பர்கள்தம் மனத்தே நின்ற**
**குறைமுடிக்கும் குணக்குன்றே குன்றா மோனக்**
**கோமளமே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப்**
**பிறைமுடிக்கும் பெருமானே துளவ மாலைப்**
**பெம்மானே செங்கமலப் பிரானே இந்த**
**இறைமுடிக்கும் மூவர்கட்கும் மேலாய் நின்ற**
**இறையேஇவ் வுருவமின்றி இருந்த தேவே.**

(ப-ரை) மறை முடிக்கு பொருத்தம் உறு மணியே - (புனித) வேத சிரத்திற்குப் பொருத்தமுற்ற மாணிக்கமே; ஞான வாரிதியே - (கம்பீரமான) அறிவுக் கடலே; அன்பர்களது மனத்தே நின்ற குறை முடிக்கும் குணக்குன்றே - அன்பர்களுடைய மனத்தில் இருந்த குறைகளை நிறைவு செய்யும் குணமலையே; குன்றா மோனக் கோமளமே - குன்றுதல் இல்லாத (பயனான) மவுனப் பசுமையே; தூய சிவக் கொழுந்தே - தூய்மையை யுடைய என்றும் சிவமான இளமையே; வெள்ளை பிறை முடிக்கும் பெருமானே - வெண்கிரண இளம்பிறை சூடும் பெருமையோனே; துளவ மாலை பெம்மானே - துளசி மாலை யணியும் (திருமாலாம்) பெருமானே; செங்கமலப் பிரானே - செந்தாமரை மேல் பிரியாது இருக்கும் நான்முகனே; இந்த இறைமுடிக்கும் மூவர்கட்கும் மேலாய் நின்ற இறையே - இந்த இறைமையை நிறைவேற்றும் மும்மூர்த்திகட்கும் மேலாகி இருக்கும் மெய்ப்பொருளே; இவ் உருவும் இன்றி இருந்த தேவே - இத் திருமேனியும் இல்லாது இருந்த திருவருட்ஜோதியே, (எ-று)

(வி-ரை) உயர்ந்த வேத சிரம், உபநிடதம் என்று உரைக்கப் பெறும். உபநிடத்தில் உள்ள சொரூப இறையை, 'மறை முடிக்குப் பொருத்தமுறும் மணியே' என்றார்.

ஊனப் பிறவிக் கடலில் உய்ய அறியாது உயங்கும் உயிர்களை, அருளறிவுக் கடலாய் வந்து அணைப்பானை, 'ஞான வாரிதியே' என்றார்.

அன்பர் கோடி குறை கருதினாலும் முனிய அறியாமல், அவர்களது தொல்லைக் குறைகளைத் தவிர்ப்பதே தொழிலாய் நிகழ்வானை, 'அன்பர்கள் தம் மனத்தே நின்ற குணக்குன்றே' என்றார். (குணக்குன்று - உருவகம்) "குறை முடிக்கும் குணப் பெருங் குன்றமே" என்பது தாயுமானார் உபநிடதம்.

என்றும் தூய்மையும் மங்கல இளமையும் எய்தினானை, 'தூய சிவக் கொழுந்தே' என்றார். "தேவா சத்திமுற்றத் துறையும் சிவக் கொழுந்தே" என்பது திருமுறை.

படைப்பு, காப்பு, அழிப்பு நிகழ்த்த, அருளார் மூவுருவும் தானே என ஆனானை, 'பெருமானே! பெம்மானே! பிரானே!' என்று அடைபுணர்த்தி விளித்தார்.

சிவத்திற்கு அடையாளம் பிறை; திருமாற்கு அடையாளம் துளவம். பிரமனுக்கு அடையாளம் செங்கமலம். 'அரியாகிக் காப்பான், அயனாய்ப் படைப்பான், அரனாய் அழிப்பவனும் தானே" என்பது ஆதியுலா.

மூவராகி முத்தொழில் செய்து, அம் மூவர்க்கும் முதலாகி முன்னிற்கும் முன்னோனை, 'இறைமுடிக்கும் மூவர்கட்கும் மேலாய் நின்ற இறையே' என்றார். (இறை முடித்தல் - ஏற்றுக் கொண்ட பதவியின் செயலை ஒழுங்கு பெற நிர்வகித்தல்)

இந்த மூவுருவும் இல்லாமல், என்றும் நிஷ்களமாக நிறைவானை, 'இவ்வுருவும் இன்றி யிருந்த தேவே' என்றார். (33)

**கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழும்**
**குருவேசண் முகங்கொண்ட கோவே வஞ்ச**
**வாதகன்ற ஞானியர்தம் மதியில் ஊறும்**
**வானமுதே ஆநந்த மழையே மாயை**
**வேதகன்ற முத்தர்களை விழுங்கும் ஞான**
**வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சில்**
**தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த**
**செல்வமே எல்லையிலாச் சீர்மைத் தேவே.**

(ப-ரை) கோது அகன்ற யோகர் மனக் குகையில் வாழும் குருவே - குற்றம் ஒரு சிறிதும் இல்லாத யோகிகளின் மனமாகிய குகையில் வாழும் குருமூர்த்தியே; சண்முகம் கொண்ட கோவே - ஆறு திருமுகம் கொண்டுள்ள அதிபனே; வஞ்ச வாது அகன்ற ஞானியர்தம் மதியில் ஊறும் வான் அமுதே - வஞ்சகமான வாதம் அடியோடு தீர்த்த ஞானிகளுடைய அறிவில் ஊற்று எடுக்கும் தெய்வ அமுதமே; ஆநந்த மழையே - (மகத்தான) பேரின்ப மழையே; மாயை வேது அகன்ற முத்தர்களை விழுங்கும் ஞான வேழமே - மாயையின் வெதுப்புதல் தீர்ந்த ஜீவன் முக்தர்களை உட்கொள்ளும் ஞான சொரூப யானையே; மெய் இன்ப விருந்தே - மெய்ம்மை இன்ப விருந்தாக

இருப்பவனே; நெஞ்சில் தீது அகன்ற மெய் அடியர் தமக்கு வாய்த்த செல்வமே - உள்ளத்தில் ஒரு தீதும் இல்லாத அடியார்கட்கு வாய்ப்பாகக் கிடைத்த மெய்ப் பொருளே; எல்லை இலா சீர்மை தேவே - அளவே இல்லாச் சிறப்புடைய அருட்ஜோதி ஆண்டவனே.

(வி-ரை) "இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித் துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம், உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்கு, இறக்கவும் வேண்டாம், இருக்கலும் ஆமே' (இடக்கை வலக்கை - இடகலை பிங்கலை. துதிக்கை - நாவைத் துதிக்கைபோல் வளைத்து) இது கேசரி யோகம்.

"வெள்ளி உருகியே பொன்வழி ஓடாமே
கள்ளத் தட்டானார் கரியிட்டு மூடினார்
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
வள்ளியல் நாவில் அடக்கிவைத் தாரே"

(வெள்ளி - வித்து. பொன் - நாதம். கள்ளத் தட்டான் - யோகி. கரி - சாட்சியான மனம். குழல் - இலிங்கத் துளை. வள்ளியல் - அழகு பொருந்திய) இது, பர்யங்கி யோகம்.

இப்படியே சந்திர யோகம் முதலிய சாதனை பலவுள. இவைகளை முறையே மேற் கொள்பவர் 'கோதகன்ற யோகர்' எனப் பெறுவர்.

இதயக் கமலத் துளை, குகை என்று கூறப்பெறும்; "முடுக்கர் சுந்தரம் பிலங்குலை குகரம்" என்பது பிங்கலந்தை. இச்சை அறிவு செயல்களை இயக்க, உயிர்களின் உள்ளமாகிய குகைதொறும் இறைவன் உளன். அங்கிருந்தே அறிவுக்கு அறிவாய் எதையும் அறிவிப்பது ஒரு நிலை; ஒரு மல விஞ்ஞானகலர்க்கு இச்செய்தி. மும்மல உயிரை உய்விக்க, வித்தகத் திருமேனி தாங்கி வெளிப்பட்டு, உணருமாறு தன்னை உணர்த்துவதும் உண்டு. இதை, 'மனக் குகையில் வாழும் குருவே' என்றார்.

ஒவ்வொரு ஆதாரந்தோறும் ஒவ்வொரு முகமாயிருந்து உதவுதலால், 'சண்முகம் கொண்ட கோவே' என்றார். கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு மேல் கீழ் எனும் ஆறு திசை தோறும் ஆறு முகமாகி அருள்கின்றான் எனலும் ஒருவகை.

வஞ்சகமும், மத வாதமும் ஞானமிலாதது நடை. ஞானிகள், பேசா மோனம் பிறக்கத் தம் போக்கில் இருப்பர். இந்நிலையர்க்கு, அறிவில் சுரக்கும் அருளமுதம். அந்த அமுதே சிவம். அதை, 'வான் அமுதே' என்பதில் அறிவம். "சுத்த அமுத ஸ்தானங்கள் ஐந்து. (1) "அமுதம் நாக்கின் அடியில் இனிப்புள்ள ஊற்று ஜலம்போல் இருக்கும். (2) உள் நாக்குக்கு மேல் இளகின இனிப்புள்ள சர்க்கரைப் பாகுபோல் இருக்கும். (3) மூக்கு முனையில் காய்ச்சின சர்க்கரைப் பாகுபோல் இருக்கும் (4) நெற்றி நடுவில் முதிர்ந்த சர்க்கரைப் பாகுபோல் இருக்கும். (5) மகா இனிப்புள்ள மணிக்கட்டியாக இருக்கும்; இது அதிக குளிர்ச்சியாகவும் இருக்கும். இந்த ஐந்து அமுதத்தை உண்டவர்கள், என்றும் அழியாத தேகசித்தியைப் பெற்றவர்கள்" என்பது, இது குறித்த வள்ளலாரது வசனப் பகுதி.

வேகம் மிகுந்தது மனக்குதிரை; அதைக் கட்டி அடக்க வேண்டும். அதன்பின் அகங்கார மதயானை, அளவிறந்து ஆரவாரிக்கும். அதையும் பக்குவமாக அடங்கும் முறையில் அடக்க வேண்டும். அதன்பின்,

"மதிமண்ட வத்தமுதம் வாயார உண்டே
பதிமண்ட லத்தரசு பண்ண - நிதியே
நவதேயம் ஆக்கும் நடராஜ னேஎம்
சிவனே கதவைத் திற"

எனும் சிவயோக நிலை குறித்த பத்துப் பாக்களை ஊன்றி உணர்ந்து ஓதல் வேண்டும். அதன்பின் எட்டும் இரண்டுமான உபதேசம், இடம் தேடி வரும் திண்ணம். அதன்பின் அத்தன் அருளமுதத்தை அருந்துவன்.

"கட்டுக் கடங்கா மனப்பிரியைக் கட்டும்
இடத்தே கட்டுவித்(து,) என்
மட்டுக் கடங்கா ஆங்கார மதமா
அடங்க அடக்குவித்தே,
எட்டுக்(கு) இசைந்த இரண்டும் எனக்(கு)
இசைவித்(து) எல்லா இன்னமுதும்
அட்டுக் கொடுத்தே அருத்துகின்றோய், அடியேன்
உன்றன் அடைக்கலமே."

என்று மகிழ்ந்து பாடுகிறது மனம்.

உணர்விற்குத் தகுந்தபடி உணர்வு அமையும். வித்தக அமுதுண்ட விளைவில், காணா அருளனுபவம் பல காட்சியாகும். அந்நிலையை,

"கள்ளத்தை யெல்லாம் கடக்கவிட்டேன், நின் அருமை
வெள்ளத்தை யெல்லாம் மிகவுண்டேன் -- உள்ளத்தே
காணாத காட்சியெலாம் காண்கின்றேன், ஓங்குமன்ற
வாணா நினக்கடிமை வாய்த்து"

என்றெல்லாம் வாயாரப் பாடுகின்றார் வள்ளலார். அருளமுதம் பருகியவர் இறவார் பிறவார்; அதனுடன் "ஆடேடி பந்து, ஆடேடி!" என்று ஆடி மகிழ்வு பெறும் ஆன்மா, அதனை,

"நான் அந்தம் அடையா(து), எந்நாளும் உள்ளவனாகி
நடிக்கும் வண்ணம்,
ஆனந்த நடம்புரிவான், ஆநந்த அமுதளித்தான்
அந்தோ அந்தோ"

என்று அந்த ஆநந்தம் தாங்கலாற்றாது, மகிழ்ந்து பாடுகிறது மனவுணர்வு.

உரிய அருளமுதை ஊட்டியவர் யார்? அதனால் விளைந்த அனுபவம் யாது? அரிய இந்த ரகசியத்தை மற்றவர்க்கும் அறிவிக்க வேண்டும்; அனைவரும் இதை அனுபவிக்க வேண்டும் என்ற இரக்கம் கொண்ட திருவுள்ளம் எண்ணுகிறது.

"உலகுபுகழ் திருவமுதம் திருச்சிற்றம் பலத்தே
உடையவரின் றுதவினர்,நான் உண்டுகுறை தீர்ந்தேன்;
இலகுசிவ யோகவடி வாகிமகிழ் கின்றேன்;
இளைப்பறியேன், தவிப்பறியேன், இடர்செய்பசி யறியேன்
விலகலிலாத் திருவனையீர்! நீவிரெலாம் புசித்தே
விரைந்து வம்மின், அம்பலத்தே விளங்குதிருக் கூத்தின்
அலகறியாத் திறம்பாடி ஆடுதுநாம், இதுவே
அருளடையும் நெறியெனவே தாகமம்ஆர்ப் பனவே"

"ஊன உடம்பே ஒளியுடம்பாய் ஓங்கி நிற்க
ஞான அமுதெனக்கு நல்கியதே -- வானப்
பொருள்பெருஞ் ஜோதிப் பொதுவில் விளங்கும்
அருள் பெருஞ் ஜோதியது"

என்றும்,

"என்னியல் உடம்பிலே" என வரும் நடராஜபதி மாலையிலும், "நல்ல மருந்திம் மருந்து" எனும் கீர்த்தனைப் பகுதியிலும், அருட்பெருஞ்ஜோதி யகவலில் 747 வரியிலிருந்து 752 வரி வரையிலும், 1271 லிருந்து 1280 வரி வரையிலும், அருளொடு வள்ளலார் அறிவிக்கும் அருமை மறக்க முடிவது இல்லையே!

அருளமுதம் அருந்தும் நிலையில், ஓம் சிவாய என உருவேற ஏற, புனித ஆநந்த மழை பொழியும்; அதனால் ஆணவ மாதிய அழுக்குகள் அகல, ஆநந்த மயமாகும் ஆன்மா.

"ஆநந்தம் மூன்றும் அறிவிரண் டொன்றாகும்
ஆநந்தம் சிவாய அறிவார் பலரில்லை
ஆநந்த மோடும் அறியவல் லார்கட்கு
ஆநந்தக் கூத்தாய் அகப்படுத் தானே"

[ஆநந்தம் மூன்று - வியஷ்டிப் பிரணவமான அகார உகார மகாரங்கள். அறிவு இரண்டு - சத்தி, சிவம். ஆநந்தம் சிவாய - இது சத்தி சிவம் ஆன்மா எனும் மூன்றையும் குறித்தது.]

இத் திருமந்திரம் மறக்க முடியாத ஒன்று. இதை 'ஆநந்த மழையே' என்பதில் அறிவித்தார். அம் மழையே சிவம்.

வெட்டைச் சூட்டை உடலில் விளைவித்து, மாயை என்றும் உயிரை மயக்கும்; அக்கனலை, ஞானக் கனலால் தணிப்பர் ஞானிகள்; இவர்களே சீவன் முத்தர்கள். இவர்களைத் தன்மயப் படுத்திக் கொள்ளும் சிவம். இங்கு ஞானத்தை வேழமாக உருவகித்தார். "திகழும் அற்புத மவுன நிர்க்குண சிவமயத் திரு ஞான வேழமே" என்று, அருணை முனிவரும் இப்படியே உருவகித்துளர். "யானாகிய என்னை விழுங்கி வெறும், தானாய் நிலை நின்றது தற்பரமே" என்பது கந்தரனுபூதி. "பற்றறியா முத்தர்தமை யெல்லாம், வாழைப் பழம்போல விழுங்குகின்ற பரமே" எனும் பாசுரம், மகாதேவ மாலையுள் 51-ஆம் பாசுரமாக அமைந்த அற்புதத்தை, நினைக்கவே நெஞ்சம் நெகிழ்கிறதே!

காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்! அகண்டாகார சிவ, போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய், ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ, இன்புற்றிட நாம் இனி எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே!" என்றார் தாயுமானார். இவைகள், சிவானுபவத்தை விருந்து என்று சிறப்பிக்கின்றன. அந்த அனுபவத்தை, 'மெய்யின்ப விருந்தே' என்பதில் அழகாக வள்ளலார் அறிவிக்கிறார்.

ஏராளமான தீமைகள், நெஞ்சில் ஏறியிருக்கின்றன. அவைகளை அடியொடு அகற்றியவர், செய்யும் செயலெல்லாம் சிவச் செயல். அச் செயலாளர் பெறும் ஊதியம் சிவம் என்னும் செல்வம். "செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" என்பது தமிழ் மறை. 'நெஞ்சில் தீதகன்ற மெய்யடியார் தமக்கு வாய்த்த செல்வமே" என்று ஓதும் உள்ளம் நெகிழ்வு கொண்டு உருகும். 'எல்லை யிலா சீர்மைத் தேவே' என்றது, வரம்பற்ற நின்புகழ் முழுதையும் அறிந்து, வழுத்த வல்லவர் எவர் ஐயா! எனும் குறிப்பில் நின்றது. (34)

**அருளருவி வழிந்துவழிந் தொழுக ஓங்கும்**
**ஆநந்தத் தனிமலையே அமல வேதப்**
**பொருளளவு நிறைந்தவற்றின் மேலும் ஓங்கிப்**
**பொலிகின்ற பரம்பொருளே புரண மாக**
**இருளறுகிற் பிரகாச மயமாம் சுத்த**
**ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே**
**தெருவளவும் உளமுழுதும் கலந்து கொண்டு**
**தித்திக்கும் செழுந்தேனே தேவ தேவே.**

(ப-ரை) அருள் அருவி வழிந்து வழிந்து ஒழுக ஓங்கும் ஆநந்த தனிமலையே - அருளாகிய அருவி மென்மேலும் வழிந்து ஒழுகும் மாபெரும் இன்ப மலையே; அமல வேத பொருள் அளவு நிறைந்து அவற்றின் மேலும் ஓங்கி பொலிகின்ற பரம்பொருளே - புனித நான்மறை புகலும் பொருள் அளவு நிறைவாகி, அவற்றிற்கு மேலும் பொங்கிப் பொலிவு தோற்றுகின்ற மெய்ப்பொருளே; புரணம் ஆகி - பரிபூரணமாக எங்கும் பரிணமித்து; இருள் அறு சித் பிரகாச மயமால் சுத்த ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே - (ஆணவ) இருளற்ற ஞான ஒளி மயமான தூய தனிமையுள பேரம்பலத்துள் வீற்றிருக்கும் பெருவாழ்வே; தெருள் அளவும் உளம் முழுதும் கலந்து கொண்டு தித்திக்கும் செழும் தேனே - தெளிவு கொண்டு சிந்திக்குந்தோறும் இதயம்

முழுதும் கலந்து இனிக்கும் வளமான தேன் போல் பவனே; தேவ தேவே - தேவர்க்கு எல்லாம் மேலான தெய்வமே, (எ-று)

(வி-ரை) மாநிலத்தை, வேர்களால் தாங்குகிறது மலை. எண்திசை மலைகளுள் நடுவண் உளது மேருமலை. அது போல் அகில உலகையும் தாங்குதலால், இறைவனை மலையாகவும், ஆன்ம தாபம் தணித்தலின், அருளை அருவியாகவும் உருவகித்தார். பரமாகாயத்தில், ஞான மதிமண்டலம் பதிந்துளது; புனித அமுத தாரை, அதனில் இருந்து பொழிகிறது. அந்தச் சொரூப அனுபவ அருமையனை, 'அருளருவி .......... ஆனந்தத் தனிமலையே' என்றார்.

வேதம் பரமனையே விளம்பும்; பொருள் நுட்பம் அதனில் பொங்கி வழியும். அதனுள் அடங்குவனபோல் தோன்றி, மேலும் பெருகும் மெய்ப்பொருளோனை, 'அமலவேத ........... பரம்பொருளே' என்றார்.

நீடித்தது அதன் நிறைவு; இருள் என்பது அதனில் சிறிதும் இல்லை. அது அண்டபிண்ட சராசரம் முழுதுமான ஞானப் பிரகாசம்; ஒரு பூதரும் அறியா ஏகாந்தமான பெருவெளி. வளரும் அவ்வொளியுள் வாழ்வானை, 'புராணமாகி, ........ இருந்த வாழ்வே' என்றார். (புரணம் - பூரணம்)

மனம் கொண்டு உணர்பொழு தெல்லாம் மதுரிப்பானை, 'செழும் தேனே' என்று சிறப்பித்தார். நில தேவர், வான் தலத்தேவர் முதலிய எத்தகையர்க்கும் தெய்வம் ஆயினானை 'தேவ தேவே' என்று வீரிட்டுக் கூவி விளித்தபடி. (35)

**அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை**
**அறிவையெலாம் கடந்துகடத் தமல யோகர்**
**உளவையெலாங் கடந்துபதங் கடந்து மேலை**
**ஒன்றுகடந் திரண்டுகடந் துணரச் சூழ்ந்த**
**களவையெலாங் கடந்தண்ட பிண்ட மெல்லாம்**
**கடந்துநிறை வானசுகக் கடலே அன்பர்**
**வளவையெலாம் இருளகற்றும் ஒளியே மோன**
**வாழ்வேஎன் உயிர்க்குயிராய் வதியும் தேவே.**

(ப-ரை) அளவை எலாம் கடந்து - அளந்து அறியும் அளவைக்கு எல்லாம் அப்பாற்பட்டு; மனம் கடந்து - (இருந்த) மனத்திற்கும் எட்டாமல்; மற்றை அறிவை எலாம் கடந்து கடந்து - மற்றுள்ள (ஆன்ம) அறிவு அனைத்தையும் அகன்று மேற்சென்று; அமல யோகர் உளவை எலாம் கடந்து - மும்மலம் அற்ற உத்தம யோகிகள் உணர்ந்த தந்திரம் முழுதையும் தாண்டி; பதம் கடந்து - (அரிய) பதவிகள் அனைத்திற்கும் அப்பால் ஆகி; மேலை ஒன்று கடந்து - (அதற்கு) மேலுள்ள சகப்பாழிற்கு மேற்பட்டு; இரண்டு கடந்து - (சீவப்பாழ், பரப்பாழ் எனும்) இரண்டையும் விலக்கி; உணரச் சூழ்ந்த களவை எலாம் கடந்து - உணராமல் உணர்ந்த கள்ளத்தனம் அத்தனையையும் கடந்து; அண்ட பிண்டம் எல்லாம் கடந்து நிறைவான சுகக் கடலே - அண்டங்கள் பிண்டங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்டு வியாபகமான இன்பக் கடலே; அன்பர் வளவு எலாம் இருள் அகற்றும் ஒளியே - அன்பர்கள் வாழும் இடம்

அனைத்தினும் (அறியாமை) இருளை அகற்றும் ஞான ஒளியே; மோன வாழ்வே - (வாய்ப்பான) மௌன நிலையின் வாழ்வாக இருப்பவனே; என் உயிர்க்கு உயிராய் வதியும் தேவே - எனது உயிர்க்குள் உயிராகி யிருக்கும் தெய்வமே, (எ-று)

(வி-ரை) காட்சி, அநுமானம், ஆகமம், இன்மை, அருத்தாபத்தி, உவமை என அறியவுள அளவை ஆறு; அதற்குமேல் பாரிசேடம், சம்பவம், உலகவாதம், சகசம் என நான்கைக் கூட்டி, பத்து அளவை என்று படிப்பாருமுளர். அதற்கு மேலும் அறிவிப்பது உண்டு.

1. காட்சி - இந்திரியக் காட்சி, மானதக் காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக் காட்சி என நான்கு வகை.

2. அநுமானம் - தான் அறிதற் பொருட்டு அநுமானித்தல், பிறர்க்கு அறிவித்தற் பொருட்டு அநுமானித்தல் என இருவகை.

3. ஆகமம் - தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை என மூவகை

4. இன்மை ஐந்து வகை.

(அ) என்றும் இன்மை - முயற்குக் கொம்பில்லை; ஆமைக்கு மயிர் இல்லை என்பவை.

(ஆ) ஒன்றில் ஒன்று இன்மை - கடத்தில் படமும், படத்தில் கடமும் இல்லை என்பது.

(இ) இல்லத்தின் இன்மை - பெரியோர்கள் வாயில் பொய்யில்லை என்பது போல்வது.

(ஈ) உள்ளத்தின் இன்மை - படபடத்த யானையில் பக்தி கண்டிலம் என்பது.

(உ) அழிவுபாட்டு இன்மை - கடம் உடைந்த பின் அஃது இல்லை என்பது போல்வது.

5. அருத்தாபத்தி - இவ்வூரில் வள்ளல் இவன் எனில், பிறர் அங்ஙன் இலர் என்பது சொல்லாமலே விளங்கும்.

6. உவமை - திருமால் கார் முகில் போல்பவர் எனல்,

7. பாரிசேடம் - ஐவரில் இருவர் கள்வரெனில், மற்ற மூவரும் கள்வர் அல்லர் என்று சொல்லாமலே தெரியும்.

8. சம்பவம் - நூற்றின்மேல் தொண்ணூறு உளது எனல்.

9. உலகவாதம் - உலகப் பேச்சு.

10. சகஜம் - மா காய்த்தது எனில், மா மரம் காய்த்தது என அறிதல்.

11. ஐதிகம் - இம்மரத்தில் முனீஸ்வரன் உளன் என்பது.

இப் பதினொன்றையும் காட்சி, அனுமானம், ஆகமம் எனும் மூன்றில் அடக்குவது பெரும்பான்மை வழக்கம்.

எந்த அளவையில் வைத்து அளந்தாலும் எட்டாத பெருமானை, 'அளவையெலாம் கடந்து' என்றார். எண்ணங்கள் எட்டா இடத்தில் இருத்தலின், 'மனம் கடந்து' என்றார்.

ஆகமநூல் அறிவால், ஆன்ம அறிவால் அறிய முடியாத அமலனை, 'மற்றை அறிவை எலாம் கடந்து கடந்து' என்றார்.

மாசற்ற யோகிகளின் சாதனைகளில் கண்ட உளவான காட்சிகட்கு எல்லாம் அப்பாற் படுதலால், 'அமல யோகர் உளவை யெலாம் கடந்து' என்றார். எந்தப் பதவிகளின் துணை கொண்டும் எய்தற்கு அரியவன் ஆதலின், 'பதங்கடந்து' என்றார்.

உள்ளத்தில் ஒளிந்து நின்று, உரியவற்றை உணர்த்திக் கொண்டே உளன் என்பது உண்மை. எனினும் அந்த அளவில் அடங்கவில்லை அவன் நிலை ஆதலின், 'உணரச் சூழ்ந்த களவை யெலாம் கடந்து' எனப் பெற்றது. "கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோஎன்று, உள்ளத்தின் உள்ளே ஒளிந்திருந் தாளுமே" என்பது திருமந்திரம். 'தன் அருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி யெல்லாம், தழைக்குமாறு நடத்துகினும், அவைகட்கு எல்லாம் அப்பாற்பட்ட 'சுகக் கடல்' அவன் என்றார்.

அவனை நம்பினவர் அடியவர். அவர்கட்கு அணுக்கம் ஆயினான். அவர்களது அகத்தும் புறத்தும், இருக்கும் இடத்தும் அறியாமை இருளை அகற்றுகின்றான். (வளவு - இடம்) மனம் இறந்தால் மவுனம்;

"தானும் அழிந்து, தனமும் அழிந்து, நீ(டு)
ஊனும் அழிந்து, உயிரும் அழிந்(து,) உடன்
வானும் அழிந்து, மனமும் அழிந்தபின்
நானும் அழிந்தமை நான் அறியேனே"

என்று திருமந்திரம், மோனத்தில் யாவும் தோன்றா எனலை விளக்கியது.

அந்நிலையில் இன்ப வாழ்வாக இறைவன் இருத்தலின், 'மோன வாழ்வே' என்றார். ஆன்மாவே தான் இருக்கும் ஆலயம் ஆதலின், 'உயிர்க்கு உயிராய் வாழும் தேவே' என்றார். (36)

**வன்புகலத் தறியாத மனத்தோர் தங்கள்**
**மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற**
**என்புகலந் தூன்கலந்து புலன்க ளோடும்**
**இந்திரிய மவைகலந்துள் இயங்கு கின்ற**
**அன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூதம்**
**ஆன்மாவும் கலந்துகலந் தண்ணித் தூறி**
**இன்புகலந் தருள்கலந்து துளும்பிப் பொங்கி**
**எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே.**

(ப-ரை) வன்பு கலந்து அறியாத மனத்தோர் தங்கள் மனம் கலந்து - கடுமையில் உறவு கலந்து அறியா மனமுள ஞானிகளது புத்தி தத்துவத்தில் உறவு பூண்டு; மதி கலந்து - (அவர்களது புனித) அறிவில் உறவு போர்த்து; வயங்கா நின்ற என்பு கலந்து - மிக்கு விளங்கும் என்புள் நுழைந்து; ஊன் கலந்து - தசையுள் தழைத்து; புலன்களோடும் இந்திரியம் அவை கலந்து - ஐம்புலன்களுடன் (அறிகருவி - தொழிற் கருவியாகிய) பொறிகளுள் இணைந்து; உள் இயங்குகின்ற அன்பு கலந்து - அகத்தில் இயக்கம் செய்கின்ற அன்பென்னும் பண்பில் அளவளாவி; அறிவு கலந்து - அறிவுள் அமைந்து; உயிர் ஐம்பூதம் ஆன்மாவும் கலந்து கலந்து அண்ணித்து ஊறி - பிராணன், ஐந்து பூதங்கள், ஆன்மா முதலியவைகளில் உடனாகி உறவு கொண்டு இனித்து ஊற்றெடுத்து; இன்பு கலந்து - இன்பத்தில் இணைந்து; அருள் கலந்து - அருளொடு அணிந்து; துளும்பி எழும் கருணைப் பெருக்கு ஆறே - ததும்பி எழுகின்ற ஆறாகப் பெருகும் கருணையனே; இன்பத் தேவே - இன்ப வடிவான தெய்வமே, (எ-று)

(வி-ரை) அன்பர்களது ஆக்கை முழுதும் ஊடுருவிய திருவருளை, நதியாக உருவகித்தபடி, மாபெரும் கருப்பக் கிரகமாக்க, மனத்துள் புகுந்தான். புனித தீபம் ஏற்றப் புத்தியுள் நுழைந்தான். ஆக்கையைத் தன் ஆலயம் ஆக்க, என்புள் கலந்து ஊனுள் உறவாயினான். ஐம்பூத அறிவை, திருவருள் அனுபவம் ஆக்க அவைகளுள் ஆயினான். அறிவையும் தொழிலையும் தம்பரமாக்க, கருவிகளான அவைகளில் கலந்தான். புனிதம் போர்க்க, ஆன்ம அறிவில் புகுந்தான். பருமை நுண்மை உடல்கள் பளபளக்க, பஞ்ச பூதங்களில் பரிணமித்தான். சுவாச வழியில் சுகம் காட்டினான். என்றும் தெவிட்டாமல் இனிக்குமாறு பொங்கித் ததும்பிக் கருணை நதியாய்ப் பூரிக்கின்றான் என்னும் அருமையே அருமை.

"காண நில்லாய், அடியேற்கு உறவு யாருளர்? நாண நில்லேன் உனை நான் தழுவிக் கொள்ள" என்று பலகாலம் வேண்டுகின்றார் அடியார்கள். ஆதலின், கோணை இல்லாத குணமுள்ள அந்த அடியவர் மனத்துள், "ஆணியன் ஆகி அமர்ந்து நின்றானே" என்கிறார் திருமூலர். (ஆணியன் - பசுமரத்தில் ஆணிபோல் அவருள் பதிந்து நிற்கின்ற பரமன் என்பது அவரது அனுபவம்)

பிரமரந்திரத்தில் அறிவு பதிந்தவர் மேலவர். அதனால் அவர்கள் ஞான மேனியராயுளர். இதனால் உலகெலாம் தாமாக உணர்பவர் ஆயினர். இதனால் உபசாந்தம் உறவு கொள்கிறது; அந்த உண்மையை, "புந்தி வட்டத்திடைப் புக்கு

நின்றானையும் பொய் என்பனோ" என்று, புனித தமிழ் மறை புகல்வதை அறிந்துளம். அந்த அருமையை இப்பாசுரம் முழுதினும் அறிகிறோம்.

"ஊனில் நின்று உயிர்க்கின்ற வாறே"

"சுடுபொடி ஆடிக்கு -- பின்னிக் கிடந்தது
என் பேரன்பு தானே"

எனும் திருமந்திரங்கள் இங்கு எண்ணத் தக்கன. (37)

**தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்**
**தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல்வீச**
**எண்ணமுதப் பளிக்குநிலா முற்றத் தேஇன்**
**இசைவீசத் தண்பனிநீர் எடுத்து வீசப்**
**பெண்ணமுதம் அனையவர்விண் ணமுதம் ஊட்டப்**
**பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக்**
**கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்தும் இன்பம்**
**கலந்துகொளத் தருங்கருணை கடவுள் தேவே.**

(ப-ரை) தண் அமுத மதி குளிர்ந்த கிரணம் வீச - தண்மை அமுதத் திங்கள், (விளங்கும்) குளிர்ந்த ஒளிக்கற்றைகளை எப்புறமும் பரப்ப; தடம் பொழில் பூமணம் வீச - பெரிய நந்தவனங்கள் (வியன்மிகு) மலர்மணத்தை வீச; தென்றல் வீச - (விசு விசு என்று) தென்றல் (சந்தன மணம்) வீச; எண் அமுத பளிக்கு நிலா முற்றத்தே இன் இசை வீச - மதிக்கத் தக்க பளிங்கினால் இயன்ற (மேல் மாடமான) நிலா முற்றத்தில் இனிய இசை பெரிது எழ; தண் பனிநீர் எடுத்து வீச - குளிர்ந்த பன்னீரை (தெளிப்பார்) எடுத்துத் தெளிக்க; பெண் அமுதம் அனையவர் விண் அமுதம் ஊட்ட - அமுதம் போன்ற மேனியுள அணங்கினர் (உம்பர்) அமுதை (உபசரித்து) ஊட்ட; பெறுகின்ற சுகம் அனைத்தும் பிற்பட்டு ஓட - (இவைகளால்) அடைகின்ற இன்பம் யாவும் புறங்கண்டு செல்ல; கண் அமுதத்து உடம்பு உயிர் மற்று அனைத்தும் இன்பம் கலந்து கொள தரும் கருணை கடவுள் தேவே - அமுத நோக்கால் உடல், உயிர், பிற உறுப்புகள் யாவும் இன்பம் புணர்ப்பச் செய்கின்ற கருணையை யுடைய தேவதேவே, (எ-று)

(வி-ரை) எத்துணை விலாசமான இடமாயினும், அமுதூட்டும் உயர்ந்த அணங்கினராயினும், அவர்களால் பெறும் இன்பம் அற்பம்.

இறைவனை ஆன்மாவில் ஏற்றி, இரவு பகல் தோன்றாமல் தசநாதம் கேட்டு, இனித்த லயம் எய்தி, உயிருள் பரமும் பரத்துள் உயிரும் இரண்டறக் கலந்து பெறும் இன்பமே பேரின்பம். இதன்முன் மேல் சொன்ன சிற்றின்பம் சின்னத்தனம். இறைவன் அருள் நோக்கால் எய்தும் இன்பம் பேரின்பம். "மன்னர் ஆவார் உறுசுகமும், வானோர் மகிழ்ந்து பெறுசுகமும், மணிப்பைந் நாகத் தவர்சுகமும், மற்றையோர்கள் அடைசுகமும், பன்னும் இடத்தில் சிவத்தெழுந்த பரமாந்த லேசமெனப், பகர்ந்தாய் குருவாய்

எழுந்தருளிப் படிறேன் மறத்தில், குழல்கின்றேன்" என்னும் திருப்போரூர் சிதம்பர முனிவர் இங்கு நம் நினைவில் நிற்கிறார் அல்லவா. (38)

**சுழியாத அருட்கருணைப் பெருக்கே என்றும்**
**தூண்டாத மணிவிளக்கின் சோதி யேவான்**
**ஒழியாது கதிர்பரப்பும் சுடரே அன்பர்க்**
**கோவாத இன்பருளும் ஒன்றே விண்ணோர்**
**விழியாலும் மொழியாலும் மனத்தி னாலும்**
**விழைதருமெய்த் தவத்தாலும் விளம்பும் எந்த**
**வழியாலும் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த**
**மவுனவெளி யூடிருந்து வயங்கும் தேவே.**

(ப-ரை) சுழியாத அருள் கருணை பெருக்கே - சுழித்தல் இல்லாமல் (விரைந்து வரும்) அருளாகிய கருணை வெள்ளமே; என்றும் தூண்டாத மணி விளக்கின் சோதியே - எந்நாளும் தூண்டாமல் விளங்கும் மாணிக்கத் தீபப் பேரொளியே; வான் ஒழியாது கதிர் பரப்பும் சுடரே - (ஞான) வானத்தில் ஓயாது ஒளிபரப்பும் (அறிவுப்) பரிதியே; அன்பர்க்கு ஓவாது இன்பு அருளும் ஒன்றே - அடியவர்க்கு இடையறாது இன்பம் வழங்கும் ஒப்பற்ற வள்ளலே; விண்ணோர் விழியாலும் மொழியாலும் மனத்தினாலும் - தேவர்கள் நோக்காலும் வாக்காலும் உளத்தாலும்; விழைதரு மெய் தவத்தாலும் - விரும்பிப் புரியும் மெய்ம்மைத் தவத்தாலும்; விளம்பும் எந்த வழியாலும் கண்டு கொளற்கு அரிதாய் - உரைக்கப்பெறும் வேறு எந்த சாதனையாலும் கண்டற்கு அருமையதாகி; சுத்த மௌன வெளியூடு இருந்து வயங்கும் தேவே - தூய மவுன விண்ணில் இருந்து விளங்கும் தெய்வமே, (எ-று)

(வி-ரை) மருள் நோக்கு, துன்பச் சுழியில் துவள்விக்கும்; அருள் நோக்கில், கருணை வெள்ளம் அணுகி வரும். இராமநாதபுர மாவட்டத்தில் திருச்சுழி என்றே ஒரு தலமுளது. அத்தல வரலாறே மிகமிக அற்புதம் ஆனது.

பேரருள் இன்பப் பெருஞ்சுழி கொழித்து, பந்தக் கரையைப் பலபடத் தகர்ந்து, வினைகள் எனும் மரங்களை வீழ்த்தி இதய ஏரியில் நிரம்பி வழிதலின், அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டு, அடியவராம் உழவர்கள் பயனுறுகின்றனர். ஊன்றி இந்த அருமையை உணர்ந்து, 'சுழியாத அருள் கருணை பெருக்கே' என்றார்.

அவத்தை இருள் அகல, தூய மன விளக்கு துணை புரியும். அந்த ஒரு விளக்கின் துணையால், விளங்குமாறு கருவி கரண விளக்குகளை யேற்றுவர். அத் தீபங்களால், கண்ணாடிபோல் விளங்கும் கடவுள் சொரூபம்.

"உண்ணாடி உள்ளே ஒளிபெற நோக்கிடில்
கண்ணாடி போலக் கலந்திருந் தானே" என்பது திருமந்திரம்.

இந்த அரிய நுண்மையை, 'தூண்டாத மணிவிளக்கின் சோதியே' எனலில் தோற்றுவித்தார். "அறையாத மிகு பெருங் காற்று அடித்தாலும் சிறிதே, அசையாதே

அவியாதே விளங்குகின்ற ஜோதிமணி விளக்கே" என்பது திருவருட்பாவின் மற்றொரு பகுதி.

முப்பது நாழிகையுள் உதித்து, வளர்ந்து, ஆட்சி நடத்தி, சாயங் காலத்தில் மறையும் கதிரவன் போல் ஆகாமல், ஞான வானில் என்றும் அருள் சோதியாக விளங்கலின், 'வான் ஒழியாது கதிர் பரப்பும் ஒளியே' என்றார். இதை "உருத்திர ஜோதியும் உள்ளத்துள் ளாரே" என்பர் திருமூலர்.

இமையாக கண்களால் நோக்கியும், வாக்கால் இடையிடை வழுத்தியும், மனத்தால் நினைத்தும், தவம்பல செய்தும், கங்கை யாதியாம் புனல் படிந்தும் கடவுள் பெருமான் காணப் படாமைக்குக் காரணம், அவர்களது மலத்தடிப்பே. ஆதலின், 'எந்த வழியாலும் கண்டு கொளற்கு அரிதாய்' என்றார்.

இதன்படி விளையும் மோனத்தில், சதாசிவம் மனோன்மணியுடன் தரிசனம் ஆகும். அங்கே உளதாகும் நாதாந்த நல்லொளியின் ஆநந்தம் விளையும் என்று நவின்றபடி. (39)